


1924 - 1999

75 வது ஆண்டு சிறப்பு மலர்

கொ/வெள்ளவத்தை
அரசினர் தமிழ் வித்தியாலயம்
கொழும்பு 6

# சுவடு

10-06-1999

*With Best Compliments*

*From*

# MASCONS LTD.

175, Sri Sumanatissa Mawatha,
Colombo 12.

*Tel: 325561 - 3, 344672*

# 1998இன் பரிசளிப்பு விழாவும்
# 75ஆவது ஸ்தாபகர் தினமும்



**கொழும்பு வெள்ளவத்தை**
**அரசினர் தமிழ் வித்தியாலயம்**
**கொழும்பு - 06**

பிரதம அதிதி
**பேராசிரியர் சோ. சந்திரசேகரன்**
(கொழும்பு பல்கலைக் கழகம்)

கௌரவ அதிதி
**திரு. பொன் வல்லிபுரம்** J.P.
(ஓய்வு பெற்ற உதவிச் சுங்க அத்தியட்சகர்,
தர்மகர்த்தா ஸ்ரீ பத்திரகாளி
அம்மன் தேவஸ்தானம் மயூரபதி)

காலம்:
10-06-99

நேரம்:
3.30

இடம்:
**"சரஸ்வதி மண்டபம்"**
*பம்பலப்பிட்டி,*
*கொழும்பு - 04*

# நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- தேவாரம்
- பாடசாலைக் கீதம்
- ஆசியுரை - சுவாமி ஆத்மகனானந்தா
- ஆசியுரை - வண. பிதா நேமன் ஜெயச்சந்திரன்
- வரவேற்புரையும் அதிபர் அறிக்கையும்
- மாணவர்களுக்குக் காப்புறுதிப்பத்திரம் வழங்குதல்
- அபிநயப் பாடல் - ஆங்கிலம்
- பேச்சு
- குழுப் பாடல்
- ஸ்டெப் நடனம்
- ஆங்கில நாடகம் (Who is the Murderer)
- அன்ன நடனம்
- பிரதம அதிதி உரை
- பாரச்சுமைகள்" நாடகம்
- கௌரவ அதிதி உரை
- பரிசில் வழங்கல்
- நன்றி உரை
- தேசிய கீதம்



## சமர்ப்பணம்

அர்ப்பணமே வாழ்க்கையாக
ஆகிவிட்ட ஆசிரியரும்
அர்ப்பணித்து வாழ்க்கையதை
கல்வியே கண் என மாணவரும்
சேர்ந்திங்கு தலைநகரில்
சிறப்பாக இயங்கிநிற்கும்
வெள்ளவத்தை அரசினர் வித்தியாலய
பரிசளிப்பு விழாவுக்காய்
முகை திறந்து மணம் வீச
முன்வைக்கும் "சுவடு"
என்னும் புதுமலரை
கன்னித் தமிழன்னைப்
பொற் பாதக் கமலத்தில்
சமர்ப்பித்து வணங்குகின்றோம்

# பாடசாலைக் கீதம்

*வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்யாலயம்*
*வான்சுட ராமென வாழிய வே*
*வானம ளந்த புகழ்பரப் பிடும் எம்*
*அழகியற் கூடம் வாழிய வே!*

*சூழநற் கலையுடன் சுத்தமொ டொழுக்கம்*
*வாழுநன் மாணவர் வளமுடன் வாழ்க*
*ஞானவிஞ் ஞானசங் கீத நற் கலையுடன்*
*ஞானம் வியந்திட நயப்புடன் வாழி!*

*கற்பவை கசடறக் கற்றுமே நிதமும்*
*நிற்கவே அதற்குத் தகவெனும் பான்மை*
*உற்றநற் சிறுவர்கள் உவப்புடன் பயிலும்*
*நற்றமிழ்ச் சாலை நயம் பெற வாழி!*

*மும்மொழி மும்மதம் இருஇன மெனினும்*
*நம்மிலங் காபுரி மகவென ஒன்றி*
*புத்தியும் பக்தியும் வித்தையு மோங்கி*
*புனிதம் வளர்ந்திட வாழிய வாழி!*

# எமது பாடசாலை




கொ/வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயம்

# எமது அதிபர்



அதிபர் திருமதி இந்திரா இராஜரத்தினம்


## சுவாமிஜி அவர்களின்
## ஆசிச்செய்தி

கொ/வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலய பவள விழா எதிர்வரும் ஜூன் 10ம் திகதி நடைபெற உள்ளதென அறிகிறோம்.

12.05.24 அன்று 60 மாணவர்களுடன் தொடங்கிய இப்பள்ளியில் இன்று சுமார் 500 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

ஆசிரியர்களின் கடும் உழைப்பின் காரணத்தினால் இப் பள்ளியின் மாணவர்கள் நன்கு கல்வி கற்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற ஆண்டு ஐந்திற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் நல்ல முறையில் சித்தி பெற்ற இப் பள்ளியின் மாணவர் ஒருவர் ஜப்பான் நாட்டிற்கு அரசாங்க நிதி உதவியில் சென்று வந்ததை இங்கு பெருமையோடு குறிப்பிடலாம். பள்ளியின் முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் அதிபர், ஆசிரியர், மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் இம் மகிழ்ச்சியான வேளையில் எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறைவன் அருளால் இப்பள்ளி மேன்மேலும் சிறப்பெய்தப் பிரார்த்திக்கிறேன்.

சுவாமி ஆத்மகனாநந்தா



## பங்குத் தந்தையின்

## ஆசியுரை


வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலய பரிசளிப்பு விழாவுடன் பவள விழாவும் கொண்டாடப்படுவது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

இலங்கை மிசனரிச் சங்கத்தினால் 1924ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை கடந்த 75 ஆண்டுகளை வெற்றியுடன் கடந்து வளர்ச்சிப்பாதையில் வீறு நடை போடுகின்றதென்றால், அதற்கு முதற்காரணம் இறைவனின் நல்லாசியும், வழிநடத்தலும், அதிபர், ஆசிரியர்களின் அயராத கடின உழைப்பும் மாணவர்களின் தளராத ஊக்கமுமே யாகும். இவ் விழாவில் பரிசில்கள் பெறும் மாணவர்களுக்கு எமது நல் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக!

மேலும் இப்பாடசாலை சமுதாயத்தின் சமகால தேவைகளுக்கு ஏற்ப, சிறந்த ஆளுமையும், தலைமைத்துவமும், இறை நம்பிக்கையும் நிறைந்த தலைவர்களை உருவாக்க இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

இறை ஆசி உங்கள் அனைவருடனும் என்றும் இருப்பதாக.

இறைவன் திருப்பணியில்
வண பிதா ஜே. நேமன் ஜெயச்சந்திரன்



## Message from Hon. Chief Minister Western Province

It is my pleasant duty to send this brief message to the souvenir to be published in connection with the annual prize giving and founders' day of C/Wellawatte Government Tamil Vidyalaya, to be held on the 10th June, 1999, at Subbammal Hall, Mayura Place.

I am informed that this school was founded 75 years ago and has gradually grown upto a standard, where a large number of children from year 5 to year 11, successfully completing their scholarship and the G.C.E.(O/L) examinations. In this connection, I would like to convey my gratitudes' to the principal and the staff for the untiring efforts they carry on to develop the school.

I congratulate, all the students who achieved awards for both curricular and extra curricular activities. I hope, everyone will participate in the total development of the students. This will help them to be peace loving and good citizens of our country.

I wish all success and a fruitful future.

Hon. A. D. Susil Premajayantha,
Hon. Chief Minister
Western Province.


# பிரதம விருந்தினரின் ஆசிச் செய்தி

பவளவிழாக் காணுகின்ற வெள்ளவத்தை தமிழ் வித்தியாலயத்தின் பெருமையிலும் மகிழ்ச்சியிலும் யானும் பங்கு கொள்ள விரும்புகின்றேன். 75 ஆண்டு காலக் கல்விப் பணி என்பது இலகுவானதொன்றல்ல. எத்தனையோ சோதனைகள், சவால்கள், இடையூறுகள், இவை அத்தனையும் எதிர்நோக்கி வெற்றிகொண்டு, சுற்றாடலில் வாழுகின்ற சாதாரண தமிழ் பெற்றோரின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டில் ஈடுபாட்டையும் அக்கறையும் செலுத்தி வந்த பாடசாலையொன்று இன்று தனது கல்விப் பணிகளையிட்டுப் பெருமை கொள்வதில் அர்த்தமும் நிறைவான நியாயமும் உண்டு. இவ் வகையில் இப் பவளவிழா வைபவத்தில் பங்கு கொள்ளும் அழைப்பும் வாய்ப்பும் எனக்கு மிக்க பெருமை தருகின்றது.

எனது நோக்கில் கல்விப் பணியென்பது மனித குலத்தின் பல்வேறு தொழில்கள், பணிகள் என்பவற்றுடன் ஒப்பிடும் போது மிக்க முன்னுரிமையையும் முக்கியத்து வத்தையும் பெறுவது. முடிவடைந்துவரும் 20 ஆம் நூற்றாண்டு ஏராளமான போர்களையும் உயிர் அழிவுகளையும் சந்தித்திருந்தாலும் மற்றொரு வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. இந் நூற்றாண்டில்தான் கல்வி ஒரு முக்கியமான உரிமையாகப் பிரகடனஞ் செய்யப்பட்டது. யாவருக்கும் கல்வி, யாவருக்கும் ஆரம்பக்கல்வி, யாவருக்கும் விஞ்ஞானக் கல்வி, யாவருக்கும் கணிப்பொறிக்கல்வி என்ற சுலோகங்கள் எழுந்து கல்வி முறைப்படுத்தப்பட்ட நூற்றாண்டு இது. பின்தங்கியோரும் சலுகையற்ற வகுப்பினரும் கல்வி உரிமை உண்டெனப் பிரகடனம் செய்த நூற்றாண்டு இது. கல்வித்துறையில் இந் நூற்றாண்டு கண்ட சாதனைகள், வெற்றிகள் என்வற்றின் அடிப்படையிலேயே புதிய 21ம் நூற்றாண்டு "அறிவுடைமை நூற்றாண்டு" என்று வர்ணிக்கப்படுகின்றது. இத்தகைய கல்வி மேம்பாட்டில் வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் பரிசளிப்பும் உண்டு என்பதை மறத்தலாகாது.

இச் சாதனைக்குக் காரணமாக இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பெரும் பாராட்டுக்குரியவர்கள். அவர்கள் ஒழுங்கு செய்து நடாத்துகின்ற இப் பவள விழா சகல வெற்றிகளையும் காண உளமார வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி




பேராசிரியர். சோ. சந்திரசேகரன்
கொழும்பு பல்கலைக்கழகம்

## பொன் வல்லிபுரம் அவர்களின்
## ஆசிச் செய்தி

வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவினை ஒட்டி வெளிவரும் "சுவடு" என்ற மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பாடசாலையின் வளர்ச்சிப் போக்கில் "பரிசளிப்பு" மிகமுக்கியமானது. காரணம் இது மாணவர்களையும், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் ஊக்குவிக்கும் ஒரு நிகழ்வாகும்.

இப்பாடசாலை தலைநகரிலுள்ள ஏனைய பாடசாலைகளைப் போன்று வளமான வளங்களைக் கொண்ட பாடசாலை அல்ல எனினும் அதிபரும், ஆசிரியர்களும் இதன் வளர்ச்சிக்கு ஆற்றும் பணிகள் அளப்பரியது. காரணம் இங்கு கல்வி கற்கும் மாணவர்களது பொருளாதார நிலை, அவர்கள் வாழும் சூழல், அவர்களது பழக்கவழக்கங்கள் போன்றவற்றை அறிந்து அதற்கு ஏற்றவாறு அவர்களை அரவணைத்து அவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும் இணைப்பாட விதான நிகழ்வுகளிலும் ஈடுபடுகின்றனர். இவ்வேளையில் இவர்களது சேவையைப் பாராட்டுகிறேன்.

இப்பரிசளிப்பு நாளில் ஆனை முகத்தவனே உனக்குப் பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் தருகின்றேன். இக் கல்விக்கூட மாணவச் செல்வங்களுக்குச் சங்கத் தமிழ் மூன்றும் நீ தந்தருள வேண்டும். என் தாய்த் தெய்வமான மயூரபதி அம்மனையும் வேண்டி வாழ்த்தரிய வாழ்த்துக்கள் கூறி விடைபெறுகின்றேன்.

இங்ஙனம், -
பொன் வல்லிபுரம் (J.P)
தர்மகர்த்தா (மயூராபதி)
(ஓய்வு பெற்ற உதவிச் சுங்க அத்தியட்சகர்)

## மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

மேல் மாகாணத்தில் கொழும்பு தெற்குப் பகுதியில் அண்மைக் காலத்தில் தர அடிப்படையில் விருத்தியடைந்து வரும், தமிழ் மொழி மூலப் பாடசாலையாக வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயத்தை இனங்காண முடியும். மட்டுப்படுத்தப்பட்ட பௌதிக வளங்களையும், பிற்பகலில் பிறிதொரு பாடசாலையையும் உள்ளடக்கும் இக் கல்வி நிலையம் கலைத் திட்ட செயற்பாடுகள் மட்டுமன்றி இணைந்த கலைத் திட்டச் செயற்பாடுகளையும் இயன்ற வரை நடைமுறைப்படுத்தும் நிலையமாக அமைகின்றது.

இக் கல்வி நிலையம் இவ்வாண்டு தனது 75 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறது. இக் கலையகத்தின் பவளவிழா கலை விழாவினையும் பரிசளிப்பு விழாவினையும் உள்ளடக்கியதாக அமைகின்றது. பாடசாலைக் கல்விக்கு மிகப் பொருத்தமான முறையில் மாணவர் தொகையைக் கொண்ட இக் கலையகம் தர அடிப்படையில் பார்க்கும் போது அண்மைக் காலங்களில் தர விருத்தி சிறப்புற அமைந்து வருவதைக் காணலாம்.

1995 ஆம் ஆண்டில் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவன் இப் பாடசாலையிலிருந்து ஜப்பான் நாட்டிற்குச் சென்றமை குறிப்பிடப்பட வேண்டும். தொடர்ந்தும் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் இங்கு பிரபல்யமான பாடசாலைகளுடன் ஒப்பிடும் அளவுக்குச் சிறப்பாக உள்ளது.

இக் கலையகத்தின் வளர்ச்சிக்கு அதிபர் திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களே காரணமாக உள்ளார். அவரது தலைமைத்துவத்திலும் வழி காட்டலிலும் அனைத்து ஆசிரியர்களும் தமது பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகின்றனர். கலை விழாவிலும் பரிசளிப்பு விழாவிலும் மாணவர் ஆசிரியர் ஆகிய இரு சாராரும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி வருவதாக அறிகின்றேன். இதனால் மாணவர்கள் பல தரப்பட்ட கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வர்.

இன்றைய புதிய கல்வி மாற்றங்களின் அடிப்படையாக அமைவது மாணவரின் கற்றல் அனுபவங்களைச் செழுமையடையச் செய்வதாகும்.

வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் சிறப்புடன் அமைய எனது வாழ்த்துக்கள்.

*எஸ். நல்லையா*
*மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்*
*(மேல் மாகாணம்)*

## கொழும்பு வலய ப் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கொழும்பு வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயப் பரிசளிப்பு விழா எதிர்வரும் ஜூன் மாதம் 10ம் திகதி அன்று மயூரபதி சுப்பம்மாள் மண்டபத்தில் நடைபெற உள்ளதை இட்டுப் பெரு மகிழ்வடைகிறேன்.

மாணவரது அறிவு, திறன், மனப்பாங்குகளை வெளிக்கொணர நல் வாய்ப்பளிக்கும் இவ்வகைக் கல்வி சார் நிகழ்ச்சிகளை நடாத்துவது நற்பணியாகும்.


இலை மறை காயாக இருந்து வரும் இவ் வித்தியாலய மாணவரை வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தும் ஓர் அரிய விழாவாக இது மிளிர்கிறது. கற்றலின் சிறந்த ஊக்கியாக விளங்கும் இவ்விழா நடைபெறுவது பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும்.

இப்பாடசாலை ஆரம்பித்து 75 ஆண்டுகள் நிறைவு பவள விழாவை யும் சேர்த்துக் கொண்டாடும் இத் தருணத்தில் இவ்விழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இவ்வாறான நற்பணிகள் தொடர்ந்தும் நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இவ்வாறான நற்பணிகள் தொடர்ந்தும் நடைறெ அயராது உழைத்து வரும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றார், நலன் விரும்பிகள் ஆகியோரை மனமார வாழ்த்தி தொடர்ந்தும் வரும் ஆண்டுகளிலும் விழா சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறேன்.

திரு.ஆர். சண்முகசர்மா
கொழும்பு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்.



## பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

*கொழும்பு வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் ஜுன் மாதம் 10ம் திகதி நடைபெற இருப்பதையிட்டுப் பெரு மகிழ்வடைகிறோம்.*

*மிகமிகக் குறைவான பௌதீக வளங்களுடன் 75 ஆண்டுகள் தன் கல்விப் பணியில் வீறு நடை போடுகின்ற இவ்வித்தியாலயத்தினைப் பார்க்கையில் பெருமிதம் கொள்கிறோம்.*

*பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் இவ்விழாவினை இடைவிடாது ஆண்டு தோறும் நடத்த வேண்டும் என்ற முனைப்புடன் ஈடுபட்டு வரும் இவ்வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர், நலன்புரிச்சங்கத்தினர் யாவரையும் மனமாரப் பாராட்டுகின்றேன்.*

*இனிவருடம் ஆண்டுகளிலும் மாணவர் நலனுக்காக நடாத்தப்படும் இத்தகைய விழாக்கள் சிறப்பாக நடைபெற இறை அருளை வேண்டுகிறேன்.*

*நன்றி*

*திருமதி. சிவானந்த லோஜனி சிவநாதன்*
*செயலாளர்*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்*

## பொறுப்பாசிரியர்களது பேனாவிலிருந்து.....

*இன்றைய தினம் எமது பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் பாடசாலை தொடங்கிய 75வது ஆண்டு நிறைவு நாளும் நடைபெறுவதுடன் எம்மால் வெளியிடப்படும் 'சுவடு' என்னும் மலரும் வெளிவருவதில் நாம் அளவில்லாத பெருமிதம் கொள்கின்றோம்.*

*மாணவர்கள் தம் கல்வி வளர்ச்சியினை மேலும் வளர்த்துக் கொள்ளும் பொருட்டும், கல்வியில் தம்மை முழு நேர மாணவர்களாக ஈடுபடுத்தி வாழ்க்கையில் மேன்மையுறும் பொருட்டும், தமது திறன்களை வெளிக் கொணரும் பொருட்டும், இப் பரிசளிப்பு விழாக்களும், கலை விழாக்களும் அவர்களுக்கு உதவுகின்றன.*

*இவ் விழா சிறப்புற அமையப் பல வழிகளிலும் துணை நின்ற அதிபருக்கும், ஆசிரிய நண்பர்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் நன்றிகள் பல கூறுகின்றோம்.*

***திருமதி கெங்கா பாலதயாளன்***
***திருமதி உருத்திராவதி தியாகலிங்கம்***
***திருமதி ஹசீனா ஷரூக்***

*With Best Compliments*

*From*

**For a Better Service In All of Insurance**

# INSURANCE BROKERS

## And Technical Services (pvt) Ltd.

UG / 85. People's Park Complex, Colombo - 11
Telephone : 431490, 472020, 074-712472
Fax : 431490

# கொழும்பு வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயம்
## கொழும்பு - 06

## அதிபர் அறிக்கை

வணக்கத்துக்குரிய மதத் தலைவர் அவர்களே! இன்றைய விழாவின் பிரதம அதிதி பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களே! அவர் தம் பாரியார்அவர்களே கௌரவ அதிதி பொன் வல்லிபுரம் அவர்களே! அவர் தம் பாரியார் அவர்களே! கல்வி அதிகாரிகளே! முன்னாள் அதிபர்களே! ஏனைய பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! பழைய மாணவர்களே! மாணவர்களே! உங்கள் அனைவரையும் இம் மாலைப் பொழுதினிலே வரவேற்பதில் நானும் எனது ஆசிரியர்களும், மாணவர்களும் மகிழ்ச்சியடைகின்றோம்.

பிரதம அதிதி அவர்களே! பவள விழா கொண்டாடும் இவ் வேளையில் பாடசாலையின் வரலாற்றுச் சுவடுகளின் பின்புலத்தைத் தங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

1924ம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி வெள்ளவத்தையில் அமைந்துள்ள சுவர்ணா வீதியில் இலங்கை மிஷனரிச் சங்கத்தினரால் மூன்று ஆசிரியர்களுடனும் 69 மாணவர்களுடனும் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1 - 5ம் வகுப்பு வரையுள்ள இப் பாடசாலையின் முதல் அதிபராக திரு. எஸ். பர்ணாந்து அவர்கள் பணிபுரிந்தார்.

- 1958ல் திரு.ஆர். தங்கராசா அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார்.
- 1960ல் இப்பாடசாலை பாமன்கடைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இக் கால கட்டத்தில் இது இரு நேரப் பாடசாலையாக இயங்கி வந்தது.
- 1961ல் அரசாங்கம் இப் பாடசாலையைப் பொறுப்பேற்றதுடன் 6ம் வகுப்பும் தொடங்கப்பட்டது.
- திரு. எஸ். பஞ்சாட்சரம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய போது 7ம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.
- 1972ம் ஆண்டு திரு. ரி. யோகநாதன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றதும் ஆசிரியர் தொகை 18 ஆகவும், மாணவர் தொகை 438 ஆகவும் உயர்ந்தது.
- 1974ல் எட்டாம் வகுப்பும், 1976ல் ஒன்பதாம், பத்தாம் வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டது.
- 1977ல் திரு. எஸ். செல்லத்துரை அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். இவருடைய காலத்தில் தற்போது உள்ள மூன்று மாடிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1984ல் திருமதி எம்.ரி.எம். லூயிஸ் அதிபராகப் பொறுப்பேற்றார். 1996 மார்கழி மாதம் ஓய்வு பெற்றார்.
- 1997 பெப்ரவரி 5ம் திகதி திருமதி இ.இராஜரட்ணம் அதிபராகப் பொறுப்பேற்றார்.

மே மாதம் 12ம் திகதி 1999இல் எமது கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவு தினமாகும். அன்று பாடசாலை வளவில் சமயத் தலைவர்களின் ஆசியுடன் எளிமையான முறையில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் 75வது ஸ்தாபகர் தினம் கொண்டாடப்பட்டது. இன்று பாடசாலைச் சமுகத்துடன் இணைந்து இவ் விழாவைக் கொண்டாடுகின்றோம்.

கொழும்பு பல்கலைக்கழகக் கல்வித்துறைத் தலைவரும், கல்வித் தத்துவங்களையும் சிந்தனைகளையும், புதிய போக்குகளையும், கல்விப் பிரச்சினைகளையும், தீர்வுகளையும், பட்டிதொட்டிகளில் எல்லாம் பரவக் கூடிய

முறையில், கட்டுரைகளாகவும், நூல்களாகவும், ஆராய்ச்சிக் குறிப்புக்களாகவும் எழுதி வரும் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் இன்றைய விழாவின் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வது மிகப் பொருத்தமானது என்பதுடன் எமக்கெல்லாம் மகிழ்ச்சியையும் தருகின்றது. பேராசிரியர் அவர்களே! தங்களுக்குள்ள வேலைப் பழுவின் மத்தியிலும் எங்கள் பிள்ளைகளுடன் இந்த மாலைப் பொழுதைக் களிக்க வந்துள்ள தங்களை வருக வருக என வரவேற்கிறேன்.

இன்றைய விழா இம் மண்டபத்தில் இவ்வளவு கோலாகலமாக நடைபெறுவதற்கு உதவியவரும் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய தர்ம கர்த்தாவும், சமூக சேவையாளருமான திரு. பொன் வல்லிபுரம் அவர்களே! அவர் தம் பாரியார் அவர்களே! உங்களையும் இம் மாலைப் பொழுதில் இருகரம் கூப்பி வரவேற்கின்றேன்.

பேராசிரியர் அவர்களே! பாடசாலையில் கிடைக்கும் பல்வேறுவிதமான "பாடநெறித் தொகுப்புக்களின் அடிப்படையில் எமது பாடசாலை 2ம் வகைப் (Type II) பாடசாலையாகும். இங்கு 500 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 19 ஆசிரியர்கள் கல்விக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். எமது பாடசாலை மிகக் குறைந்த நிலப் பரப்பில் ஒரு மூன்று மாடிக் கட்டடத்தைக் கொண்டுள்ளது. வேறு எந்தவிதமான கட்டட வசதிகளும் எமக்கில்லை. பாடசாலையின் துப்புரவு, மலசல கூட சுத்திகரிப்பு என்பவற்றைச் செய்வதற்குக் கூட எமக்கு அரச தொழிலாளர்கள் இல்லை. இப்பணியைச் செய்வதற்கு நாம் நியமித்துள்ள ஊழியர் ஒருவருக்கு கொழும்பு தெற்கு லயன் கழகம் உதவி வருகின்றது.

## கல்வி நடவடிக்கைகள்:

கற்றல் என்பது பிறப்பிலிருந்து இறப்புவரை பல்வேறு முறைகளில் தொடர்ச்சியாக நடைபெறும் நிரந்தரச் செயலாகும். இது குடும்பம், வீட்டுச் சூழல், பௌதிக இயற்கைச் சூழல், ஆக்கப்பட்ட பௌதீகச்சூழல் மூலமாகப் பரவலாகவும், கூட்டாகவும் நடைபெறுகின்றது. ஆனால் முறை சார்ந்தவகையில் நிறுவன ரீதியாக பிள்ளைகளினதும், இளைஞர்களினதும் கற்றல் நிகழவேண்டும் என்பதை ஏற்ற சமூகத்தில் பாடசாலைகள் கல்வி வழங்குவதில் முக்கியத்துவம் பெற்றதுடன் அதற்காக அரசும் சமூகமும் பாரிய அளவிலான வழங்களை தொடர்ச்சியாக வழங்கிவருகின்றன. எமது பாடசாலை 75 வருடங்களாக இப்பணியை செய்து வந்துள்ளது என்தை மீள்நோக்குச் செய்யும் போது நாம் பெருமைக்குரியவர்கள் ஆகின்றோம்.

கல்வித்துறையானது இன்று மிகவும் ஆழமாகவும், அகலமாகவும் விரிவடைந்துள்ளது. அதாவது ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் கற்றாலும் ஒரு தனிப்பட்ட பரப்பைக் கூடக் முற்று முழுவதாகக் கற்க முடியாத அளவிற்கு அது வியாபகம் அடைந்துள்ளது. தற்கால உலகில் ஏற்பட்டு வரும் துரித மாற்றத்திற்கு ஏற்ப இலங்கையும் முன்னேறிச் செல்ல வேண்டும் இதற்கு கல்வியில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

தற்போதைய கல்விக் கோலமானது பாட விடயங்களை மனனம் செய்து பரீட்சை வினாக்களுக்குப் பொறி முறை ரீதியில் விடை அளிப்பதற்குரிய பயிற்சியை மட்டுமே மாணவர்களுக்கு வழங்குகின்றது. நாட்டின் பொருளாதார, சமூகத் தேவைகளுக்கு ஏற்ப தமது அறிவை பிரயோகிக்கக் கூடிய ஆக்கத்திறன் கொண்ட மனிதவளங்களைப் பாடசாலைகள் உருவாக்கவில்லை எனக் குறை கூறப்படுகின்றது. இத்தகைய விமர்சனங்களுக்குமத்தியிலும் கொழும்பு மாவட்டத்தில் உள்ள இரண்டாம் தரப் பாடசாலைகளின் வரிசையில் எமது பாடசாலையும் வயதிலும் சரி, கல்வித் தரத்திலும் சரி ஏனைய நடவடிக்கைகளிலும் சரி குறைந்தது அல்ல.

எமது பாடசாலைக்குக் கல்வி கற்கவரும் மாணவர்களின் சமூக, பொருளாதார நிலை கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஏனைய பாடசாலை மாணவர்களைவிடக் குறைவானதாகும். இதனால் அவர்களின் வரவு தொடர்ச்சிகரமானதாக இல்லை. அவர்களின் கல்வியை இது பாதிக்கிறது. அத்துடன் அவர்களின் சமூக, பொருளாதார நிலை, இடை விலகல் வீதத்தையும் கூட்டுகின்றது. நகர்ப்புறச் சூழல் அங்கு தோன்றும் நாகரிகப் பாதிப்புக்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார, போர் நிலைகளின் பாதிப்பு போன்றவையும் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இக் கல்லூரியில் கல்விக் கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் எமது பாடசாலை மாணவர்களின் நிலை அறிந்து அவர்களின் எழுத்தறிவு மட்டத்தைக் கூட்டுவதற்கும் இடைவிலகலைக் குறைத்து கல்வியின் முக்கியத்துவத்தை மாணவர்களும் பெற்றோர்களும் உணர்ந்து கொள்ளக்கூடிய வகையிலும் பல்வேறு வகைகளில் உழைத்து வருகின்றனர். இதற்குத் தற்போது உள்ள பெற்றோர்களும் எமக்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

கல்விப் பெறுபேறுகள் ஒரு பாடசாலையின் தர, பண்பு வளர்ச்சியைத் தீர்மானிக்கும் சுட்டியாக உள்ளது. இந்த வகையில் 1995ம் ஆண்டு நடாத்தப்பட்ட 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வன் ஜே. யோகநாத் உயர்புள்ளியைப் பெற்று ஜப்பான் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1997ம் ஆண்டு நடந்த க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் எம். உலகநாதன் ஆறு பாடங்களில் அதி விசேட சித்தியைப் பெற்றது

எமது பாடசாலையைப் பொறுத்தவரையில் நாம் சாதனையாகவே கருதுகின்றோம். 1998ம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையிலும் 65 வீதமான மாணவர்கள் க.பொ. த. உயர்தர வகுப்புக்குச் செல்லத் தகுதி உடையவர்களாக விளங்குகின்றனர்.

## இணைப்பாட விதானச் செயற்பாடுகள்:

ஒரு மாணவனைச் சம நிலை ஆளுமை உடையவனாக மாற்றுவதற்குக் கல்விச் சுற்று நிருபங்கள், கலைத் திட்டத்திற்கு உட்பட்டுச் செயற்படும் வகுப்பறைக் கல்விகள் மட்டும் போதுமானதல்ல. வகுப்பறைக்கு வெளியே ஒரு மாணவன் பெறும் தொழிற்பாடுகளும் அனுபவங்களும் அவசியமானவையாகும். அதாவது வகுப்பறைகளில் தமது திறமைகளை வெளிப்படுத்த முடியாத மாணவர்கள் தம்மை ஏனைய மாணவர்களுடன் இணைத்துக் கொள்ளும் பாலமாக விளையாட்டுக்களும், மன்றங்கள், கழகங்கள் போன்றவையும் விளங்குகின்றன.

எமது பாடசாலையில் விளையாட்டு மைதானம் இல்லை. விளையாட்டுப் பயிற்சியாளர் இல்லை. இருந்தும் எமது பிரதி அதிபர் திரு. பொ. மகாலிங்கம் அவர்களும், ஆசிரியர்களும் கூட்டாக இணைந்து மாணவர்களைப் பயிற்றுவித்து 'கூரே' விளையாட்டு மைதானத்தில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியையும், சிறப்பான உடற்பயிற்சிக் காட்சியையும் நடாத்துவதன் மூலம் மாணவர்களின் உடல் வலிமையை வளப்படுத்துவதுடன் அதில் நல்ல உள்ளத்தையும் குடிகொள்ளச் செய்து நல்ல எண்ணங்கள் தோன்றுவதற்கு ஏற்ற சூழலையும் உருவாக்கி வருகின்றனர். விளையாட்டுக்கள் மூலம் பெறும் அனுபவங்கள் மாணவர்களை நல்ல விழுமிய உணர்வு உள்ளவர்களாக மாற்றுவதுடன் சகோதரத்துவம், சகிப்புத்தன்மை, அன்பு, மனிதாபிமானம், விட்டுக் கொடுத்தல், பொறாமையின்மை, வெற்றி தோல்விளைச் சமமாக மதிக்கும் தன்மை ................ போன்ற மனிதப் பண்புகள் வளர்வதற்கும் உதவுகின்றன.

எமது பாடசாலையில் இயங்கும் தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய, மன்றங்கள் விஞ்ஞான மன்றம், முதல் உதவி மன்றம், மாணவத் தலைவர் மன்றம் போன்றவற்றினூடாக மாணவர் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் ஆக்கத்திறன்களையும், அழகியல் உணர்வுகளையும் திறன் ஆய்வு உணர்வுகளையும் உருவாக்குவதுடன் ஒரு சராசரி மனிதனுக்கு இருக்க வேண்டிய தன்னம்பிக்கை, வாய்மை, நகைச்சுவை, நம்பகத்தன்மை, பொறுப்புக் கூறல், பொறுமை ஒழுங்கு, அறிவு, அவசியமானபோது இறுக்கமாய் இருத்தல் போன்ற முகாமைத்துவப் பண்புகளையும் பயிற்றுவித்து வருகின்றோம்.

## மாணவர் ஒழுக்கம்:

பாடசாலை நிர்வாகம் பயன் உள்ள வகையிலும், சிறப்பாகவும் அமைவதற்குப் பாடசாலையின் பல்வேறு அங்கத்தவர்களுக்கு இடையேயும் முழுமையான ஒத்துழைப்பும் நல்லொழுக்கமும் இருப்பது அவசியமாகும். ஒழுக்கமுள்ள நடத்தை மனிதப் பண்பாட்டின் சின்னமாகும். ஒழுக்கம் என்பது கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு முறைப்பட நடத்தல், விதிகளுக்கு கீழ்ப்படிதல், மரபுகளை மதித்தல், விழுமியங்களைப் பின்பற்றுதல் போன்றவற்றைக் குறிக்கும்.கல்வியின் நோக்கங்களில் நல்லொழுக்கமுள்ள மாணவர்களை உருவாக்குவதும் ஒன்றாகும். மாணவர்களிடையே நல்லொழுக்கம் இல்லாவிடின் சிறந்த ஆசிரியரால்கூட நல்ல முறையில் கற்பிக்க முடியாது.

ஒழுக்கம் என்பது சுய கட்டுப்பாட்டின் (Self Control) விளைவாக எழும் முறைப்படுத்தப்பட்ட நன் நடத்தையைக் குறிக்கும் இது தனிமனிதனது (Individual) நலனுக்கு மட்டுமன்றி சமூக நலனுக்கும் அவசியமாகும். உண்மையான ஒழுக்கம் (Real Discipline) நன் நடத்தையின் அடிப்படையாக அமையும் மன நிலையைக் குறிக்கும். இவ் ஒழுக்கம் புறக்கட்டுப்பாடுகளாலோ, அச்சம், தண்டனை போன்றவற்றாலோ தோன்றுவதல்ல. தனக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும் என்ற உள்ளுணர்வின்பயனாகத் தானே விரும்பி மேற்கொள்ளும் கட்டுப்பாடான ஒழுங்கு முறையால் ஒழுக்கம் தோன்றுகின்றது.

பாடசாலைகள் உருவாக்கும் உண்மையான ஒழுக்கம் பாடசாலைக்கு உள்ளே ஆசிரியர்களின் எதிரில் மட்டுமன்றி விளையாட்டரங்கு, வீடு, கடைத்தெரு போன்ற எல்லா இடங்களிலும் துலங்குவதாக இருக்கும். இது அவர்களுடைய பிற்கால வாழ்க்கையையும் வளப்படுத்தும்.

நாம் மாணவர்களாக இருந்த காலத்தில் வகுப்பில் சத்தமின்றி அமைதியாக இருத்தலும் ஆசிரியர் ஆணைக்கு எதிர்ப் பேச்சின்றிக் கீழ்ப்படிதலுமே ஒழுக்கமாக கருதப்பட்டது. இவ்வொழுக்கத்தை உருவாக்க வசைமொழிகள், கட்டாயப்படுத்தல், தண்டனைவழங்கல் போன்ற புறக்கட்டுப்பாடுகளையே ஆசிரியர்கள் வகுப்பறைகளில் பயன்படுத்தினர். இங்கு ஒழுக்கம் என்பது தவறுகள் செய்வதிலிருந்து மாணவர்களைத் தடுப்பதாகவே கருதப்பட்டது. இது அன்றைய ஆசிரிய மையக்கல்வி முறைக்கு பொருத்தமானது.ஆனால்

இன்றைய மாணவ மையக்கல்வி முறையில் நல்ல மனப்பான்மைகள், நற்பழக்கங்கள், நல்லொழுக்கம் ஆகியவை உள்ளடங்கிய முழுமையான ஆளுமையை உருவாக்குவதாகவே பாடசாலையில் ஒழுக்கப் பயிற்சிகள் அமைந்துள்ளன. இங்கு மாணவர்களது வெளித் தோற்றம் மட்டுமன்றி மாணவர் உளப்பாங்கும் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. சுய கட்டுப்பாட்டினின்று எழும் ஒழுக்கம் படிப்படியாகவே மாணவர்களிடம் வளரும். தண்டனை மூலம் இதைத் தோற்றுவிக்க முடியாது. தீய பழக்க வழக்கங்களைக் குறைக்கத் தண்டனை ஓரளவு உதவுமே தவிர நன் நடத்தை, நற் பழக்க வழக்கங்கள், நல்ல மனப்பான்மைகள் போன்றவற்றை உருவாக்கத் தண்டனை பயன்படாது என்பதைப் பாடசாலைகள் உணர வேண்டும், மாணவர்களிடம் நல்லொழுக்கத்தை உருவாக்குவதற்கு அவர்களை ஓரளவு சுதந்திரமாகச் செயற்பட விடுவதுடன் பொறுப்புணர்ச்சியையும் வழங்க வேண்டும்.

மாணவர்களை ஒழுங்கும் கட்டுப்பாடும் உள்ள குடி மக்களாக வளர்ப்பதற்குச் சமயக் கல்வியும், ஒழுக்கக் கல்வியும் அவசியமானவை எமது நாட்டில் ஒவ்வொரு மாணவனுக்கும் தான் பின்பற்றும் சமயக் கல்வி போதிக்கப்படுகின்றது. எமது கல்லூரியில் கல்வி பயிலும் இந்து, கிறிஸ்தவ இஸ்லாமிய மாணவர்களுக்கு அவரவர் சமயக் கல்வியும் விழுமியங்களும் போதிக்கப்படுகின்றன. ஒழுக்கக் கல்வி என்ற ஒரு பாடம் போதிக்கப்பட வில்லை எனினும் திருக்குறள் என்ற பொது மறையினூடாக ஒழுக்கப் போதனைகளையும் செய்து வருகின்றோம்.

இன்றைய விஞ்ஞான தொழில் நுட்ப உலகில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தெளிவாக இனம் கண்டு அவர்களுக்கு உதவுவதில் சமயக் கருத்துக்கள், சமய நம்பிக்கைகள், ஒழுக்க நெறிகள் என்பவை எவ்வாறு துணை செய்யும் என்பதைச் சமயக் கல்வியையும், ஒழுக்கத்தையும் போதிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் புரிய வைப்பது இன்றைய தேவையாக உள்ளது. அத்துடன் மாணவர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமய நிறுவனங்கள், காவல் துறையினர் ஏனைய சமூக நிறுவனங்கள் அனைத்தும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டியது அவசரமானதும் அவசியமானதுமான தேவையாகும்.

## பாடசாலையும் சமூகமும்:

ஆரம்பத்தில் பாடசாலைகள் ஒரு சுற்றாடலுக்கு மட்டும் சொந்தமானவை என்ற எண்ணக்கரு மறைந்து திறந்த பாடசாலைகள் என்ற எண்ணக்கரு வளர்ச்சி அடைந்து வருகின்றது. இன்று பாடசாலைகளின் நோக்கங்கள் பரந்து பட்டவையாக இருப்பதுடன் சமுதாய மாற்றங்களுக்கும் தேவைகளுக்கும் வளைந்து கொடுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

கல்வி என்பது நேர அட்டவணைப்படி வகுப்பறைகளில் நடைபெறுகின்ற வேலைகள் மட்டுமல்ல அது வாழ்க்கையின் அனுபவங்கள் அனைத்தையும் உள்ளடக்கியது எனவே தான் கல்வி வாழ்க்கை முழுவதும் தொடர்கின்றது என்ற கருத்துக்கு இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது.

சமுதாயத்தில் ஏற்பட்டு வரும் துரித மாற்றங்களுக்குப் பாடசாலைகள் ஈடுகொடுக்க வேண்டுமாயின் அவைசமூகத்திலிருந்து விலகி நிற்க முடியாது. பாடசாலைகள் சமூகத்திற்காகத் திறந்து விடப்படவேண்டும். 'சமூகம் பாடசாலைக்காகத் திறந்து விட வேண்டும் எனற கருத்து இன்று வலுப்பெற்று வருகின்றது. இதற்குப் பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் பொருத்தமான தொடர்புகளைச் சமூகத்துடன் ஏற்படுத்த வேண்டும். அதிபர் பாடசாலை வளத்தையும் பாடசாலயைச் சுற்றியுள்ள சமூகத்தின் வளங்களையும் நன்கு இனம் கண்டு அதைப் பாடசாலையின் பயன் கருதிப் பயன்படுத்த வேண்டும். இன்று இங்கு நடைபெறும் விழா சமூக வளத்தைப் பெற்று சமூகத்தைப் பாடசாலைக்குள் கொண்டு வந்தமைக்குச் சான்றாக உள்ளது.

சமூகத்தின் நிலைத்ததன்மைக்கும் துணை செய்து அதனை உயர்த்துவதற்குக் கல்வி உதவ வேண்டும் இதற்குப் பாடசாலைகள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும். எமது பாடசாலைச் சமூகத்தைச் சார்ந்த பெற்றோர்கள் எமது பாடசாலையின் வளர்ச்சியில் கூடிய அக்கறை உள்ளவர்கள். நாம் நடாத்தும் இல்ல மெய்வல்லுனர் போட்டிகள், கலை விழாக்கள், பரிசளிப்பு விழாக்கள், சுகாதார நடவடிக்கைகள், பாடசாலைச் சிரமதான நிகழ்வுகள் போன்ற அனைத்திலும் அவர்கள் பல்வேறுவழிகளிலும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

## நடைமுறைக்கு வரும் புதிய கல்விச் சீர்திருத்தங்கள்:

மேலை நாடுகள் விவசாயம், கைத்தொழில், சேவைகள் துறை என்ற மூன்றாம் நிலையையும், நான்காம் நிலையான தகவல் தொழில்நுட்பத் துறையிலும் பெரு வளர்ச்சிகள் கண்டு கொண்டிருக்கின்றன.

இலங்கையும் இத்தகைய வளர்ச்சியைப் பெறவேண்டுமாயின் கல்வித்துறையில் நாம் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

கல்வித்துறை இன்று மிகவும் ஆழமாகவும், அகலமாகவும் பரந்துள்ளது. அதாவது ஒருவர் தனது வாழ்நாள் முழுவதும் கற்றாலும் ஒரு தனிப்பாடப் பரப்பைத்தானும் முழுமையாகக் கற்க முடியாத அளவிற்கு அது பரந்துள்ளது.

- எமது நாட்டிற்கு வேண்டிய செயல்திறன் மிக்க மனித வளம் போதிய அளவு உருவாக்கப்படவில்லை.
- தற்போதைய கல்விக் கோலம் பாடவிடயங்களை மனனம் செய்து பரீட்சை வினாத்தாள்களுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்யும் ஒன்றாக மட்டும் உள்ளது.
- நாட்டின் பொருளாதார சமுகத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் அறிவைப் பிரயோகிக்கக் கூடிய ஆக்கத்திறன் கொண்டு மக்கள் வளத்தை உருவாக்க முடியவில்லை.

மேலே கூறப்பட்ட பரவலான குற்றச் சாட்டுக்கள் எமது பழைய கல்வி முறைக்கு எதிராகக் கூறப்படுபவையாகும்.

***நான் கேட்பதை மறந்து விடுகின்றேன்***
**I hear and I forget**
***நான் பார்ப்பதை ஞாபகத்தில் வைத்திருக்கின்றேன்***
**I see and I remember**
***நான் செய்வதை விளங்கிக் கொள்கின்றேன்.***
**I do and I understand**

*(Old Chinese Proverb)*

என்பவற்றுக்கு ஏற்ப விரிவுரையை மட்டும் மையமாகக் கொண்ட கல்விமுறையை விடுத்துப் புலன்காட்சி முறைக்கும், செய்து கற்றல்முறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் புதிய கல்வி முறை ஒன்று தேவை. அப்போது தான் நாம் புதிய நூற்றாண்டின் விருத்திக்கு ஏற்ப எமது எதிர்காலச் சந்ததியினரை உருவாக்க முடியும்.

இதை உணர்ந்த இன்றைய அரசு அதி உத்தம ஜனாதிபதி அவர்களின் பணிப்புரைகளுக்கு அமையப் புதிய கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகளை முன்வைத்துள்ளது.

## அத்திவாரத்தை உறுதியாக அமைப்போம்:

ஒரு பிள்ளையின் கல்வி, பண்பாடு, ஒழுக்கம் போன்றவற்றின் ஆரம்பத் தொட்டில் குடும்பமாகும். இதற்குப் பின்னரே பாடசாலை ஒரு பிள்ளையின் நடத்தையில் தாக்கம் செலுத்தத் தொடங்குகின்றது. வாசிப்பு, எழுத்து கணிதம் போன்றவற்றைக் கற்பிப்பதற்கும், கீழ்ப்படிதல், ஒழுக்க விதிமுறைகள் போன்றவற்றைக் கற்பிப்பதற்கும் தான் ஆரம்பப் பாடசாலைகள் என்ற நிலைக்கு அப்பாலும் அவற்றின் பணிகள் விரிந்துள்ளன.

- பிள்ளைகளிடம் உள்ள உள்ளார்ந்த ஆற்றல்களை இனம் கண்டு அவற்றை விருத்தி செய்தல்.
- விரிவடையும் பிள்ளைகளின் உள்ளத்தை மேலும் விரிவடையச் செய்வதற்காக.
  - சிந்தித்து வினாக்களை உருவாக்கி அவற்றுக்கான விடைகளைக் கண்டுபிடிக்கும் ஆற்றலை விருத்தி செய்தல்.
  - மனதையும், கருத்தையும் பயன்படுத்திக் கற்பனையால் ஆக்கத் திறனை விருத்தி செய்தல்.
  - தானாகவே அறிவைப் பெற்று அறிவைப் பிரயோகிக்கும் முறைகளைக் கற்றல்.
  - முதியோர் ஆசிரியர் போன்றோருக்கு ஆதரவளித்து கனம் பண்ணும் வழக்கத்தை வளர்த்தல்.
  - வேறுபட்ட கலாசாரங்களையும் மற்றவர்களின் கருத்துக்களையும் புரிந்துஅவற்றுக்கு மதிப்பளித்து நடத்தல்.
  - சுற்றாடலைப் பாதுகாத்தல்.
- பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தியில் பெற்றோரைப் பங்குபற்றச் செய்தல்.
- பிள்ளைகளின் முழு ஆளுமை விருத்தியில் பங்கு கொள்ளல்.

## "நல்லவைகள் யாவும் குழந்தைகளுக்கே"

- லெனின்

***'குழந்தைகள் தெய்வத்திற்குச் சமமானவர்கள்', 'குழந்தைகள் பச்சை மண்', 'பிஞ்சு மனங்கள்'*** எனவும் போற்றப்படுகின்றனர். எனவே நல்லவற்றை அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும், நல்லவற்றை அவர்கள் பார்க்க வேண்டும், நல்லவற்றைப் பேசவேண்டும், அப்போது தான் அவர்களிடம் நல்ல எண்ணங்கள் உருவாகும், அப்போது தான் நாட்டிற்குத் தேவையான நல்ல பிரஜைகளை உருவாக்க முடியும். இதற்காக 1998ம் ஆண்டு முதல் கம்பஹா மாவட்டம் பூராகவும் ஆரம்பக் கல்வி முறையில் ஒரு மாபெரும் சீரமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது 1999 முதல் நாடு பூராகவும் நடைமுறைக்கு வந்துள்ளது. இது மூன்று கட்டங்களாக அமுல்படுத்தப்படும்.

- ***முதலாவது கட்டத்தில்*** (தரம் 1-2) மேற்பார்வையுடன் கூடிய விளையாட்டிற்கும் செயல்சார் கற்றலுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படும்.
- ***இரண்டாவது கட்டத்தில்*** (தரம் 3-4) விளையாட்டின் மூலம் கற்றல், செயல்சார் கற்றல், மேசை சார் கற்றல் ஆகிய மூன்றிற்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படும்.
- ***மூன்றாவது கட்டத்தில்*** (தரம் 5) மேசை சார் கற்றலுக்கு அதி முக்கியத்துவம் வழங்கப்படும். காரணம் கனிஷ்ட ஆரம்ப நிலைக்கு மாணவர்களைத் தயார் படுத்துவதற்கு இது அவசியமாகும்.

"ஒரு நாட்டின் தலைவிதி அந்த நாட்டின் வகுப்பறைகளிலேயே நிர்ணயிக்கப்படுகின்றது" என்பதற்கு அமைய தரம் ஒன்றிற்கான வகுப்பறைகள் புதிய கல்விச் செயற்பாடுகளைச் சரியாகச் செயற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இனி மேல் வகுப்பறைகள் தமக்குரிய கடமைகளையும், பொறுப்புக்களையும் சரியாகநிறைவேற்றும் என நம்பலாம்.

### இடைநிலைக் கல்வி:-

ஆரம்பக் கல்விப் பருவத்தில் மாணவர் ஒன்றிணைந்த கலைத்திட்டத்தினைக் கற்கின்றனர். இக் கற்றல் பெருமளவிற்கு நேரடி அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் இடைநிலைக்கல்வியில் தெளிவாக வகுக்கப்பட்ட கலைத்திட்டத்தை மாணவர்கள் கற்கவேண்டும். இது மாணவர் மையக்கல்வி முறையில் விருத்தி செய்யப்படும்.

இடை நிலைக் கல்வியைப் பொறுத்தவரையில் தரம் 6-9 வரையான கலைத்திட்டம் பாடங்களை மையமாகக் கொண்டதாகும். இங்கு சிறிய செயற்திட்ட செயற்பாடுகளும் செய்முறைகளும் கட்டாயமாக்கப்பட்டதுடன் இரண்டாம் மொழிகற்பித்தலுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. 9ம் தரத்தின் முடிவில் பிரதேசமட்டத்தில் ஒரு பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சைக்காக பாடசாலை மட்டக்கணிப்பீடுகளும் கவனத்தில் கொள்ளப்படும். இப்பரீட்சையில் சித்தி அடைவோரே 10ம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

சிரேஷ்ட இடைநிலைவகுப்புக்களில் (தரம் 10-11) எட்டு பாடங்கள் கட்டாயமானதாகவும் (சமயம், தமிழ்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானமும், தொழில் நுட்பமும்; சமூகக்கல்வியும் வரலாறும், அழகியற்கல்வி, தொழில்நுட்பப்பாடம்) விருப்பத்திற்குரிய பாடங்களில் ஆகக்கூடுதலாக இரண்டு பாடங்களையும் தெரிவு செய்ய வேண்டும். (வரலாறு, புவியியல், அபிவிருத்திக்கல்வி, சிங்களம்|தமிழ்- இரண்டாம் மொழி; நவீன மொழிகள், சுகாதாரமும் உடற்கல்வியும் தொழில் நுட்பப்பாடங்கள்) இப்பரீட்சையில் கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரு வினாத்தாள்கள் வழங்கப்படும். மாணவர் தமது தகுதிக்கு ஏற்பப் பொருத்தமான வினாத்தாளைத் தெரிவு செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

### ஆசிரியர்கள்:-

பாடசாலை ஒழுங்கமைப்பு, முகாமை என்பவற்றைப் பொறுத்தவகையில் எனது ஆசிரியர்கள் சோதனைகளிலும், சாதனைகளிலும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதுடன் எல்லாத்துறைகளிலும் சிறப்பறிஞர்களாகவும் விளங்குகின்றனர். பிள்ளைகளின் பிரச்சினை அறிவதில் துப்பறிவாளர்களாகவும் தீர்ப்பு வழங்குவதில் நீதிபதிகளாகவும் சிறந்த வழிகாட்டிகளாகவும், ஊக்குவிப்பாளர்களாகவும் உளவைத்தியர்களாகவும் சமூகவிஞ்ஞானிகளாகவும், நிர்வாகிகளாகவும், முகாமையாளராகவும், மாற்றங்களை ஏற்படுத்துபவர்களாகவும், பாடசாலை - சமூக இணைப்பாளராகவும் விளங்குகின்றனர். அத்துடன் அன்பினால் அனைவரையும் ஆட்கொள்ளும் பண்புகள் உள்ளவர்களாகவும் இருப்பதினால் பாடசாலை முகாமை, சமூகத்தொடர்புகள், கல்விச்செயற்பாடுகள், இணைப்பாடவிதான


செயற்பாடுகள், கலை விழாக்கள் போன்றவற்றை அவர்களும் நானும் இணைந்து திறம்படச்செய்யமுடிகின்றது.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவிவரும் பழைய மாணவர்களுக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் நலன்விரும்பிகளுக்கும் விளம்பரம் தந்து உதவியோருக்கும் எனது நன்றிகள்.

மாணவர்களின் கல்வித் தேவைகளையும், பௌதீக, ஆசிரியர் வளத் தேவைகளையும் தந்துதவும் கோட்ட, வலய, மாகாணக்கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு எனது நன்றிகள் பல, பல.

இன்று உங்கள் கைகளில் இருக்கும் 'சுவடு' என்ற சஞ்சிகைக்கு ஆசி உரை தந்த அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றிகள்.

மதிப்பிற்குரிய பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களே!, பொன் வல்லிபுரம் அவர்களே! கல்வி அதிகாரிகளே! முன்னால் பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! பழைய மாணவர்களே! பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! மாணவர்களே இவ்வளவு நேரமும் எனது அறிக்கையைப் பொறுமையுடன் செவிமடுத்தமைக்கு எனது அன்பு கலந்த மாலை வணக்கங்கள் பல, பல.




அதிபர்
திருமதி இந்திரா
இராஜரட்ணம்.

*With Best Compliments*

*From*

# JAYASUNDERA IMPORTERS

**IMPORTERS, TRADE PROMOTERS & MANUFACTURERS REPRESENTATIVES**

U.G. 43, Peoples Park Complex,
Gas Works Street,
Colombo - 11, Sri Lanka.
Tel : 432414, 333331
Fax : (941)-331007

# ஆசிரியர் குழு



***இடமிருந்து வலமாக இருப்பவர்கள் -*** திருமதி க.வடிவேல். திரு. பொ.மகாலிங்கம் (பிரதி அதிபர்),
திருமதி.இ.இராஜரட்ணம் (அதிபர்), திருமதி செ. பாலசுப்பிரமணியம், திருமதி.பா.சொர்ணராஜசிங்கம்
***நிற்பவர்கள் 1ம் வரிசை -*** திருமதி. ந.செல்வராஜா (பகுதித்தலைவர்) திருமதி.ம.பத்மநாதன், செல்வி.க.சாந்தினி,
திருமதி.சா.அருள்ஞானசெல்வம், திருமதி.க.கீர்த்தி சீலன், திருமதி.சா.குலதேவன், திருமதி.தே.ஆறுமுகசாமி.
***நிற்பவர்கள் 2ம் வரிசை -*** திருமதி.க.வர்ணகுலசிங்கம், திருமதி.ஹ.ஷருக், திருமதி.கெ.பாலதயாளன்,
திருமதி. தே.அருளானந்தம், திருமதி.உ.தியாகலிங்கம்.
*சமுகமளிக்காதவர்கள் -* பி.யோகபார்த்திபன், செல்வி.இ.ரஞ்சிதாதேவி

# விஞ்ஞான மன்றம்



***இடமிருந்து வலமாக -*** திருமதி. ஹ. ஷருக், திருமதி. உ. தியாகலிங்கம்
திருமதி. இ. இராஜரட்ணம் (அதிபர்) திரு. பொ. மகாலிங்கம் (பிரதி அதிபர்) திருமதி. சா. குலதேவன்.
***நிற்பவர்கள் -*** 1ம் வரிசை. சு. தினேஷா, ந. நிஷாந்தினி (பொருளாளர்) க. கோசலா (தலைவர்)
சு. நிஷாந்தா, (காரியதரிசி), ந.நிதர்ஷினி, வி. சுவர்ணா
***2ம் வரிசை -*** வி. விஸ்வநாதன், க. மோகன்தாஸ் (உபதலைவர்)
ந. பிந்தரன், திலீபன், வி. அரவிந்தன்

*With Best Compliments*

*From*

# "GRACE COURT" APARTMENTS

**at**

**No. 79/1 - Jampattah street.**
**Kotahena.**

**Please contact :-**
**Lankamirtha Clydesbul ( Pvt) Ltd.**
**309 4/2, - Golle Road,**
**Colombo - 6.**

# மாணவ தலைவர்கள்



***இருப்பவர்கள்***- இடமிருந்து வலம் திருமதி. உ. தியாகலிங்கம் (பொறுப்பாசிரியை), செல்வி. க. கோசலா (சிரேஷ்ட மாணவ தலைவி) திருமதி. இ. இராஜரட்ணம் (அதிபர்), செல்வன். ஆர். குகநாதன் (சிரேஸ்ட மாணவ தலைவன்) திரு. பொ. மகாலிங்கம் (பிரதி அதிபர்)

***நிற்பவர்கள் 1ம் வரிசை*** - செல்வி. க.திருச்செல்வி, செல்வி. ஜே.டயானா, செல்வி ப,ஷண்முக கோகிலா, பா.அனுஷா ஜீவனி, க.கலாதேவி ரி.சிறீமதி.

***நிற்பவர்கள் 2ம் வரிசை***- ரி. மதிருபன், ரி, தசந்தன், ஜி. ஜெரொன்பிரசாத், ரி. கலைதரன், ரி. அமிலன், ஆர்.கபில்தேவ்.

***நிற்பவர்கள் 3ம் வரிசை*** -சி. சிவகஜன், என். மயூதரன், எஸ். ஜோசப்சத்தார், கே. ராஜ்குமார், கே. மோகன்தாஸ், பி. பிரேமசக்தி.

# இந்து மன்றம்




***இடமிருந்து வலமாக*** - திருமதி உ. தியாகலிங்கம் (பொறுப்பாசிரியை) திருமதி க. வர்ணகுலசிங்கம் (பொறுப்பாசிரியை) திருமதி இ. இராஜரட்ணம் (அதிபர்) திருமதி ந. செல்வராஜா (பொறுப்பாசிரியை) திருமதி. சா. குலதேவன் (பொறுப்பாசிரியை)

***நிற்பவர்கள் 1ம் வரிசை*** - செல்வி க. கோசலா. பி. ஷண்முககோகிலா (செயலாளர்) பா. அனுஷாஜீவனி, இ. மீரா , க. தர்ஷினி, சி. நிஷாந்தா (பொருளாளர்) ந. நிஷாந்தினி, வி. சுவர்ணா.

***நிற்பவர்கள் 2ம் வரிசை*** - க.ரஜீவ் குமார் (உபசெயலாளர்) ந. பிந்தரன், க, புண்ணியமூர்த்தி, ந. தர்மசீலன், க. மோகன்தாஸ் (உபதலைவர்) சி. சிவகஜன் (உபபொருளாளர்) க. விஜயகுமார், வி. புவனேஸ்வரன், இ. குகநாதன் (தலைவர்)

# தமிழ் இலக்கிய மன்றம்



***இடமிருந்து வலமாக*** இருப்பவர்கள்- திருமதி. பா. சொர்ணராஜசிங்கம் (பொறுப்பாசிரியை) திரு. பொ. மகாலிங்கம் (பிரதி அதிபர்), செல்வி. க. கோசலா (தலைவர்), திருமதி. இ. இராஜரட்ணம் (அதிபர்), செல்வி. வை. டயானா (செயலாளர்), திருமதி. க. கீர்த்திசீலன் (பொறுப்பாசிரியை) திருமதி. தே. ஆறுமுகசுவாமி (பொறுப்பாசிரியை)

***நிர்பவர்கள் முதல் வரிசை***- செல்வி. ந. நிஷாந்தினி, செல்வி. பா. அனுஷாஜீவனி (உப செயலாளர்), திருமதி. செ. பாலதயாளன் (பொறுப்பாசிரியை), திருமதி. சா. அருள்ஞானசெல்வம், செல்வி. எஸ். நிஷாந்தா, செல்வி. பி. அருந்ததி

***நிற்பவர்கள் 2ம் வரிசை***- செல்வன். என். தர்மசீலன், செல்வன். ம. டினேஷ், செல்வன். கு. விஜயகுமார், செல்வன். ந. பிந்தரன், செல்வன். வி. விஸ்வநாதன்

# முதலுதவி



***இருப்பவர்கள் இடமிருந்து வலம்***- என். தர்மசீலன், திருமதி. க. வடிவேல், (பொறுப்பாசிரியை), திருமதி. இ. இராஜரட்ணம் (அதிபர்) திரு. பொ. மகாலிங்கம் (பிரதி அதிபர்) ஆர். சிவரஞ்சன்

***நிற்பவர்கள்***- *சி. சிவகஜன், எல். சிவப்பிரகாசம், க. லஷ்மிப்பிரியா, சி. நிஷாந்தா, ச. சிவகர்ஷன்*



With Best Compliments

From

*Wellawatta*

# *Nithyakalyani*

*Jewellery*

**Manufacturers & Exporters of Gems & Jewellery**

230, Galle Road, Colombo 06, Sri Laka.
Tel. 583392,585427
Fax : 94-1-585944.
E-mail: nithkal@slt IK.

*With Best Compliments*

*From*

# BANDARA TRANSPORTERS

LEADING GOUT TRANSPORTING AT COLOMBO PORTS.
FORWARDING AND CLEARING AGENTS.


190, GAS WORKS STREET, COLOMBO - 11.
T/PHONE: 071 750532 - HOTLINE 435188.

RESIDENCE :
INGULA.
MAWANELLA.

# கிறிஸ்தவ மன்றம்



இடமிருந்து வலமாக :
திருமதி தே.அருளானந்தம், செல்வி. க. சாந்தினி, திருமதி இ. இராஜரட்ணம் (அதிபர்) திருமதி சா. அருள்ஞான செல்வம் திருமதி தே. பத்மநாதன்
நிற்பவர்கள்: 1ம் வரிசை
எஸ். மேரிபுளோரிடா (உப செயலாளர்)அ.றோஸ்மலர் (பொருளாளர்), ச. தயாளினி, கே லக்சுமிபிரியா (உப பொருளாளர்) ம. ராஜேஸ்வரி (உப தலைவர்) ஜே. டயானா, பி.ஜெனட் மேரி (தலைவர்)
2ம் வரிசை -எஸ். யோசப் சத்தார். ஜி. ஜெரோன் பிரசாத்(செயலாளர்) கே. உதயச்சந்திரன்



**English Literary Association**.
Mrs. T. Arulanantham, ( Teacher-in-Charge), Mrs. I. Rajaratnam (Principal) Mr. P. Mahalingam (Vice Principal)
**Standing** K. Kosala (President) B. Anushajeevani (Vice President) R. Shobana, N. Nishantha.
**Standing** K. Punniyamoorthy (Treasurer) K. Vijaya Kumar, V. Puvaneswaran, G. Jeron Prasath, R. Sivaranjan, K. Mohanthas (Secretary)

# தமிழர் கண்ட பெண்ணின் பருவங்கள்


## பேதை

*சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகிய 'உலா' இலக்கியம், உலாவரும் தலைவனைக் காணும் ஏழ்பருவ மகளிரின் மனநிலை சார்ந்து கவிச்சுவை தருவது.*

*இவள் பேதை...*
*மனிதப்பிஞ்சு... வாழ்க்கையின் அரும்பு.*
*உலகியல்பு அறியா விளையாட்டுச் சிறுமி.*
*உலாவரும் சோழனை உற்றுப்பார்க்கிறாள்.*
*அவன் கழுத்தில் கிடக்கும் மாலையைத்*
*தன் மானுக்கு அணிவித்தால் அழகாக*
*இருக்குமே*
*என ஏங்குகிறாள்...*
*வயதுக்கேற்ற ஏக்கம்தானே !*

*"பேதைக்கு யாண்டே ஐந்துமுதல் எட்டே."*
*- பன்னிருபாட்டியல்.*





## பெதும்பை

*அவிழரும்பு !*
*இவள்...*
*அடி வான இமைபிளந்து*
*சூரியன் விழிப்பதற்கு முன்னதான*
*இருளில் நனைந்த வைகறையாகக்*
*காதலை உணர்ந்தும் உணராததுமான*
*பருவத்தாள்.*
*உலாவரும் தலைவனைப் பார்க்கிறாள்....*
*விழிக்கோப்பைகளில் காதல் தளும்புகிறது.*
*"பெதும்பைக்கு யாண்டே ஒன்பதும் பத்தும்."*
*- பன்னிருபாட்டியல்.*

*With Best Compliments*

*From*

# ALMAS FASHIONS

(EXCLUSIVE GENTS AND LADIES TAILORS)

8B, CRESCAT BOULEVARD.
COLOMBO - 3.



## மங்கை

அழகின் முழுமை !
பூத்த பெண்மை !
இவள்...
நிறை நிலா மங்கை !
உலாச் சோழனின்
ஆண்மை பூமியில்
இவளின்
விழி மேய்ச்சல்கள்...

"மங்கைக்(கு) யாண்டே பதினொன்று
முதலாத்
திரண்ட பதினா லளவுஞ் சாற்றும்."
- பன்னிருபாட்டியல்



## மடந்தை

காதற் சாறுமிக்க
காமனின் கரும்பு,
கனிந்த மடந்தை !
உலாப் போகும் சோழன் தந்த
காம நோயினால்
படுத்தவள்...
பனிநீரை நெருப்பென்றும்
குளிர்நிலவே சுட்டதென்றும்
துடிக்கிறாள் !

"மடந்தைக் (கு) யாண்டே பதினைந்து முதலாத்
திடம்படும் ஒன்பதிற்(று) இரட்டி செப்பும்."
- பன்னிருபாட்டியல்.

## அரிவை

சுண்டக் காய்ச்சிய
காமத்துப்பால் !
காதற்கடலில்
நீச்சலிடத் தெரிந்தவள்.
அவள்தான் அரிவை !
இன்றோ...
சோழச் சூரியன்
உருக்கிடும் பனிச்சிலை !

"அரிவைக்(கு) யாண்டே அறுநான் கென்ப."
- பன்னிருபாட்டியல்.





## தெரிவை

காமத் தூறலில்...
கருவறைச்சிற்பி
முத்துக்குத் தாகம் வளர்க்கும்
பருவத்தாள்... அவள்தான்...
தெரிவை !
உலாச் சோழனின்
காதல் மயக்கில்...
படுக்கைச் சுடுமணலில்
ஒரு
காதற்புழுவாய் நெளிகிறாள் !

"தெரிவைக்கு யாண்டே இருபத் தொன்பது."
- பன்னிருபாட்டியல்.

## பேரிளம் பெண்



திருவிழா முடிந்த
மறுநாள் !
கடந்த காலங்களை
அசைபோடும்
நிகழ்காலம் !
அவள்தான்... பேரிளம்பெண் !
உலாத் தலைவனை அடையமுடியாது
என்பது... அவளுக்குக்
காலங்கடந்த உண்மையாகிவிட்டது.
அவனுக்கு மயங்கியவள்
தற்போது
மதுவுக்கு மயங்குகிறாள்.

"ஈரைந் திருநான்(கு) இரட்டிக் கொண்டது
பேரிளம் பெண்டுக்(கு) இயல்பென மொழிப."
- பன்னிருபாட்டியல்.

# கலைஞன் கைவண்ணம்



## கற்கனி

கலைஞன் கையின் சிற்றுளி பட்டால்
கல்லும் கனிவாகும் - அந்தக்
கனவில் தோன்றும் சிலைகள் யாவும்
கண்ணின் விருந்தாகும்.

முல்லை

With Best Compliments

From

**CREDIT IMPORTS CEYLON (PRIVATE) LIMITED.**

558, SRISANGARAJA MAWATHA
COLOMBO - 10
TEL : 323181

# விநாயக வணக்கத்தின் மகிமை

அல்லல் போம், வல்வினைகள் போம்
அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லை போம் போகாத் துயரம் போம்
நல்ல குணங்கள் அதிகமாகும்.
அருணைக் கோபுரத்தில் வீற்று இருக்கும்
கணபதியைக் கைதொழுதக்கால்.

மேற்குறிப்பிட்ட பாடலைத் தினமும் காலை மாலை இரு வேளையும் விநாயகப் பெருமானை நினைத்து பாராயணம் செய்துவரின் வாழ்க்கையின் துன்ப துயரங்கள் யாவும் நீங்கி நிம்மதியைப் பெறலாம் என்பது மூத்தோர் வாக்கு.

இறைவனை நாம் கண்ணாற் பார்க்க இயலாது. ஆனால் "கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்" என்ற முதுமொழியின் படி நாம், எமது என்ற எண்ணத்தைக் கைவிட்டு எம்மை நல்வழிப் படுத்தவும். எக்காரியங்களையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்கவும் எமக்கும் மேலான ஏதோ ஒரு சக்தி உண்டு என்பதை நாம் உணர்ந்தால். அவ் உணர்வே இறைவனைக் காண்பதற்கும் சமம் ஆகும்.

விநாயக வணக்கத்திற்கு மிகவும் பிரதானமான அறுகம் புல்லின் மகிமையினைத் தனது மனைவி உட்பட அனைத்து முனிவர்களும் அறியும் பொருட்டு கவுண்டின்ய முனிவர் தனது மனைவி ஆசிரியை இடம் கொடுத்து. அவ் அறுகம்புல் எடைக்குப் பொன் வேண்டிவரத் தேவலோகம் அனுப்பினார். அறுகம்புல் எடைக்கு உரிய பொன் குபேரனாற் கூடக் கொடுக்க முடியவில்லையே. அறுகம்புல் அர்ச்சனையால் விநாயகர் மனம் மகிழ்ந்து அடியவர் கேட்கும் வரங்களைக் கொடுப்பார்.

ஒரு சமயம் உமாதேவியார் சிவனிடம் தமது மூத்தபிள்ளையான கணபதிக்கு மற்ற இலைகளைவிட வன்னிப் பத்திரத்தில் பிரியம் ஏற்படக் காரணம் என்ன என வினவிய போது. சிவபெருமான் பிரிய விரதன் என்ற பெயர் கொண்ட அரசனின் மூத்த மனைவி கீர்த்தி குழந்தைப் பேறு இல்லாத காரணத்தால் இளைய மனைவி பிரபாவதியிடம் அன்பு கொண்ட அரசனால் ஒதுக்கப்பட்டு பல சிரமங்களுக்கு இடையில் காட்டுக்கு அனுப்பப்பட்டாள். அச்சமயம் விநாயகர் மேற் பற்றுதல் கொண்ட கீர்த்தி மந்தார மரநிழலில் உள்ள விநாயகப் பெருமானுக்கு அறுகம்புல் அர்ச்சனை செய்து வழிபட்டாள். ஒரு நாள் பூஜைக்கு அறுகு கிடைக்காததால் அவள் மனம் வருந்திய போது தோழியர் வன்னிப் பத்திரத்தைக் கொண்டு வந்தனர்.

கீர்த்தியின் வன்னிப் பத்திரப் பூஜையால் மகிழ்ந்த விநாயகர் அவள் இழந்த வாழ்வை மீண்டும் கொடுத்துக் குழந்தைப் பேற்றையும் அடையும்படி செய்தார்.

வன்னி இலையின் பெருமையினை எவ்வளவோ கூறலாம். ஒருமுறையேனும் பயபக்தியுடன் "வன்னி" என்று வாயால் கூறினாலே பல பிறவிகளில் செய்த தீவினை யாவும் மறைந்து போகும். வன்னி மரத்தை வலம் வந்து வணங்கினாலும் அவ்வித பலனே கிடைக்கும். தீயின் நடுவே நின்று செய்யும் தவப்பயன் ஒரு வன்னி இலையைக் கொண்டு செய்யும் வழிபாட்டால் உண்டாகும் பயனுக்கு ஒப்பானது.

உண்மையான அன்புடனும் பக்தியுடனும் வழிபடும் அடியவர்க்குத் தக்கசமயத்தில் தாயாய்த், தந்தையாய், ஏன் உற்ற நண்பனாகக் கூட உடன் வந்து உதவக் கூடியவர் விநாயகப் பெருமான். நாம் அவரை இடைவிடாத வணக்கத்தால் பற்றிக் கொள்ள வேண்டும்.

"விறகிற் தீயினன் பாலிற் படு நெய் போல
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்.
உறவு கோல் நட்டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே"

விறகினுள் நெருப்பு ஒளிந்துள்ளது. பாலினுள் நெய் ஒளிந்துள்ளது. இறைவனும் அப்படித்தான், அவனை நாம் உறவு என்ற கோலை ஊன்றி உணர்வு (பக்தி) என்ற கயிற்றினால் இறுகப் பிணைத்து விட்டால், நம்மையும், இறைவனையும் பிரிக்கவே முடியாது என்பது உறுதி.

திருமதி. நீலாம்பாள் சர்மா.
(இந்து சமய ஆசிரியை)

*With Best Compliments*

*From*

**LANKA BOOK DEPOT**

PUBLISHERS, PRINTERS, IMPORTERS

*FL.I. 14 DIAS PLACE,*
*GUNASINGAPURA,*
*COLOMBO - 12.*
*PHONE : 341942 459431*

With Best Compliments

From

**THE ROYAL FANCY HOUSE**

**Dealers in fancy Goods, Toys, Eversilver,Brassware, Gifts,**
**Specialist in all Bridal & Dance Ornaments.**

221, Galle Road,
Wellawatte,
Colombo - 6.
✆ 555560, 555538



# அவனுக்கே அவன் அந்நியமானான்

கவிஞர் வைரமுத்து



வகுப்பறைகளின்
புழுக்கத்தில் புழுங்கிப் புழுங்கி
மாணவர்களின் நுரையீரல்
வெந்துவிட்டது!

பல இளம் பெண்கள்
புத்தகச்சுமை பொறுக்காமலேயே
பூப்பெய்தி விட்டார்கள்!

பள்ளிசெல்லும் சிறுவன்
ஒவ்வொரு விடியலிலும்
தான்
நாடு கடத்தப்படுவதாய்
நசிந்து போகிறான்!

பாலகர்கள்
சிலேட்டின் ஒரு பக்கத்தை
எச்சிலாலும்
மறுபக்கத்தைக் கண்ணீராலும்
துடைத்தழிக்கிறார்கள்!

அந்தச்
சிறு பறவைகளின்
இறகுகளை
கொள்ளிக் கட்டைகளாலா
கோதிவிடுவது?

எழுத்துக்களின் ஊர்வலத்தில்
அவர்கள்
காணாமல் போனார்கள்!
அவர்களோடு சேர்ந்து
துக்கம் கொண்டாடத்தான்
வகுப்பறைகளின் சுவர்கள்
கரும்பலகையை நெஞ்சில்
நிரந்தரமாய் அணிந்தனவோ?
அவர்கள் மூளையில்
விதையைப் போல்
தூவப்பட வேண்டிய அறிவு
ஆணியைப் போல்
அறையப்படுகிறது
இந்த இள மூங்கில்களை
ஐந்திலேயே வளைக்க
ஆசைப்பட்டார்கள்!
பல மூங்கில்களை
ஐந்திலேயே வளைக்க
ஆசைப்பட்டார்கள்!
பல மூங்கில்கள்
வளைக்கும் அவசரத்தில்
முறிக்கப்பட்டதால்
விறகுக் கடைகளில்
விற்பனையாயின!
இந்தக் பட்டறைகளில்
கூர்செய்யக்
கடப்பாரைகளைக் கொடுத்தோம்!
அவை
குண்டூசிகளாய்த் திரும்பின.

ஃ ஃ ஃ

பல்கலைக் கழகமோ
பள்ளிக்கூடங்கள் தாயரித்துத்தரும்
சல்லடைகளில்
ஓடங்கள் செய்வதாய்
உத்தரவாதம் தருகிறது.
இந்தக் கல்விமுறை
புதைத்த பிணங்களைத்
தோண்டியெடுத்துத்
துடைத்துக் கொண்டிருக்கிறது !
பாடத்திட்டம் படைப்பவர்கள்
சுட்டுவிரல்களால் தொட்டு நுகர்வது
மகரந்தமாம் !

ஃ ஃ ஃ

இல்லை... இல்லை... அது
போன நூற்றாண்டின் புழுதி.
கல்விக் கழகங்களின்
உட்கூரைகளின்

தோரணமாய் பின்னுவன
சரிகைகளாம் !
இல்லை... இல்லை அவை
குருட்டுச் சிலந்தி பின்னிய
ஒட்டடைகள் !
ஃ ஃ ஃ
மனப்பாட மந்திரங்களைச்
சரியாக உச்சரித்தால்தான்
சரசுவதி வரந்தரச்
சம்மதிப்பாளாம் !
தேர்வுக்கூடமென்னும்
நரகச் சுரங்கந்தான்
சொர்க்கத்திற்குச் செல்லும்
சுருக்கு வழியாம்.
ஃ ஃ ஃ
இந்தப் பல்கலைக் கழகங்கள்
வேலையில்லாதவர்களை
உற்பத்தி செய்யும்
தொழிற்சாலைகளா?
இந்தக் கல்வியால் இலாபம்
மூக்குக் கண்ணாடியில்
மூலதனம் போட்டவனுக்குத்தான் !
ஃ ஃ ஃ
நியூட்டன் விதியைவிடவும்
தலைவிதியை நம்பும்
தலைமுறை படைத்தோம் !
பட்டுப்போன ஒரு
பட்டதாரி கேட்கிறான் :
ஆயிரம் அட்சரங்கள் கற்று
ஆவதென்ன ?
வாழ்க்கைப் புத்தகத்தை
வாசிக்க முடியவில்லையே !
எல்லாப் பத்திரிகையிலும்
மணமகன் வேலைமட்டும்
காலியாயிருக்கிறது.
சிகரெட்டின் நுனியில் தெரியும்
நெருப்பைத் தவிர
வேறேதும், வாழ்க்கையில்
வெளிச்சமில்லை.

குட்டிபோடும் என நினைத்துப்
பிள்ளைகள்
புத்தகத்துக்குள் வைக்கும்
மயிலிறகு போல
பட்டம்மட்டும் பெயரோடு
பத்திரமாய் இருக்கிறது.
கல்விக்கூடம்
அவனைத் தன்னுள்
பதுக்கி வைத்திருந்து பிறகு
பிதுக்கி எறிந்துவிட்டது ;
அவனுக்கே அவன்
அந்நியமானான் !
ஃ ஃ ஃ
அவனது மாணவப்பருவம்
ஒரு
கடன் வாங்கிய வசந்தம் !
அவன் பாதங்களுக்குக்
கீழேயே
பாதைகள் முடிந்துவிட்டனவா ?
மண்வெட்டி பிடிக்கும்
திராணியைக்கூட
மனப்பாடக் கறையான்
தின்றுவிட்டது.
முதுகுக்குப் பின்னால் அஸ்தமனம் !
முகத்துக்கு முன்னால் இருள் !
மூளையின் பயன்படுத்தாத பரப்புக்களைக்
கத்தரித்து எடுத்துவிட்டு இந்தக்
கல்வி !
படை வீரர்களைப்
படைக்க வேண்டிய கல்வி
நடைநோயாளிகளைத் தயாரித்தது.
ஃ ஃ ஃ
பிச்சை புகினும் கற்கை நன்றாம் ?
கற்றபின் பிச்சை புகலும் நன்றோ ?
வாழ்க்கைக்கும் வகுப்பறைக்குமிடையே
தொங்கும் திரைச்சீலையைத்
துணித்து விடுங்கள் !
அது ஒன்றும்
திரௌபதியின் சீலையன்று.
பழைமையை ஆராதிக்கும்
பாடத் திட்டத்தை
நிரந்தரமாக நீக்கிவிடுங்கள் !
அது ஒன்றும்
கர்ணனின் கவசகுண்டலமன்று ;
கல்வித் திட்டத்தில் இருக்கும்
செயற்கை ஒப்பனைகளைக்
கலைத்து விடுங்கள்.
ஃ ஃ ஃ
ஆடம்பர அவசரத்தில்
புல்லாங்குழலைப் பொன்னில்
செய்துவிடாதீர்கள் !
அது
மூங்கிலாகவே இருக்கட்டும் !
ஃ ஃ ஃ



1997 - பரிசளிப்பு விழா
நிகழ்வுகள்



1997 - பரிசளிப்பு விழா
நிகழ்வுகள்



1997 - இல்ல
விளையாட்டுப் போட்டி
நிகழ்வுகள்

18204.

With Best Compliments

From

# N.J.A. & SONS

**EXPORTER, IMPORTERS,**
**FORWARDING AND CLEARING AGENTS**

24, SAN SEBASTIAN STREET,
COLOMBO -12.
T/PHONE : 471278.

# நன்னூலாரின் நல்லாசிரியனும் நல் மாணாக்கனும்

அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல்

கல்வி வளர்ச்சியில் பிரதானமாக சம்பந்தப்படுபவர்கள் இருவகையானோர் ஆவர். ஒரு வகையினர் ஆசிரியர், அடுத்தவர் மாணாக்கர்.

எல்லா ஆசிரியர்களும், எல்லா மாணவர்களும் ஒரே தரத்தையுடையவர்களல்ல. மாணவர்களால் விரும்பப்படும் நல்லாசிரியர்களுமுண்டு, அதேபோன்று விரும்பப்படாததோருமுண்டு. இவர்களைத் தரம்பிறித்தறிந்து, எல்லோரையும் நல்லாசான்களாகவும், நல் மாணாக்கராகவும் சமூக வயப்படுத்தலே கல்விக் கொள்கைகளினதும், திட்டங்களினதும், முறைகளினதும் நோக்கமாகும்.

இதனைப்பற்றி நன்னூல் மிக விளக்கமாகக் கூறுகிறது. நன்னூல் என்பது பழந்தமிழ் இலக்கண நூலொன்றாகும். சீயகங்கனுடைய காலத்தில் பவணந்தி முனிவனால் இது ஆக்கப்பட்டது. இந்நூலுக்கான காண்டிகையுரையைத் திருத்தியும் விளக்கியும் கூட்டியும் புதுக்கியும் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் உரை எழுதியுள்ளார்.

இந்நூலின் ஆரம்பப் பகுதியில் பொதுப்பாயிரம் எனும் பிரிவொன்றுண்டு. இப்பிரிவில் நூலினது வரலாறு, ஆசிரியனதுவரலாறு, பாடஞ் சொல்லுதலினது வரலாறு, மாணாக்கனது வரலாறு, பாடம் கேட்டலின் வரலாறு எனும் பகுதிகள் உள்ளன.

*நல்லாசிரியரின் குணாம்சங்களைப்பற்றி நன்னூல் பின்வருமாறு கூறுகிறது.*

*குலனரு டெய்வங் கொள்கை மேன்மை*
*கலைபயி றெளிவு கட்டுரை வன்மை*
*நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்*
*உலகிய லறிவோ டுயர் குண மினையவும்*
*அமைபவ னுலுரை யாசிரி யன்னே.*

உயர்குடிப்பிறப்பும், சீவகாருண்ணியமும், இறைவழிபாடுமாகிய இவைகளால் எய்திய மேன்மையும், பல நூல்களோடு பரிச்சயமும் நூற்பொருளை மாணாக்கர் எளிதில் உணரும்படி தொகுத்துச் சொல்லும் வல்லமையையும், நிலத்தையும் / மலையையும் / துலாக்கோலையும் பூவையுமொத்த குணங்களையும், உலக நடப்புக்களை அறியும் புத்தியும், உயர்வான குணங்களையும் நிறையப் பெற்றவன் நல்லாசிரியனாவான்.

*இதே போன்று நல்லாசிரியராகாதவருடைய குணங்களையும் நன்னூலார் கூறியுள்ளார்.*

*மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும்*
*அழுக்காறவா வஞ்ச மச்ச மாடலுங்*
*கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை*
*முடத்தெங் கொப்பன முரண்கொள் சிந்தையும்*
*உடையோ ரிலரா சிறியராகுதலே.*

பாடஞ் சொல்லும் குணமில்லாமையையும், இழிகுணமாகிய இயற்கையையும், பிறருக்கு வரும் கல்வியைக் குறித்துப் பொறாமையையும், பணத்தின் மேல் அதிகமாக வைக்கும் ஆசையையும், மெய்ப்பொருளைக் காட்டி வஞ்சித்தலையும், கேட்போர்க்கு அச்சம் உண்டாகப் பேசுதலையும், கழற்குடமும், மடற்பனையும், பருத்திக் குண்டிகையும், முடத்தெங்கும் ஆகிய நான்கினையும் ஒப்பென்று சொல்ல, மாறுபாடு கொண்ட கருத்தையும் தம்மிடத்திலுடையவர் கற்பிக்கும் ஆசிரியராகுதல் இலராவர்.

நன்னூலாரின் வரைவிலக்கணம் எக்காலத்துக்கும் பொருந்துவதாகும். ஆசிரியத் தொழிலை தமது வாழ்க்கைப்பணியாக வரித்துக் கொள்வோர், வெறுமனே சம்பளத்துக்குப் பணிபுரியாது, வருங்காலச் சமுதாயமொன்றை உருவாக்கும் புனித பணியாக அதனைக் கொள்ளல் வேண்டும். இதற்குத் துணையாக, தமது அறிவு நிலையை என்றென்றும் மேம்படுத்திக் கொள்ளவேண்டும். தமது பாடப்பரப்புக்களைப் பற்றிய பூரண அறிவும், தெளிவும், இருப்பதோடு, தொடர்ச்சியான பொது வாசிப்பும் மிக அவசியமாகும்.

நல்லாசிரியரைப்பற்றிக் கூறிய நன்னூலார், நல்மாணாக்கரின் குணாம்சங்களையும் எடுத்துக் கூறுகிறார்.

*அன்னமாவே மண்ணொடு கிளியே*
*இல்லிக் குடமா டெருமை நெய்யரி*
*அன்னர் தலையிடை கடை மாணாக்கர்.*

மாணவர்களை மூன்று பிரிவனராக வகுக்கலாம். அன்னத்தையும் பசுவையும் போன்றவர்கள் முதல் மாணாக்கர். அன்னம் பாலையும் நீரையும் வேறு பிரித்துப் பாலை மாத்திரம் குடிக்கும். முதல் மாணாக்கர் குணத்தையும் குற்றத்தையும் வேறுபிரித்துக் குணத்தை மாத்திரம் கொள்வர். பசு, மிகுந்த புல்லையுடைய இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிறையமேய்ந்து பின்பு ஓரிடத்தில் போய்ப் படுத்துக் கொண்டு சிறிது சிறிதாக வாயில் வருவித்து மென்று தின்னும்.

நடு மாணாக்கர், மண்ணையும் கிளியையும் போன்றவராவார். விவசாயிகள் வருந்திப் பயிர்செய்யும் முயற்சி அளவினதாகிய விளைவையே மண்தரும். தனக்குக் கற்பிக்கப்பட்ட சொல்லையன்றி வேறொன்றையும் கிளி சொல்ல மாட்டாது.

கடை மாணாக்கரானவர் ஓட்டைக் குடம், ஆடு எருமை, பன்னாடை என்பவர் போலாவர். ஓட்டைக் குடத்தில் நீரைவிட்டால் அது ஒழுகிவிடும். ஆடு ஒரு செடியிலே தளை நிறைந்திருந்தாலும் வயிறு நிறைய அவ்விடத்திலேயே மேயாது செடிதோறும் அலைந்து திரிந்து மேயும். எருமை, தெளிந்த குளத்து நீரைக் கலக்கி விட்டுத்தான் குடிக்கும். பன்னாடையானது தேன் முதலியவற்றைக் கீழே விட்டு விட்டு அதிலுள்ள குப்பை கூளங்களையும் பூச்சி புழுக்களையும் பற்றிக் கொள்ளும்.

மாணாக்கர் ஆகாதவரைப் பற்றியும் நன்னூல் சூத்திரம் ஒன்றுள்ளது.

*களிமிடி மானி காமி கள்வன்*
*பிணிய னேழை பிணக்கன் சினத்தன்*
*துயில்வோன் மந்தன் றொன்னூற் கஞ்சித்*
*தடுமாறுளத்தன் தறுகணன் பாவி*
*படிறனின் னோர்க்குப் பகரார் நூலே.*

மது அருந்துபவன், சோம்பேறி, அகங்காரம் உடையவன், காமம் உடையவன், திருடன், நோயாளி, அறிவில்லாதவன், மாறுபாடுடையவன், கோபமுடையவன், அளவுக்கு மீறி நித்திரை செய்பவன். புத்தி நுட்பம் இல்லாதவன், பழைய நூல்களைக்கண்டு அஞ்சித் தடுமாறும் உள்ளத்தையுடையவன், அஞ்சத் தக்கவைகளுக்கும் அஞ்சாதவன், பாவம் செய்பவன், பொய்பேசுபவன் ஆகியோர் மாணாக்கர் ஆகார் என நன்நூல் கூறுகின்றது.

மாணவப் பருவத்திலல்லாது, வளர்ந்தபின்னரே உருவாகக் கூடிய சில பண்புகளும் மேலே கூறப்படுவதைக் காண்கிறோம். இதற்கான காரணம் யாதெனில், இன்று பாடசாலைகளில் வயதுக் கட்டுப்பாடுகள் உள்ளபோன்று, அக்காலத்தில் ஆசிரியரொருவரிடம் பாடம் கேட்பதற்கு வயதெல்லை கிடையாது. குருகுலத்திலோ அல்லது பிற்காலத்தில் திண்ணைப் பள்ளிக் கூடங்களிலோ சிறுவர்கள் மட்டுமல்லாது வளர்ந்தோரும் கல்வி கற்பர். 'கல்விக்குக் கரையில; அதேபோன்று கற்பதற்கும் வயதில' எனும் கொள்கைக்கேற்ப அக்காலக் கல்விமுறையிலான பந்தியில் வயதுக்கட்டுப்பாடும் கிடையாது. பாடசாலை முறை வந்ததன் பின்னரே வயதெல்லை நிர்ணயம் ஏற்பட்டது.

கற்பித்தல் ஆசிரியரின் பணி; கற்றல் மாணவர் கடன். கற்பித்தலை எவ்வாறு திறம்படச் செய்ய முடியும் எனும் வழிவகைகளை நன்கறிந்த ஆசிரியரினாலேயே அப்பணியைச் சிறப்பாகச் செய்யமுடியும். அதேபோன்று கற்றலை எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பதை அறிவதன் மூலம் மாணவன் தன் நிலையை உயர்த்த முடியும். இவற்றினைப் பற்றியும் பவணந்தி முனிவர் தனது நன்னூலில் வரையறுத்துள்ளார்.

ஆசிரியர் கற்பிக்கும் முறையினை அவர் பின்வருமாறு கூறுகிறார்:
ஈதலியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னோக்கிச்
சிந்துழி யிருந்துதன் றெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முக மலர்ந்து
கொள்வோன் கொள்கையறிந்தவ னுளங்கொளக்
கோட்டமின் மனத்தினுல் கொடுத்தலென்ப.

பாடஞ் சொல்லுதலினது வரலாற்றைச் சொல்லும் போது, உரிய காலத்தையும் உரியவிடத்தையும் தூயனவாகப் பார்த்து, சிறந்தவிடத்திலிருந்து, தான்வழிபடு இறைவனைத் துதித்து, பாடஞ் சொல்லப்படும் பொருளைத் தன் கருத்தின் கண் நிறைத்து, விரையானாகியும் கோபம் செய்யானாகியும் இச்சித்து முகமலர்ச்சியடைந்து, கேட்பவனது கேட்கும் அறிவின் வகையை அறிந்து, அவனது மனம் ஏற்றுக் கொள்ள மாறுபாடில்லாத மனத்துடனே கற்பித்தலாகும்.

*இவ்வாறு கற்பிக்கப்படுவதை மாணவர் எவ்வாறு கற்க வேண்டும் என்பதும் இங்கு கூறப்படுகின்றது.*


*கோடன் மரபே கூறுங்காலைப்*
*பொழுதொடு சென்று வழிபடன் முனியான்*
*குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்*
*திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்*
*பருகுவ னன்னவார் வத்த னாகிச்*
*சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்*
*செவிவா யாக நெஞ்சுகள னாகக்*
*கேட்டவை கேட்டவை விடாதுளத் தம்மைத்துப்*
*போவனப் போதா லென்மனார் புலவர்.*

பாடங் கேட்டலினது வரலாற்றைச் சொல்லும்பொழுது, நேரகாலத்தோடு போய், வழிபாடு செய்தலில் வெறுப்பில்லாதனவாகி, ஆசிரியரின் குணத்தோடு பொருந்தப் பயின்று, அவன் குறிப்பின் வழியிலே சேர்ந்து, இருவென்று சொன்னபின் இருந்து, படியென்று சொன்னபின் படித்து, பசித்துண்பவனுக்கு உணவினிடத்துள்ள ஆசை போலப் பாடங்கேட்டலில் ஆசையுடையவனாகி, சித்திரப் பவையைப் போல் அவ்வசைவறு குணத்தினோடு அடங்கி, காதானது வாயாகவும், மனமானது கொள்ளுமிடமாகவும் முன்கேட்கப்பட்டவற்றை மீண்டும் கேட்டு, அப்பொருள்களை மறந்துவிடாது உள்ளத்தின் கண் நிறைத்துக் கொண்டு, போ என்றபின் போகுதலாகும்.

நல்லாசிரியரின் வழிகாட்டலின் மூலம் மாணவர் அனைவரும் அறிவினைப் பெற வேண்டுமென்பதே கல்வியியலாளரின் அவாவாகும். நுண்புத்தி என்பது பிறப்பாலும் வளர்ப்பாலும் வருவதாகும். அதனைக் கொண்டு தமது கல்வி நிலையை மேம்படுத்திக் கொள்ளல் மாணவர் கடனாகும். அதற்காக மாணவப் பருவத்திலே கல்வியையும் அதனோடு சார்ந்தவற்றையும் தவிர வேறெதிலும் கவனத்தைத் திருப்பக் கூடாது. பாடசாலை நடைபெறும் எல்லா நாட்களிலும் பாடசாலைக்கு வர வேண்டு. பாடசாலை ஆரம்பிப்பதற்கு ஐந்து, பத்து நிமிடங்களுக்கு முன்பாவது பாடசாலைக்கு வந்து விடல் வேண்டும். தமது புத்தகங்கள், கொப்பிகள், உபகரணங்கள் யாவும் ஒழுங்காகவும், புனிதமாகவும் பேணப்படுவதோடு, மாதாந்தப் பரீட்சைகள், தவணைப் பரீட்சைகள், வருடாந்தப் பரீட்சைகளுக்கு மிகக் கிரமமாகத் தோற்றி, அவற்றில் மிகத் திறமையாகச் செய்தலும் வேண்டும்.

தமது உடை, ஒழுக்கம், நடத்தை முதலியவற்றிலும் மாணவர் கவனம் செலுத்த வேண்டும். துப்புரவான உடை அணிவதோடு, தலைமயிர், நகம் முதலியன அலங்கோலமாயிருத்தல் கூடாது. நல்ல வார்த்தைகளைப் பேசுதல், நல்ல விடயங்களைச் சிந்தித்தல், நல்ல காரியங்களில் ஈடுபடல், பாடசாலையில் நடைபெறும் புறக்கிருத்தியங்கள் அனைத்திலும் கலந்து கொள்ளல், தமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், ஊழியர் அங்குவரும் வெளியார் அனைவருக்கும் மிகுந்த மரியாதை செலுத்துதல் போன்ற பயன்பாடுகளைப் பழகி அதன்படி ஒழுகுவதன் மூலம் எமது மாணவர் அனைவருமே தலை மாணாக்கராக முடியும்.

–அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல் எம். ஏ –
ஆலோசகர், கலாசார சமய அலுவல்கள் அமைச்சு



*With Best Compliments*

*From*

# Kumaran's Oil Stores

General Merchants & Commision Agent
Importers & Exporters Dealers in Coconut Oil & Poonac

No. 190, Gasworks Street,
Colombo - 11

Tel : 440513
Fax : 435188

*With Best Compliments*

*From*

# SRI KUMARAN (PVT) LTD.

General Merchants & Commission Agents

**No. 190,Gas works Street,**
**Colombo - 11**
**Tel: 074-717799**
**Fax - 435188**

18204



1998 - வாணி விழா

1998 - பரிசளிப்பு விழா



செல்வி ஜெ. ஜெயவதனி



## இஸ்லாமிய மன்றம்

***இருப்பவர்கள் -*** இடமிருந்து வலமாக
திருமதி. ஹ. ஷருக் (பொறுப்பாசிரியை)
திருமதி. இ. இராஜரட்ணம் (அதிபர்)
செல்வி. வி. அஸ்மியா (தலைவர்)

***நிற்பவர்கள்:-*** செல்வன். எல். ஷப்ராஸ்,
செல்வன், ஆர். இம்தியாஸ் (பொருளாளர்)
செல்வன் எம். இம்தாத் அகமட் (உப தலைவர்),
செல்வன். ஆர். கலீலுள் ரஹ்மான் (செயலாளர்)

With Best Compliments

From

# INOKA GROCERIES

No 367/1, Aluth Mawatha,
Colombo 15.

*With Best Compliments*

*From*

# NEW REGAL PHARMACY

DISPENSING, CHEMISTS, DRUGGISTS
GROCERS & DEALERS IN FANCY GOODS

374, Galle Road, Wellawatte,
Colombo 6.
Telephone : 582492

# ஓ மனிதர்களே,
# நில்லுங்கள் இதோ ஆசிரியத்துவம்

கற்பூரம்!
தன்னை எரித்துக் கொண்டு
ஒளி காலுகிறது.
சாம்பிராணி!
தன்னைச் சிதைத்துக் கொண்டு
சுகந்தம் வீசுகிறது.
ஊதுவத்தி!
உதிர்ந்து சாம்பலாகிக் கொண்டு
நறுமணம் உமிழ்கிறது.
அந்த வரிசையில்
அதையொத்த மறுபதிப்பு!
ஆசிரியர்கள் தான்!
உயரத்தில் இருப்பவர்களே!
விண்ணை விசாரிப்பதை விடுத்து
மண்ணை விசாரியுங்கள்!
உங்கள் வாழ்க்கையின் பின்னால்
எங்காவது ஓர் ஏணியாய்!
ஒரு தோணியாய்!
ஓர் ஆசிரியன் இருப்பான்!
பாரதக் கதைக்கு
வள்ளலாய் வந்தவன்
ஒரு கர்ணன் தான்.
ஆனால்!
இப் பாரினில்
கல்விச் செல்வத்தை
வாரி வழங்கும்
ஓராயிரம் கர்ணன்கள்
ஆசிரியர்கள் தான்!
முல்லைக் கொடிக்குத்
தேர்ந்தான் பாரி - அன்று
ஆனால் கல்வித் தேருக்கு
அச்சாணியானார்கள்
ஆசிரியர்கள் இன்று!
வாழ்வின் துயரங்களுக்குள்
தொலைந்து போன
ஒவ்வொரு மனிதனும்
நீங்கள் ஆக்கித்தந்த
பாதையில் பயனித்தவர்கள் தான்!
ஏனோ சிலர்
வேரை மறந்துவிடுகின்றனர்
ஆனால்!
நீங்கள்
அந்த வேருக்கடியில்
தீ மூட்டுவதே இல்லை!
மாறாக
நீரூற்றுவீர்கள்!
சில கண வாழ்க்கையில்
யுகங்களைக்காட்டும்
ஞானிகளே!
திரிந்து போன உலகுக்கு
திரியாகி ஒளியூட்டுவது
உங்கள் இனம் மட்டுமே!
இங்கே!
சொர்ப்பனத்தில் கூட
அர்ப்பணங்களுக்கு
எவருமே சம்மதிப்பதில்லை!
ஆனால் நீங்கள்
உங்கள் ஆசைகளைச்
சொப்பனமாக்கி விட்டு
அர்ப்பணத்தையே
உடமையாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்!
நீங்கள் நினைத்தால்!
பூமியைப் புனிதமாக்கலாம்!
கொதித்தால்!
பூகம்பமே தோற்றுவிக்கலாம்!
நீங்கள் எப்போதும்
எங்கள் வாழ்வுக்காய்
பூத் தூவுவீர்கள்!
பூமாலை புனைவீர்கள்!
உங்களுக்காய்
என்றென்றும் - எம்
இதயப் பூங்காக்களை
நினைவுப் பூக்களால்
நிறைத்திருப்போம்!

திரு. பொன் செல்வவேல்

*With Best Compliments*

*From*

# GOLDEN ENTERPRISES

*Importers Of Sanitaryware Dealers in P.V.C. Pipes & Fittings*

161/3, Messenger Street,
Colombo - 12
Tel : 432454, 335600

1998-ஆசிரியர் தின விழா



அதிபர் திருமதி இ. இராசரத்தினம், பிரதி அதிபர் திரு. பொ.மகாலிங்கம்




1998 - பரிசளிப்பு விழா

அதிபர், பிரதி அதிபருடன் நீலகண்டன் தம்பதிகள்

1998 - பரிசளிப்பு விழா

திரு. கந்தையா நீலகண்டன்



## *தெரிந்து கொள்ளுங்கள்*

**25 ஆவது ஆண்டை வெள்ளி விழாவாகவும், 50 ஆவது ஆண்டைப் பொன் விழாவாகவும் கொண்டாடுகிறோம் அல்லவா? அதேபோல் ஒவ்வொரு ஆண்டுக்கும் தனித்தனிப் பெயர்கள் உள்ளன. அவை வருமாறு:**

முதல் ஆண்டு – காகிதம்
இரண்டாம் ஆண்டு – பருத்தி
மூன்றாம் ஆண்டு – தோல்
நான்காம் ஆண்டு – புத்தகம்
ஐந்தாம் ஆண்டு – இரும்பு
ஆறாம் ஆண்டு – மரம்
ஏழாம் ஆண்டு – வெண்கலம்
எட்டாம் ஆண்டு – மண்பானை
பத்தாம் ஆண்டு – நகரம்
பதினொராம் ஆண்டு – எஃகு
பன்னிரண்டாம் ஆண்டு – பட்டு
பதின்மூன்றாம் ஆண்டு – சரிகை
பதின்நான்காம் ஆண்டு – தந்தம்
பதினைந்தாம் ஆண்டு – பளிங்கு
இருபதாம் ஆண்டு – பீங்கான்
இருபத்தைந்தாம் ஆண்டு – வெள்ளி
முப்பதாம் ஆண்டு – முத்து
முப்பத்தைந்தாம் ஆண்டு – பவளம்
நாற்பதாம் ஆண்டு – கெம்பு
நாற்பத்தைந்தாம் ஆண்டு – நீலக்கல்
ஐம்பதாம் ஆண்டு – பொன்
அறுபதாம் ஆண்டு – வைரம்
எழுபத்தைந்தாம் ஆண்டு –பிளாட்டினம்

We Welcome our

Well Wishers

# Ramlankan Phots

Professional Video Graphers
& Photographers

30 A, Perera Lane,
Colombo - 06
Tel : 586075, 072-608130

*With Best Compliments*

*From*

# SWISS PARADISE

All kinds of tailoring items
make up items and tremings etc..

465,A GALLE ROAD,
COLOMBO - 6.

*With Best Compliments*

*From*

# F. R. BAG CORNER

Dealers in School Bags, Travelling Bags,
Ladies Bags, Fancy Goods & Winter Jackets Etc.
Van For Hire

No.350, Galle Road,
Clombo - 6.Tel : 074-202980
500672

*With Best Compliments*

*From*

**Credit Imports Ceylon (Private) Limited**

558, Sri Sangaraja Mawatha,
Tel : 323181

# 21ம் நூற்றாண்டை நோக்கிய கல்விச் செல்நெறிகள்

---------------- பேராசிரியர் சோ.சந்திரசேகரன் ----------------

எதிர்காலம் எவ்வாறிருக்கும்? 21ஆம் நூற்றாண்டின் சமூக, பொருளாதார நிலைகள் என்ன? புதிய நூற்றாண்டில் மனித சமூகம் எதிர் நோக்கவிருக்கும் சவால்கள், நிலைமைகள், தேவைகள் யாவை? இவ்வினாக்களுக்கு விடைகாணும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு என உணரப்பட்டுவிட்டதால், 20ஆம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களில் 21ஆம் நூற்றாண்டின் போக்குகள் பற்றிய சிந்தனைகளை முன்வைக்கும், அறிஞர்கள் மிகுந்து விட்டனர்; அவற்றைக் கொண்ட ஆய்வுகளும் நூல்களும் கூட இன்று மிகுந்து வருகின்றன.

அவை கூறுகின்ற கருத்துக்களின்படி கல்வித்துறையிலும் கற்றல் செயற்பாட்டிலும் ஏற்படக்கூடிய முக்கிய மாற்றம் 'வாழ்க்கை நீடித்த கல்வி' எனும் சிந்தனை புதிய நூற்றாண்டில் பெரிதும் முக்கியத்துவம் பெறும் என்பதாகும். 1996 ஆம் ஆண்டின் யுனெஸ்கோவின் கல்வி பற்றிய அறிக்கை (Jacques Delors) இதனையே வலியுறுத்துகின்றது. இக்கருத்தின்படி, ஒருவருடைய வாழ்க்கை முழுவதும் அவரது கல்வி நீடிக்கும் வகையில் கல்வி முறையில் மாற்றம் ஏற்படவுள்ளது. முறை சாராக்கல்வி ஏற்பாடுகளும் முறையில் கல்வி வசதிகளும் தொலைக்கல்வி நிறுவனங்களும் வேலையில் அமர்ந்திருப்பவர்கள் வாய்ப்புகள் கிட்டும்போது தொடர்ந்து கல்வி பெற உதவுவன. எனவே இதற்கேற்ப பாடசாலைக் கல்வியாலும் சில மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

பல்வேறு பாடநெறிகளையும் அவற்றின் அறிவுத் தொகுதியை மட்டும் பரீட்சை நோக்கங்களுக்காக வலியுறுத்தாது பாடசாலைக் காலத்தின் பின்னரும் கல்வியை வாழ்நாள் முழுவதும் தொடர்வதற்கான ஊக்கலையும் (Motivation) கற்றலுக்கான ஒழுக்க நெறியையும் (Discipline) அம்மாற்றங்கள் வழங்குதல் வேண்டும்.

பாடசாலைக் கல்வி, அறிவுத் தொகுதியைக் கற்பிப்பதுடன் மாணவர்கள் தாமாகக் கற்பதற்கான கற்றல் திறன்களையும் வழங்குதல் வேண்டும் (Self Learning Skills) 'வாழ்க்கை நீடித்த கல்வி' என்னும் நோக்கை நிறைவு செய்யப் பாடசாலைகள் குறிப்பிட்ட வயதெல்லையினருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாது ஏற்கனவே நன்கு கற்றவர்களுக்கும் இளமையில் கல்வி வாய்ப்புக்களை இழந்தவர்களுக்கும் இடமளிக்கும் வகையில் மறுசீரமைப்புச் செய்யப்படல் வேண்டும்.

மேலும், இந்நோக்கினை அடைய பாடசாலை மட்டுமே கல்வியை வழங்கும் ஏகபோக உரிமை கொண்டது என்ற மரபுவழிச் சிந்தனை கைவிடப்படல் வேண்டும். முழுச்சமூகமும் அதன் பல்வேறு ஸ்தாபனங்களும் கல்விச் சாதனங்களாகவும் போதனா நிலையங்களாகவும் உருப்பெற வேண்டும். அரசாங்க நிறுவனங்கள், வர்த்தக, தொழில் தாபனங்கள், அரசாங்கச் சார்பற்ற இலாபம் கருதாத ஸ்தாபனங்கள் போன்றன போதனா நிலையங்களாக மாறவேண்டும். பாடசாலைகள் இத்தாபனங்களுடனும் தொழில் உரிமையாளர்களுடனும் இணைந்து செயற்படல் வேண்டும்.

புதிய நூற்றாண்டை அறிவுமைய–தகவல்மைய நூற்றாண்டு என்றும் அந்நூற்றாண்டில் வாழும் சமூகத்தை 'அறிவார்ந்த சமூகம்' என்றும் இச்சிந்தனையாளர்கள் வர்ணிக்கின்றனர். பொருளுற்பத்திக்கான அடிப்படைக் காரணிகள் இயற்கைவளம் (நிலம்), உழைப்பு, மூலதனம் என்ற நிலை இரண்டாந்தரமாக்கப்பட்டு முறையான அறிவே பிரதான பொருளாதார வளம் என்ற நிலை உருவாகி வருகின்றதையே இவை குறிக்கின்றன.

அறிவினூடாக இம்மூன்று மரபுவழி உற்பத்திக் காரணிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்; மரபுவழிச் சிந்தனையின்படி, அறிவு என்பது ஒருவனது சுய ஆளுமை வளர்ச்சிக்குத் துணைபுரிவது; அறிவு அதனை நாடுபவனைப் பண்படுத்துகின்றது. நவீன சிந்தனையின்படி, அறிவானது தனிமனிதனுக்கு அப்பால் சமூகத்திற்கும் பொருளாதார முறைக்கும் பயன்தருவது; அதன் பெறுபேறுகளும் விளைவுகளும் அவனைக் கடந்து வெளியே ஏற்படுகின்றன; இன்று 'அறிவு' பெற்றிருக்கும் புதிய கருத்து, அறிவைப் பயன்படுத்தி சமூக– பொருளாதார மேம்பாட்டைப் பெறல் வேண்டும் என்பதாகும்.

கடந்த மூன்று நூற்றாண்டுகளாக ஏற்பட்டுவந்த அறிவு வளர்ச்சியின் தொடர்ச்சியாகவும் விளைவாகவுமே புதிய நூற்றாண்டானது அறிவுமைய நூற்றாண்டு என்று பெயர் பெற்றது. இவ்வறிவு வளர்ச்சியில் விஞ்ஞானத்துக்கு ஒரு முக்கிய பங்குண்டு. தற்போதைய மதிப்பீடுகளின்படி ஒவ்வொரு 10–12 ஆண்டுகளில் அறிவுத் தொகுதி இருமடங்காகப் பெருகி வருகின்றது. 1990களில் (1990 – 2000) ஏற்படும் கண்டுபிடிப்புக்களும் அறிவுத்துறை விரிவாக்கமும் கடந்த பல நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அத்தனை அறிவுவளர்ச்சியுடன் ஒப்பிடக்கூடியதாக அமையும் என அம்மதிப்பீடு தெரிவிக்கின்றது. அறிவு வளர்ச்சி மட்டுமன்றி அறிவு உலகளாவியரீதியில் பரவும் வேகமும் துரிதமாகியுள்ளது. இத்தகைய விஞ்ஞான – தொழில்நுட்ப – மைய அறிவு வளர்ச்சியானது கல்வித்துறையைப் பொறுத்தவரையில் விசேட முக்கியத்துவம் கொண்டது.

மரபு வழியாக மனிதன் யதார்த்த உலகை நன்கு புரிந்து கொள்ள அறிவுத்தொகுதியைப் பல்வேறு கல்வி நெறிகளாகப் (வரலாறு, புவியியல், பொருளியல், பௌதீகம், கணிதம்....) பிரித்து ஆராய்ந்தான். ஆனால் இன்று எப்பிரச்சனையையும் ஆராயப் பல்வேறு

கல்வி நெறிகளை உள்ளடக்கிய பல்துறை நெறிகள் சார்ந்த அறிவு தேவைப்படுகின்றது. ஒரு நிலைமையை அதன் முழுமையிலிருந்தும் அவற்றின் பகுதிகளுக்கிடையேயுள்ள இடைத் தொடர்புகளிலிருந்துமே சரியாகப் புரிந்து கொள்ளலாம் என்பதே தற்போதைய தேவையாக உள்ளது. இத்தகைய போக்குக்களையும் கல்வித்துறை உள்வாங்கி அதற்கேற்றவாறான நவீன பாட ஏற்பாடு உருவாக்கப்பட வேண்டியுள்ளது. எனவே புதிய நூற்றாண்டில் இடம் பெறவிருக்கும் பாட ஏற்பாட்டுப் புத்தாக்கம் பல்வேறு கல்வி நெறிகளையும் கொண்ட பாடத் துண்டங்களாகச் (Modularaization of Disciplines) சீரமைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய பாடத்துண்டங்கள், பாடநெறிகளுக்கிடையே வழமையாகவுள்ள தனித்தன்மையையும் நெகிழ்வற்ற தன்மையையும் நீக்க உதவுகின்றது. பல்வேறு பாடநெறிகளும் கையாள இலகுவான சிறுசிறு பாடத்துண்டங்களாக ஒழுங்கமைக்கப்படும் போது, அறிவுத் தொகுதி பல்வேறு பாடநெறிகளுக்குள்ளடங்கிக் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலை அகற்றப்படுகின்றது.

விஞ்ஞான – தொழில்நுட்ப அறிவுத்தொகுதியில் ஏற்பட்டு வரும் பன்மடங்கு பெருக்கம் இன்று 'அறிவுமைய' சமூகங்களின் எழுச்சிக்குக் காரணமாகியுள்ளது. அச்சமூகங்களில் அறிவே அடிப்படை மூலதனமாகின்றது. விஞ்ஞான – தொழில் நுட்ப அறிவு, நாடுகளின் பொருளாதார உற்பத்தி முறைகளைத் தீர்மானிக்கின்றது. சமூக – பொருளாதார அமைப்பின் நிறுவனங்கள் இப்புதிய அறிவுத் தொகுதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. சமூக விழுமியங்களும் நியமங்களும் இப்புதிய அறிவினதும் அதனைக் கையாளும் புதிய வகுப்பினரான அறிவுத்துறை ஊழியர்களினதும் செல்வாக்கிற்குட்படுகின்றன. உற்பத்தி, செல்வம், செழிப்பு என்பன அறிவையும் திறனையும் கல்வித்தேர்ச்சியையும் மூலதனமாகக் கொண்டமையும் புதிய சமூகத்தில் முதலாளி – தொழிலாளி என்ற வகுப்புகளுக்குப் பதிலாக அறிவுத்துறை ஊழியர், சேவைத்துறை ஊழியர் என்ற புதிய வகுப்புக்கள் உருவாகும் என்பது எதிர்காலவியல் சிந்தனையாளரின் கருத்து. அவர்களுடைய நோக்கில் முதலாளித்துவ அமைப்பில் முதலாளிகள் தமது மூலதனத்தை உற்பத்தி நோக்கி ஒதுக்கீடு செய்தவிடத்து நவீன சமூகத்தில் புதிய அறிவுத்துறை ஊழியர்கள் அறிவை உற்பத்திப் பெருக்கத்துக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைத் தீர்மானிப்பர்; முதலாளித்துவ அமைப்பில் தொழிலாளர்கள் உற்பத்திக் காரணிகளின் உரிமையாளர்கள் அல்லர்; ஆனால் புதிய சமூக அமைப்பில் அறிவுத்துறை ஊழியர்கள் அறிவு என்னும் புதிய உற்பத்திக்காரணியின் உரிமையாளர்களாகவிருப்பர்; அதனை விரும்பிய போது வேறு இடத்துக்குக் கொண்டு செல்லும் உரிமையுடையவர்கள்;

எதிர்காலத்தைச் செம்மைப்படுத்துவதில் விஞ்ஞான தொழில் நுட்ப அறிவு முக்கிய பங்கு கொள்கின்றது. நடந்தேறிவரும் அறிவுப் புரட்சியுடன் இணைந்து கொள்ள வளர்முக நாடுகள் புதிய கல்வி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. புதிய பூகோள மயமாக்க யுகத்தில் வளர்ச்சியடைந்த மேலைநாடுகள் தமது அறிவுத்தொகுதி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பவற்றைப் பயன்படுத்திப் பொருளாதார செழிப்பை அனுபவிக்கும் போது வளர்முக நாடுகள் இப்பாதையைத் தவிர்த்து வேறுபட்ட அபிவிருத்தி மாதிரிகளைப் பின்பற்ற முடியாத நிலை தோன்றியுள்ளது.

புதிய நூற்றாண்டின் அறிவு – மைய சமூகத்தில் அறிவை உருவாக்கிப் பேணிப்பாதுகாக்கும் பணியானது மனிதனைச் சார்ந்தது; இதனால் அச்சமூகத்தில் கல்விக்குப் பெரும் முக்கியத்துவம் உண்டு. அறிவுமைய சமூகமானது மனித ஆற்றலில் தங்கியிருப்பது; மனிதனின் சிந்தனைவளம், படைப்பாற்றல், புத்தாக்கத் திறன் என்பவற்றையே அறிவு – மைய சமூகம் கருதுகின்றது. இப்போக்கில் மனிதனை வளப்படுத்தப் பழைய கல்வி முறைமைகளும் கல்வி அனுபவங்களும் பயன்படமாட்டா. புதிய நூற்றாண்டின் சவால்களையும் நிலமைகளையும் எதிர்கொள்ள கல்விச் செயற்பாட்டை விஞ்ஞான – தொழில்நுட்ப அறிவுத் தொகுதியைக் கொண்டு வலுப்படுத்தல் வேண்டும்; மனித ஆற்றல் முழுமையாக வெளிப்படுவதைத் தடைசெய்யும் காரணிகளான மூடப்பழக்க வழக்கங்கள், பழைமைவாத சித்தாந்தங்கள் என்பனவற்றை அகற்ற இவ்வறிவுத் தொகுதி பயன்படும்.

கல்வி முறைமையின் அறிவார்ந்த நிலையங்களான பல்கலைக்கழகங்கள் , ஆராய்ச்சி நிறுவனங்கள், கல்லூரிகள் என்பவற்றின் பணிகளாவன; அறிவாக்கம், புத்தாக்கங்களையும் படைத்தல், சமுதாய அபிவிருத்தியையும் மாற்றங்களையும் மேம்படுத்தல் என்பன. இப்பணிகளின் அடிப்படையிலேயே வளர்முக நாடுகளின் கல்வி முறைமையில் விஞ்ஞானம் – தொழில் நுட்பத்தின் பங்கு வரையறை செய்யப்படுகின்றது. மேலும், இந்நாடுகளின் வறுமை, பசி, பிணி, எழுத்தறிவின்மை, சுகாதாரக் கேடு, மூடநம்பிக்கை முதலாம் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள விஞ்ஞான அறிவையே நாடவேண்டியுள்ளது.

வளர்முக நாடுகளில் இடம் பெற்றுள்ள தற்போதைய விஞ்ஞானக் கல்வி அடுத்த கல்வி நிலைக்கான ஆயத்தப்பயிற்சியாகவும் பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் எனப் பகுக்கப்பட்டும் கற்பிக்கப்படுகின்றது; அத்துடன் விஞ்ஞானம், தொழில்நுட்பத்துடன் தொடர்புபடுத்தப்படாது கற்பிக்கப்படுகின்றது. இக்குறைபாடுகள் தவிர்க்கப்பட்டு விஞ்ஞான – தொழில் நுட்பக் கல்வி பரந்துபட்ட களத்தைக் கொண்டதாய் சகல மாணவர்களுக்கும் கிடைக்கக்கூடியதாய் அமைதல் வேண்டும். பாடசாலை மட்டத்தில் விஞ்ஞானக் கல்வி, கோட்பாடுகளுடன் பிரயோக அம்சங்களையுங் கொண்டமைதல் வேண்டும். தொழில்நுட்ப, விஞ்ஞான இணைப்பும் முக்கியமானது. மேற்படிப்பு, நாளாந்த பிரச்சனைகளை எதிர்கொள்ளல், வேலை உலகில் இணைந்து கொள்ளல் என்னும் பல்வகை நோக்கங்களையும் கொண்டதாய் விஞ்ஞானக் கல்வி சீரமைக்கப்படல் வேண்டும்.

புதிய நூற்றாண்டுக்கான விஞ்ஞானக்கல்வியின் மற்றொரு அம்சம் விஞ்ஞான தகவல்களை மனனம் செய்வதை விடுத்து விஞ்ஞான முறைமையைப் (Process) புரிந்து கொள்வதை வலியுறுத்துவதாகும். அவதானம், பகுப்பாய்வு, தொகுப்பு, கருத்தாக்கம், அனுமான உருவாக்கம், நுண் ஆய்வு போன்ற விஞ்ஞான முறையின் அம்சங்கள், புதிய தகவல்களைப் பெறல், அவற்றைப் பயன்படுத்துதல், பிரயோகித்தல் ஆகியவற்றை வலியுறுத்துவதாய் விஞ்ஞானக் கல்வி அமைதல் வேண்டும். ஆய்வுத்திறனும் மனப்பாங்கும் கல்விச் செயற்பாட்டின் சகல நிலைகளிலும் வழங்கப்படல் வேண்டும். இன்றைய கல்விமுறை இருக்கின்ற அறிவை மாணவருக்குப் போதிக்கின்றதேயொழிய புதிய அறிவை உருவாக்கும் நோக்குடையதல்ல. ஆராய்ச்சிப்பணியை உள்ளடக்கியதாகக் கல்விப் பணி அமையும் போதும் சுற்றுச் சூழலை ஆராய்வதாய் கற்றல் பணி திட்டமிடப்படும் போதும் புதிய அறிவு உருவாக்கப்பட வாய்ப்புக்கிட்டுகின்றது.

21ஆம் நூற்றாண்டில் கல்விச் செயற்பாட்டில் இடம்பெறவுள்ள மற்றொரு முக்கிய மாற்றம் கணிப் பொறியின் பயன்பாடாகும். கணிப் பொறியானது வர்த்தகம், கைத்தொழில், ஆயுத உற்பத்தி, பொழுதுபோக்குத் தொழில் என்பவற்றில் ஏற்படுத்திய முன்னேற்றங்கள் காரணமாக அது கல்வித் துறையின் முன்னேற்றத்துக்கும் உதவலாம் எனக் கருதப்படுகின்றது. மேலும் கல்விச் சாதனம் என்ற முறையில் கணிப்பொறியானது கல்வியியலாளரால் நடத்தப்பட்ட கற்றல் தொடர்பான ஆய்வுகளினால் உருவானதும் அல்ல. கணிப் பொறியானது ஆசிரியர் பயன்படுத்தக்கூடிய கற்றல் சாதனம் என்று கூறுவதே அதிக பொருத்தமுடையதாகும்.

எதிர்காலவியல் பற்றிய கல்வி அறிஞர்களின் கருத்தின்படி இன்று ஆரம்பப்பாடசாலைகளிலும் அதற்குப் பிற்பட்ட கல்வி நிலைகளிகளிலும் கற்பிக்கப்படும் பல பாடங்கள் உண்மையில் மாணவர்களால் சுயமாகக் கற்கப்படக் கூடியனவேயன்றி கற்பிக்கபட வேண்டியனவல்ல. ஆனால் அப்பாடங்களையும் பாடசாலைகளில் கற்பிக்க நீண்ட காலம் செலவிடப்படுகின்றது. மாணவர்கள் தொடர்ச்சியான பயிற்சியினூடாகவும் (Drill) திரும்பத் திரும்பச் சொல்வதன் / செய்வதனூடாகவும் (Repetition) அவர்கள் பெறுகின்ற பின்னூட்டலினூடாகவும் (Feedback) அப்பாடங்களைத் தாமாகவே கற்றுக் கொள்ள முடியும். எழுத்து, வாசிப்பு, எண்கணிதம், எழுத்துக்கூட்டல், வரலாற்று சம்பவங்கள், உயிரியல் போன்ற பாடங்களுடன் உயர்நிலைப்பாடங்களான நரம்பியல், மருத்துவ நோய்பகுப்பாய்வு போன்ற பாடங்களையும் கூட கணிப்பொறி நிகழ்ச்சித்திட்டத்தினூடாகச் சிறப்புறக் கற்க முடியும். மாணவர்கள் கணிப்பொறியின் துணையுடன் தமக்குத்தாமே கற்பித்துக் கொள்ளும் போதனாசிரியர்களாக மாறுவர். மிக இளமைப்பருவத்தில் பிள்ளைகள் கணிப்பொறியினால் பெரிதும் கவரப்படுவர். வரலாற்றுரீதியான ஆசிரியர்களைக் கொண்டதாய் 'ஊழியர் செறிவுடன்' (Labour Intensive) விளங்கின.

இதற்கு மாறாகப் புதிய நூற்றாண்டில் பாடசாலைகள் கூடிய அளவுக்கு கணிப்பொறியையும் ஏனைய தகவல் தொழில் நுட்ப சாதனங்களையும் பயன்படுத்த உள்ள நிலையில் அவை மூலதனச் செறிவுள்ள (Capital) கல்வி நிலையங்களாக விளங்கவுள்ளன. நவீன கணிப்பொறியினூடாக சகல நூல்களையும் சகல அறிவையும் சகல வல்லுனர்களையும் அருங் காட்சியகங்களையும் நாட முடிகின்றது. மேலும் கற்போன் தனக்குரிய வேகத்தில் தனது கற்றல் தேவைகளுக்கேற்ப கணிப்பொறியைப் பயன்படுத்திக் கற்க முடிகின்றது; கற்றல் செயற்பாட்டில் கற்போனும் அவனது தனித்துவமும் உந்துசக்தியாக அமைய கணிப்பொறிச் சாதனம் உதவுகின்றது. பிள்ளைகளின் கல்வியில் கணிப்பொறியின் பங்களிப்பு பற்றி பல விமர்சனங்கள் எழுந்துள்ள போதிலும் (அதன் இயந்திர – தொழில்நுட்பத்தன்மை, அதிகரித்த செலவு, ஏற்படுத்தக்கூடிய புதிய பிரச்சனைகள்) நவீன கல்விச் கலாசாரத்தின் மையப் பொருளாகக் கணிப் பொறி விளங்கப் போவதென்னவோ உண்மை.

வளர்முக நாடுகளைப் பொறுத்த வரையில் கல்விமுறையில் கணிப் பொறியின் அறிமுகத்துக்கு எதிராகப் பலவற்றைக் கூறமுடியுமென்றாலும் மேலைநாடுகளின் அனுபவங்களைக் கொண்டு நோக்குமிடத்து:

யாவருக்கும் எழுத்தறிவு என்ற நோக்கை நிறைவேற்ற அந்நாடுகளில் கணிப்பொறி நிகழ்ச்சித் திட்டங்கள் பயன்படுத்தப்படும்; பிரான்சில் கல்வியில் பின்தங்கிய ஜிப்சி வகுப்பினருக்கு எழுத்தறிவு வழங்க கணிப்பொறி பயன்படுத்தப்படுகின்றது.

கல்வித் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் காரணமாக எழுத்தறிவற்றவரும் வாழ்க்கை நீடித்த கல்வியைப் பெறமுடியும்.

எவ்வாறாயினும் வளர்முக நாடுகளில் உயர்மட்டப் பாடசாலைகளே கூடிய அளவு இத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திப் பயனடைய முடியும் என்பதால் கல்வித்துறையில் புதிய பாகுபாடுகளும் சமமின்மைகளும் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

பேராசிரியர்
சோ. சந்திரசேகரன்
கொழும்புப் பல்கலைக்கழகம்

*With Best Compliments*

*From*



# Ambaal Pooja Article Centre



S.B. Rajah
430/7A, Mayura Place,
Havelock Road,
Colombo - 06
Tel : 594040


18204

## 1997 - பரிசளிப்பு விழா

பிரதம அதிதி:

திரு.தெ. ஈஸ்வரன்

(கௌரவ மொறிசியஸ் தூதுவர்)





## 1998 - தரம் 1 ற்கான மாணவர்கள் வரவேற்பு

தரம் 1ற்கான அனுமதி – பெற்றார் மங்கள விளங்கேற்றுகின்றார்

திருமதி க. வர்ணகுலசிங்கம்.
திருமதி பா. சொர்ணராஜசிங்கம்.



*With Best Compliments*

*From*

# TATA TEX

IMPORTERS, GOVERNMENT SUPPLIERS
WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILES

***Bankshall Street,***
***Colombo - 11***

***Tel. : 449672***
***Fax : 42455740***

**With Best Compliments**

**From**

# DOLLAR APPARELS (PRIVATE) LTD.

R.A.De MEL MAWATHA, COLOMBO 3,
SRI LANKA.

TELEX 22082 X POINT CE
FAX : 502568, 575599

*Off: 502568*
*Fact : 571516536*

# பரதம்




**‘பரதம்’ என்ற சொல்லில் ‘ர’ என்ற எழுத்தை எடுத்துவிட்டால் ‘பதம்’ என்றாகிறது. பதம் இல்லையேல் நடனம் இல்லை. ‘ர’ எழுத்தின் கீழேயுள்ள நீட்டலை எடுத்து விட்டால் ‘பாதம்’ ஆகிறது. இது நடனத்திற்கு உயிர். ‘ப’வை எடுத்துவிட்டால் ‘ரதம்’ ஆகிறது. நடனமாடும் பெண்கள் ரதம் போல் அலங்கரித்துக் கொண்டால்தான் நடனம் சோபிக்கும். முன்னால் உள்ள எழுத்துக்களையும் எடுத்துவிட்டால் மிஞ்சுவது ‘தம்’ இது இல்லாவிட்டால் நடனமட முடியாது.**

**டாக்டர் மு. கருணாநிதி**

## *பரத மயில்*

*ஆடற் கலைக்கழகு தேடப் பிறந்தவள்*
*ஆடாத பொற்பாவை ஆட வந்தாள்*
*என்னோ டாட வந்தாள்*
*மகிழ்ந் தாட வந்தாள்.*


*- பாரதிதாசன்*



பாடசாலை மாணவிகளின் பொம்மை நடனம்
ஆக்கம் – திருமதி பா. சொர்ணராஜசிங்கம்




பாடசாலை மாணவியின் இசை விருந்து.
ஆக்கம் திருமதி க. வடிவேல்.




பிரதி அதிபர் பொ. மகாலிங்கம்

# கல்வியில் சமவாய்ப்பு - ஓர் அறிமுகம்

---------------- தை. தனராஜ் ----------------

ஒரு நாட்டினது முன்னேற்றம் அந்நாட்டில் வாழும் மக்கள் பெறுகின்ற கல்வி வாய்ப்புக்களின் மீதும் கல்வித்தரத்தின் மீது பெரிதும் தங்கியிருக்கின்ற ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்கின்றோம். இதன் காரணமாக கல்வியானது உணவு, உடை உறையுள் போன்ற மனிதனது அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இன்று மாறியுள்ளது. இதனால் கல்வி மனிதனது அடிப்படை உரிமை என்னும் கோட்பாடு பொதுவாக சகல நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. 1948ம் ஆண்டு ஐ. நா. சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தின் 26ம் உறுப்புரை 'தனிநபரின் கல்வி உரிமை. கட்டாய ஆரம்பக் கல்வி, இலவச அடிப்படைக் கல்வி, உயர் கல்வியில் சகலருக்கும் சமவாய்ப்பு' ஆகிய உன்னதமான கல்விக் கோட்பாடுகளை உறுதிப்படுத்தியது. அதே சபையில் 1959ம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறார்களின் உரிமைப் பிரகடனம் மேற்படி கல்விக் கோட்பாடுகளை மேலும் வலியுறுத்தியதுடன் 'பிள்ளையின் கல்விக்கான பொறுப்பு பெற்றோருடையது எனவும் பிள்ளையின் கல்விக்குப் பொறுப்பானவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளின் அடித்தளமாகக் கொள்ளவேண்டியது பிள்ளையின் நலனே' எனவும் குறிப்பாகச் சுட்டிக்காட்டியது. அத்துடன் அதே பிரகடனத்தின் 5ம் உறுப்புரை 'உடல், உள, சமூகரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளை தனது நிலைமைக்குப் பொருத்தமான கல்வியைப் பெற உரித்துடையது' என உறுதிப்படுத்தியது. இவை மாத்திரமல்லாது 1960ல் ஐ. நா.வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சகலவிதமான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான பிரகடனமானது கல்வியில் சமவாய்ப்பு வழங்குவதற்கு எதிரான இனம், மதம், மொழி, நிறம், முதலான சகலவிதமான பாரபட்சங்களையும் ஒழிக்கவேண்டுமென எடுத்துரைத்தது.

மேற்படி சர்வதேச பிரகடனங்களின் பங்காளிகளான நாடுகள் பலவும் தத்தமது நாடுகளில் கல்வியில் சம வாய்ப்பினை ஏற்படுத்தும் முயற்சிகளில் கடந்த அரைநூற்றாண்டு காலமாக ஈடுபட்டுவந்துள்ளன. எனினும் அடுத்து வரும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலக சனத்தொகையில் ஒரு பில்லியன் மக்கள் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக இருக்கப்போகிறார்கள் என்னும் யுனெஸ்கோவின் எதிர்வுகூறல் மனிதகுலத்தின் அபிவிருத்தி முயற்சிகளின் மீது விழுந்த மிகப் பலமான அடியாகும். அதிலும் இந்த எழுத்தறிவற்றோரில் சுமார் 15 மில்லியன் தவிர்ந்த ஏனையோர் மூன்றாம் உலக நாடுகளில் குறிப்பாக ஆசியப் பிராந்தியத்தில் தான் இருக்கப்போகிறார்கள் என்பது நமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி அல்ல.

## கல்வியில் சமவாய்ப்பு - ஆசிய பசுபிக் பிராந்திய முயற்சிகள்

ஆசிய–பசுபிக் பிராந்தியங்களில் சகலருக்கும் கல்வியும் கல்வியில் சமவாய்ப்பும் வழங்கும் முயற்சிகள் 1950களிலேயே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. 1952ம் ஆண்டு கட்டாய ஆரம்பக் கல்வி பற்றிய பிராந்திய மகாநாடு யுனெஸ்கோவினால் பம்பாயில் கூட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1959ல் கராச்சியில் கூட்டப்பட்ட ஆசிய உறுப்புநாடுகளின் கட்டாய ஆரம்பக்கல்வி மாநாட்டில் 'கராச்சி திட்டம்' (Karachi Plan) ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன்படி, உறுப்புநாடுகள் 1960 – 80 ஆண்டுகளுக்கிடைப்பட்ட இரண்டு தசாப்தங்களில் சகலருக்கும் கட்டாய, இலவச ஆரம்பக்கல்வியை வழங்குவதற்கு உடன்பட்டன. இதனைத் தொடர்ந்து 1962ல் மேற்படி உறுப்புநாடுகளின் கல்வி அமைச்சர்களின் மாநாடு நடைபெற்றது. ஆரம்பக் கல்வியைத் தனியாக நோக்காது முழுக் கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாகவும் கல்வித்திட்டத்தை தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் பகுதியாகவும் ஏற்றுக்கொள்வதன் மூலமே கராச்சித்திட்டத்தின் இலக்குகளை அடையமுடியும் என்பது இம்மாநாட்டில் உணரப்பட்டது. 1965ல் தெஹ்ரானில் எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கான கல்வி அமைச்சர்களின் உலக மகாநாடு நடத்தப்பட்டது. சமூக, பொருளாதார வளர்ச்சியை அடைய எழுத்தறிவின்மையை ஒழிப்பதன் அவசியம் இம்மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் "செயற்படு எழுத்தறிவு" (Functional Literacy) என்னும் எண்ணக்கருவுக்கும் அழுத்தம் தரப்பட்டது. செயற்படு எழுத்தறிவு என்பது எழுத்தறிவு பற்றி மரபு ரீதியான பார்வையினின்றும் வேறுபட்டது. அபிவிருத்தியைத் தளமாகக் கொண்ட செயற்படு எழுத்தறிவு பொதுவாகத் தொழிற்கல்விக்கு இட்டுச் செல்வதை நோக்கமாகக் கொண்டது. இதனைத் தொடர்ந்து பல ஆசிய நாடுகளில் எழுத்தறிவுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன் பின்னர் நடைபெற்ற கல்வி அமைச்சர்களின் 5வது பிராந்திய மாநாட்டில் "சகலருக்கும் கல்வி" என்னும் குறிக்கோளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு 21 விதந்துரைகள் முன்மொழியப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 1985ல் நடந்த யுனெஸ்கோ உலக மாநாட்டில் ஐந்தாவது பிராந்திய மாநாட்டின் விதந்துரைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதுடன் 1987ல் ஆசிய பசுபிக் சகலருக்கும் கல்வி என்னும் திட்டமும் (Appeal) தொடக்கி வைக்கப்பட்டது. 1990ல் சகலருக்கும் கல்விக்கான உலக மாநாட்டில் சர்வதேச எழுத்தறிவு ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. 2000ம் ஆண்டில் 14 வயதுக்குட்பட்ட உலகச் சிறார்களில் 80 வீதமேனும் பாடசாலைகளில் இருக்கவேண்டுமென இலக்கு வைக்கப்பட்டாலும் மூன்றாம் உலக நாடுகளில் பல 2000ம் ஆண்டுக்குப் பின்னரும் கூட இதனை அடையும் சாத்தியமில்லை.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் கடந்த அரைநூற்றாண்டு காலத்தில் பல்வேறு கல்வி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் சகலருக்கும் ஆரம்பக் கல்வி வழங்கும் முயற்சி கூட வெற்றி பெறவில்லை. இந்நிலையில் சகல மட்டங்களிலும் கல்விச் சமவாய்ப்பினை உறுதி செய்வது இந் நாடுகளைப் பொறுத்தவரையில் ஒரு கனவு மாத்திரமே என்பது ஒரு மிகைப்படுத்தப்பட்ட அல்லது பிற்போக்கான கூற்றல்ல. இந் நிலைமைக்கான காரணங்கள் இங்கு எடுத்துக் கூறப்படவில்லை.

## கல்வியில் சமவாய்ப்பு - தேசிய முயற்சிகள்

இலங்கையில் தேசிய கல்வி முறையின் ஆரம்பமாக 1869ம் ஆண்டு குறிப்பிடப்படுகிறது. இந்நாடு காலனித்துவ ஆட்சியில் இருந்தபோது அவ்வாண்டில் ஸ்தாபிக்கப்பட்ட பொதுப்போதனாத் திணைக்களமே பின்னர் கல்வி அமைச்சாக உருப்பெற்றது. இத்திணைக்களம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதும் கூட இந் நாட்டில் கல்வியானது வசதிபடைத்தோரின் உரிமையாகவே நீண்டகாலம் இருந்து வந்தது. 1900ம் ஆண்டில் 3,917 பாடசாலைகள் இருந்தன. அவற்றில் 204,234 மாணவர்கள் கற்றனர். பாடசாலை சேர்வு வீதம் 16.5 ஆகவும் எழுத்தறிவு வீதம் 26.4 ஆகவும் மாத்திரமே இருந்தது. இன்று இந் நிலையிலிருந்து நாம் வெகுதூரம் வந்து விட்டோம். பாடசாலை சேர்வு வீதமும், எழுத்தறிவு வீதமும் 90ஐத் தாண்டிவிட்டன. இத்தகைய சாதனையின் பிதாமகனாக சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா போற்றப்படுகின்றார். 1943ம் ஆண்டின் விசேட கல்வி ஆணைக்குழுவின் விதந்துரைகள் அமுல்படுத்தப்பட்டதன் விளைவாகவே இலங்கை அளவு ரீதியான கல்வி விரிவாக்கத்தை அடைய முடிந்தது எனக் கூறப்படுகிறது. மூன்றாம் உலக நாடு என்னும் அளவுகோலின் அடிப்படையில் இலங்கையின் கல்வி அடைவு ஒரு சாதனைதான்.

சகலருக்கும் கல்வி என்னும் பிரகடனத்தை நாம் பெருமளவுக்கு நிறைவேற்றி விட்டாலும் கூட கல்வியில் சமவாய்ப்பு என்னும் இலக்கினை நாம் எந்தளவுக்கு எய்தியுள்ளோம்?

## கல்வியில் சமவாய்ப்பு - இலங்கையின் இன்றைய நிலை

கன்னங்கராவின் கல்விச் சீர்திருத்தங்களின் பின்னர் பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் கல்வியில் விரிவாக்கத்தையும், தரமேம்பாட்டையும் ஏற்படுத்தவும், சமவாய்ப்பினை ஏற்படுத்தவும் தொடர்ந்து முயன்றுள்ளன. இன்று சுமார் 10,500 பாடசாலைகளில் 4.5 மில்லியன் மாணவர்களுக்கு சுமார் இரண்டு இலட்சம் ஆசிரியர்கள் கல்வியூட்டுகின்றனர். பன்னிரண்டு பல்கலைக்கழகங்களில் சுமர் 32,000 மாணவர்கள் கற்கின்றனர். தொழில்சார்ந்த உயர்கல்வி நிலையங்கள் பல இயங்குகின்றன. எனினும் எல்லோர்க்கும் கல்வி, கல்வியில் சமவாய்ப்பு என்னும் உயரிய இலக்கினை நாம் அடையமுடியவில்லை. இந்நிலைமை பற்றிய பல்வேறு தகவல்களை தேசிய கல்வி ஆணைக்குழு (1992) விளக்கமாக வெளியிட்டுள்ளது.

5–9 வயதுப் பிரிவில் 8 வீதமான மாணவர்களும், 10–14 பிரிவில் 30 வீதமானோரும், 15–19 பிரிவில் 50 வீதமானோரும் பாடசாலைக்குச் செல்வதில்லை. கிராமப்புறங்களில் 11 வீத மாணவர்களும், நகர்ப்புறங்களில் 7 வீதமானோரும், தோட்டப் பிரதேசத்தில் 34.7 வீதமானோரும் பாடசாலையைத் தவிர்க்கின்றனர். நாட்டிலுள்ள 5231 ஏபி பாடசாலைகளில் 153 மேல் மாகாணத்திலேயே காணப்படுகின்றன. இதன் மூலம் ஏனைய மாகாணங்களில் விஞ்ஞானக்கல்வி வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன. தேசிய ஆசிரியர் – மாணவர் விகிதம் 1:22 ஆக இருக்கும் போது தமிழ்ப்பாடசாலைகளில் சுமார் 14,000 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் நிலவுகிறது. நகர கிராமிய ரீதியில் ஆசிரியர் மாணவர் விகிதம் உட்பட சகல கல்விக் குறிகாட்டிகளிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. தோட்டப்புறங்களில் காணப்படும் நிலைமை மிகவும் பாரதூரமானது.

உயர்கல்வியில் சமவாய்ப்பு என்பது மிகவும் கவலை தரக்கூடிய வகையில் அமைந்துள்ளது. சுமார் 2 வீதமான மாணவர்களே பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். விஞ்ஞானத்தைத் தளமாகக் கொண்ட கற்கை நெறிகள் பெண்களின் பங்குபற்றல் வீதம் மிகவும் குறைவானது. சகல துறைகளிலும் தமிழ் மாணவர்களின் பங்குபற்றல் வீதமானது குறிப்பிடத்தக்க அளவில் படிப்படியாக வீழ்ச்சி அடைகிறது. மலையக மக்கள் சனத்தொகையில் சுமார் 6 வீதமாக இருக்கும் போது அவர்களின் பல்கலைக்கழக பங்குபற்றல் வீதமானது ஒரு வீதத்துக்கும் குறைவானது.

கல்வியில் சகலவிதமான பாரபட்சங்களையும் ஒழித்து சமவாய்ப்பினை உறுதிப்படுத்தும் ஐ.நா.வின் பல்வேறு பிரகடனங்களிலும் இலங்கையும் பங்காளியாக இருந்த போதும் அப் பிரகடனங்களின் உறுப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கையின் அடைவு பாராட்டக்கூடியதல்ல என்பது வருத்தத்திற்குரிய உண்மையாகும்.

## கல்வியில் சமவாய்ப்பு - புதிய கல்விச் சீர்திருத்தத்திலுள்ள முன்மொழிவுகள்

தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற கல்விச் சீர்திருத்தங்கள் பல கல்வியில் சமவாய்ப்பை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை. அவற்றில் பிரதானமானவற்றைப் பின்வருமாறு பட்டியல்படுத்தலாம்.

1. கட்டாயக் கல்விச் சட்டத்தை மீள் உயிர்ப்பித்தல்
2. மாற்று கல்வி வாய்ப்புக்கள்
3. முன்பாடசாலைக் கல்வியை விருத்தி செய்தல்
4. ஆரம்பக் கல்வியின் மறுசீரமைப்பு
5. கலைத் திட்ட சீர்திருத்தம்
6. ஆங்கிக் கல்வியை மேம்படுத்தல்
7. பாடசாலைகளில் தொழிலுக்கு வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்
8. பிரதேச செயலாளர் மட்டத்தில் 600 பாடசாலைகளை விருத்தி செய்தல்
9. பாடசாலையைத் தளமாகக் கொண்ட கணிப்பீடும் முகாமையும்
10. பாடசாலை ஆளணியைச் சீரமைத்தல்
11. முழுமையானதொரு கல்விச் சட்டத்தை உருவாக்குதல்
12. தேசிய கல்விக் கொள்கையை உருவாக்குதல்

மேற்படி சீர்திருத்தங்களில் பல ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் கட்டாயக் கல்விச் சட்டத்தை மீள உயிர்ப்பித்தல் மிகவும் முக்கியமானது. இச் சட்டம் 1939ம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்தாலும் கட்டாயக் கல்வி அமுலாக்கம் படிப்படியாக மறைந்துவிட்டது. தற்போது இச் சட்டத்துக்கு மீண்டும் வலுவேற்படுத்தப்பட்டள்ள போதிலும் சட்டத்தை மீறும் பெற்றாருக்கு தண்டனை வழங்கும் அம்சம் நீக்கப்பட்டுள்ளது. எனவே பாடசாலை செல்லும் வயதுப் பிரிவிலுள்ள சகல பிள்ளைகளையும் இச் சட்டத்தினால் பாடசாலைக்குள் கொண்டுவர முடியுமா என்பது கேள்விக்குரியது.

ஒவ்வொரு செயலாளர் பிரிவிலும் ஒரு பாடசாலையேனும் சகல வளங்களும் உள்ள முழுமையான பாடசாலையாக மாற்றும் நடவடிக்கையும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தவிர, பாடசாலைக்கு ஓரளவு தன்னாதிக்கம் வழங்கும் முன்மொழிவும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இச் சீர்திருத்தங்கள் இலங்கையின் கல்வி முறைமையில் சமவாய்ப்பினை ஏற்படுத்துவதில் மிகவும் காத்திரமான முயற்சிகளாகும். அத்துடன் நீண்டகால தாக்கத்தையும் ஏற்படுத்தக்கூடியவை.

முடிவுரை

கல்வியில் சமவாய்ப்பினை ஏற்படுத்தும் ஐம்பதாண்டு கால முயற்சிகள் வெற்றி பெறாமைக்குப் பலவிதமான காரணங்கள் உள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானது மாறிமாறி பதவிக்கு வரும் அரசாங்கங்கள் தேசிய கல்வி முறை, தேசிய நலனில் ஓர் அங்கம் என்பதைக் கருத்திற் கொள்ளாது குறுகிய அரசியல் நோக்கம் கருதிய மாற்றங்களை அரையும் குறையுமாக அமுல்படுத்துவதாகும். இந் நாட்டில் ஒரு தேசிய கல்விக் கொள்கை இல்லாமலிருப்பது, தேச நலனின் நாட்டம் கொண்ட கல்வியாளர்களின் குரல் ஓங்கி ஒலிக்கத் தயங்குவதும் கூட கல்வியியல் சமவாய்ப்பு, கல்வித் தர மேம்பாடு போன்ற உயரிய கல்விக்கோட்பாடுகள் இந் நாட்டில் வெற்றியடையத் தடைக் கற்களாகிவிட்டன.

இந் நிலையில் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் ஓரளவு மாறுபட்டு நிற்கின்றன. தேசிய கல்வி ஆணைக்குழு விதந்துரைத்துள்ள ஒன்பது தேசிய இலக்குகள், அவற்றை அடைவதற்குப் பொருத்தமான கல்வி இலக்குகள் மற்றும் ஐந்து அடிப்படைத் தேர்ச்சிகள் ஆகியவை கல்விச் சிந்தனைகளை அடித்தளமாகக் கொண்டவைகளாகவும் சர்வதேச கல்விச் செல்நெறிகளுடன் இசைந்து செல்லக்கூடியனவாகவும் தென்படுகின்றன. எனினும் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் சீர்திருத்தங்கள் தேசிய கல்வி ஆணைக்குழுவின் சிந்தனையை எந்தளவுக்குப் பிரதிபலித்து நிற்கின்றன என்பதும் கல்வியில் சமவாய்ப்பு, கல்வித் தரமேம்பாடு போன்ற தேச நிர்மாணம் கருதிய உன்னதமான கோட்பாடுகளை அடைவதில் அவை எந்தளவுக்கு வெற்றி பெறப் போகின்றன என்பதும் பொறுத்திருந்து விடை காணவேண்டிய அம்சங்களாகும்.



தை. தனராஜ்
*(M.Ed., Dip.in.Ed.., Dip.in.Ed.Mgt)*
செயற்றிட்ட அதிகாரி தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

*With Best Compliments*

*From*

**GOPALA SANMUGAM**
**MATCH MAKING & MULTY SERVICE**

# Ladies Tailoring

Specialist Saree Blouses (Indian Cut)
Children Party Frocks,
Shalwars Bridal Dresses

No. 255 C, Galle Road,Wellawatta Colombo - 6
Tel.: 074513735

*With Best Compliments*

*From*

# U.R.K. *Jewellery*

**MANNING PLACE,**
**WELLAWATTE,**
**COLOMBO - 6.**
**( Opposite Market)**

**Tel: 592746**



1997 - பொருட்காட்சி நிகழ்வுகள்



1997 - இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வு

லயன் திரு. மகேந்திரன்



1997 - இல்ல விளையாட்டுப் போட்டியில் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சண்முக சர்மா

*With Best Compliments*

*From*

**GEETHA TRADING COMPANY**

*Specialist in Curtain Materrials, Bed sheets & Terry Towels*

103, Second Cross Street,
Colombo - 11.
Tel : 434694

# புலவர்களைப் போற்றுவோம்


--------- கவிஞர் ஆர். சோமசுந்தரம் --------

வள்ளுவர்

என்றும் உலகம் இனிதே நடந்திட
ஒன்றேமுக் காலடியால் உண்மையை - நன்றாக
உள்ளும் புறமும் ஒளிக்கா துணர்த்திய
வள்ளுவன் தன்னையே வாழ்த்து.

ஔவையார்

சிறுவர்கள் சிந்தித்துச் செய்யச் சிறந்த
உறுதுணை ஊக்குகின்ற ஒப்பில் - பொருந்திடும்
ஔடதம் போன்றரிய நீதிநூல் தந்தவராம்
ஔவையார் என்றறி வாய்.



கம்பர்

கற்புடைச் சீதையும் கார்மேக ராமனும்
பொற்புடை நற்குகனும் போற்றியே - நற்றமிழர்
தம்மிற்கு நல்ல தமிழ்ச்சுவடி தந்தநல்
கம்பன் கவியே கவி.

புகழேந்தி

அலகிலா ஏற்றம் அவனிக் களிக்க
நளன்கதை தந்திட்ட நல்லார் - உலகப்
புகழ்பெற்ற மூவேந்தர் போற்றினர் வெண்பாப்
புகழேந்தி யன்றோ பிகல்.

இளங்கோ

சிலம்பொன்று கொண்டுநம் சிந்தைக்கே யின்பம்
துலங்கிடத் தந்தான் துறந்தான் - உலகில்
களங்கமில் காதலையும் கற்பையும் காட்டும்
இளங்கோ புகழினை ஏத்து.

தாகூர்

நாட்டுப்பண் ஒன்றீந்த நற்கவிஞர் தாகூரின்
பாட்டால் பரவசம் பெற்றிடுவோம் - நாட்டில்
அளித்தகீ தாஞ்சலியை ஆர்வமுடன் கற்றுக்
களித்திடு காசினியில் கண்டு.

பாரதியார்

வீர சுதந்திரம் வேண்டிப்பின் வேறொன்றும்
தீரமுடன் கொள்ளவே சிந்தையில் - பாரதியின்
பாவென்றும் பாரில் பலித்ததனால் அன்னாரின்
நாவென்ன நாவே நவில்.

காளமேகம்

ஒன்றை யுணர்த்தியே ஓதிடின் யாவுமே
ஒன்றிய ஈரர்த்தம் உண்டாகும் - தின்றிடில்
காளமேகம் கானம் கனிபோலே தித்திக்கும்
ஞாலத்தில் யார்ஒப்பார் நாடு.

# முதியோரிடம் அன்பு காட்டிப் பேணிக் காப்பது இளந்தலைமுறையினர் கடன்.

"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது" என்பது ஔவையார் வாய்மொழி. பிறவிகளுள் சிறப்பான பிறவி மானிடப்பிறவியாகும். எதனையும் பகுத்து உணரும் பண்பே மனிதப்பண்பு. இத்தகைய மனிதப்பண்புகளைக் கொண்ட மானிட வாழ்வில் முதுமை என்பது இறைவனால் வழங்கப்பட்டதும், தவிர்க்க முடியாததுமாகிய ஒன்று. இளமைப்பிராயத்தை ஒருவன் எவ்வாறு எதிர்கொள்கிறானோ அதே போன்றுதான் முதுமையும் அமைகிறது. முதுமையில் ஒரு மனிதன் தனது வாழ்நாளில் தான் பெற்ற அனுபவங்களைக் கொண்டு சிறந்த அறிவு ஞானத்துடன் விளங்கும் வாய்ப்பினைப் பெறுகின்றான்.

இத்தகைய முதியோர்களை ஏனோ? இளந்தலைமுறையினர் அன்பு காட்டிப் பேணிக்காக்க சிரமப்படுகின்றனர். அவர்களிற்கும், அவர்களது கருத்திற்கும் மதிப்புக் கொடுக்கத் தவறிவிடுகின்றனர். இவ்வுலகில் எம்மைப் பெற்று, வியர்வை சிந்தி உழைத்து, வளர்த்து பற்பல தியாகங்களைச் செய்து, அறிவுபுகட்டி, நல்வழிகாட்டி, ஒழுக்க நெறியின்படி ஒரு நற்பிரஜையாக திகழ வைத்தவர்கள் அவர்களே, என்பதைச் சிலர் உணர்ந்து கொள்வதில்லை. முதியவர்ககளான அவர்களது பெற்றோர் அவர்களின் பொறுப்பில் வாழ்வதை சிலர் பெருஞ் சுமையாகக் கருதுகின்றனர். சிலர் முதுமையிலும் அவர்கள் மீது இரக்கங்காட்டாமல் அவர்களை வேலைகள் செய்யுமாறு வற்புறுத்துகின்றனர். இவற்றின் பிரதிபலிப்பே இன்று நாம் காணும் முதியோர் இல்லங்கள்.

அவர்கள் இன்றேல் இளந்தலைமுறையினர் உருவாகியிருப்பதற்குச் சந்தர்ப்பம் தான் ஏது? இயந்திரகதியில் இயங்கிக் கொண்டிருக்கும் இவ்வுலகில் இளந்தலைமுறையினர் எதிர்காலத்தைப்பற்றி யோசித்து உணர நேரந்தான் ஏது?

முதியோர்களும் தம்பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகி விட்ட போதிலும் அவர்களை சிறுபிள்ளைகளாகவே மதிப்பிடுகின்றனர். அவர்கள் எப்போதும் தமது சொல்லிற்கு கட்டுப்பட்டு வாழ்வதையே பெரிதும் விரும்புகின்றனர். இன்றைய உலகில் ஏற்படும் அனர்த்தங்களையும் பணக்கஷ்டங்களையும், நாளாந்த நடைமுறை வாழ்க்கையையும் அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. இன்றைய உலக நடைமுறையும் அன்றைய வாழ்வின் நடைமுறையைப் போன்றதே என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

இன்றைய உலகில் தேவைகள் பல்கிப் பெருகி விட்டன. இளந்தலைமுறையினர் சுகபோகங்களில் மிகுந்த ஆர்வங் கொண்டு தானும், தன்னலனும் என்று சுயநலத்துடன் வாழ முற்படுகையில் முதியோர்கள் இழிவிற்கிடமான நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகின்றனர்

இந்நிலை மாற வேண்டுமாயின் பெரியவர்களும் ஓரளவேனும் இவ்வுலகைப் பற்றி அறிய வேண்டும். அன்றைய காலத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிராமல் தற்போதைய உலகில் நிகழ்பவை பற்றியும் அறிய வேண்டும்.

இளந்தலைமுறையினரும் தம்மை வளர்த்து ஆளாக்கியவர்கள் அவர்கள் என்பதை உணர்ந்து அவர்களது கருத்திற்கும், அபிப்பிராயத்திற்கும், விருப்பு வெறுப்புக்களிற்கும் மதிப்புக் கொடுத்து அவர்களது பிடிவாதங்களையும், தொணதொணப்புக்களையும் சகித்து அழிந்து வரும் மனிதாபிமானத்தைக் கட்டிக் காப்பாற்ற வேண்டும்.

இளந்தலைமுறையினர் தமக்கும் என்றோ ஒருநாள் முதுமை வரத்தான் போகிறது என்பதை உணர்ந்து வளமிக்க வாழ்க்கை அளித்த முதியோர்களைப் பேணிக்காப்பது தமது தலையாய கடமைகளில் ஒன்று என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

க. கோசலா
ஆண்டு 11

*Well Wisher*

# Shamsudeen Niyas

*With Best Compliments*

*From*

## BOMBAY SWEET MAHAL

All Kinds of Bombay
Sweets, Mixtures, Cooldrinks, Shorteats etc......
orders could be undertaken for home prepara-
tion, Faluda, Nelli, Nannary syrup
(Opposite Post Office)

195, Galle Road,
Wellawatta

*With Best Compliments*

*From*

## ZEENIYAS

DEALERS IN ARTIFICIAL
FLOWERS AND GIFT ITEMS

No. 86, Galle Road,
Colombo - 6

Tel. Off : 587336

*With Best Compliments*

*From*

# H.J.CENTRAL HOSPITAL

Residence :
# 22/1, Bagatale Road, Colombo - 3
SRI LANKA
Tel No.:077-901331
# 37, Casime Road, Kalmunai - 6e.p.
SRI LANKA

Office :
H.J.Central Hospital
37, Casime Road, Kalmunai- 6e.p.
SRI LANKA
Tel No.: 06729188
E.Mail : jameel@slt.lkS

**With Best Compliments**

**From**

# St. Anthony's Industries Group (Pvt) Ltd.

*Marketing Division :*
*510, Sri Sangaraja Mawatha,*
*Colombo - 10*
*Tel : 422075, 422-03, 320622-4*

*Head Office:*
*752/1 Base Line Road,*
*Colombo 09.*
*Tel : 692161/4,*
*Fax : 968898*

*We lead where it matters.*

# தாய்மார் தினம் நினைவாக



*பிள்ளையின் நிழல்*
*முள்ளிற் பட்டாலுங்கூடத்*
*தன்*
*நெஞ்சிற்குள் காயங் காண்பவள்!*
*அடடா!*
*திருக்குறளின் பக்கத்தில்*
*ஓர் அரிச்சுவடி சிரிக்கிறதே!*

*"கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்*
*கள்வெறி கொள்ளு தடீ!*
*உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா!*
*உன்மத்த மாகு தடீ!"*

*- பாரதியார்.*

# தாய் அன்பு

*அன்னையின்றி அவதாரித்த உயிருண்டோ*
*அன்னையை வணங்காது உயர்ந்தது தானுண்டோ*
*அண்டத்தை ஆட்கொள்ளும் சக்தியே நீயே - அம்மா*
*ஆனந்தப் பெருக்குடன் வணங்குகிறேன் உன்னை*

*அன்பெனும் அழகுச் சொல்லை அகிலத்தில் கண்டேன்*
*அது தாயன்பு என்பதை என் அன்னையிடம் கண்டேன்.*

*பகலவன் பகலிற்கு ஒளியேற்றினான்*
*சந்திரன் இரவிற்கு ஒளியேற்றினான்*
*அன்னையே பெண்மைக்கு பெருமை தந்தாய்*
*"அம்மா" என்ற உன் அன்பே உலகில் எங்கும் தொனிக்கிறதே.*

*ஈர் ஐந்து மாதங்கள் கருவறையில் அணைத்தாங்கு*
*இனிமை மிகு தமிழ் நிலத்தில் தவழ வைத்தாயே*
*இந் நிலத்தில் உன்னையின்றி இங்கு மேல் யாரோ?*
*இரு ஏழு ஜென்மங்கள் எடுத்தாலும் உன்னை நான் தொழுவேனம்மா*

*தரைமீது தத்தி தவழ்ந்து வரும் போது*
*தலைவாரிப் பூச்சூடி அள்ளி அணைத்தாயே*
*தன்மானமுள்ள தலைசிறந்த மனிதனாய்*
*தரணியிலே அவதரிக்க வைத்தாயே*

*உன் இரத்தம் பாலாக்கி*
*உவப்புடனே ஊட்டிவிட்டாய்*
*என் இரத்தம் வியர்வை யாக்கி*
*என்று முனைக் காத்திடுவேன்*

*அருட்கடலே ஆருயிரே*
*ஆனந்தப் பெருங்கடலே*
*அகிலம் எல்லாம் அன்னைப்போற்ற*
*தரனிதனில் என்னை தவழவைத்தாயே*
*அம்மா உன்னை என்றும் வணங்குகிறேன்.*

மீரா சிவபாலன்
ஆண்டு 10

With Best Compliments

From

# M.C.A. TRADING COMPANY (PVT) LTD.

Importers, Exporters and Distributors for all kinds of Oil

No. 190, First Floor
Gaswork Street
Colombo 11

Tel : 074-715502,074-715503
451320, 451321
Fax : 451322

*With Best Compliments*

*From*

# HMT Enterprises

Dealers in Creslite Paints & Commander PolishAlso Available,
Copal, Red Cement , Sandtic, Mastic,
Whiting, Plaster of Paris, Sand Papers, Ultramarine Blue

**30 K,Third Cross Street,**
**Colombo -11.**
**Tel : 342136**

With Best Compliments

From

# PEARL COMMERCIAL CO. (PVT) LTD.

*INDENTING AGENTS - MANUFACTURER'S AGENTS - MERCHANDISE*

No. 24, Dr. E.A. Cooray Mawatha,
Wellawatta,
Colombo - 06.
Tel: 94-1-583564
Fax: 587596, 581365

With Best Compliments



From

**MARSHA INTERNATIONAL (PVT) LTD.**

Importers & Dealers in Motor Vehicles

145, W.A.Silva Mawatha,
Wellewatte, Colombo - 06,
Sri Lanka.

Tel : 588096, 074204947
Fax : 597289


With Best Compliments

From

**CHINESE GIFT PALACE**

Dealers in Handicrafts, Brassware, Gift Items Stautue, Curios etc.

No. 78, Galle Road,
Colombo - 06.
Tel.: 594931
Fax : 582853




## ஒற்றுமைக் கீதம்

மாணவமணிகளே ஒற்றுமையாய் - ஈழ
மாதாவை மகிழ வைப்போம்
காகம் கரவாத ஒற்றுமையை - நாம்
கருத்தில் வளர்த்திடுவோம்
மதத்தையும், இனத்தையும் ஒற்றுமையாய் - இன்றே
மதித்தே மகிழ்ந்திடுவோம்
மனிதத்தை மதிக்காத வேற்றுமையை - இங்கே
மிதித்தே புதைத்திடுவோம்.
(மாணவமணிகளே)

சாதிக்கொடுமையை, சதிகாரக் கும்பலை
சாட்டையால் சாடிடுவோம்
புத்தகத்தோடு புத்தியைக் கட்டாமல்
பச்சோந்தியாகி பகல்வேஷம் போடாமல்
புத்தரின் தத்துவம் புண்ணாகப் போகாமல்
கண்ணாகக் காத்திடுவோம் - என்றும்
புன்னகைப் பூவோடு புனிதராய் வாழ்ந்திடுவோம்
(மாணவமணிகளே)

அனைத்துப் பேரையும் ஆரத்தழுவியே
அன்புடன் அரவணைப்போம்
வாடிய பயிருக்கு வானத்து நீரென
வாரியே வழங்கிடுவோம்
வளமான வாழ்வுக்காய் வாருங்கள் - எல்லோரும்
வரிசையாய் தொடர்ந்து செல்வோம்.
(மாணவமணிகளே)

கோ.தினேசன்
தரம் - 9



# சமாதானம் இன்றேல்..........

இருபத்தோராம் நூற்றாண்டை அண்மித்து விட்ட போதிலும், எந் நாட்டை நோக்கினும் ஏதோ ஒரு வகையில் குழப்பங்கள் நடந்த வண்ணமே உள்ளன. இவற்றுள் இனப்பிரச்சினை, மதப் பிரச்சினை என்பனவே அனேகநாடுகளில் சமாதானச் சீர்குலைவை ஏற்படுத்துகின்றன. மக்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதற்கான காரணம் என்ன? அவர்களின் குடும்ப வறுமையும், அறியாமையும், தாழ்வு மனப்பான்மையும், "நான்" என்கின்ற ஆணவமுமே அவர்களை இவ்வாறான செயல்களில் ஈடுபடத் தூண்டுகின்றது.

மக்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதனால் ஏனைய மக்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதுடன் அவர்களின் சுதந்திரமும், சுமூகமான உறவுகளும் பாதிக்கப்படுகின்றன. அத்துடன் ஒரு இனத்தை மற்றைய இனம் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் அளவிற்கு கொடூரச் செயல்கள் அதிகரித்து வருகின்றன.

இவ்வாறான செயல்களின் மூலம் நாட்டின் இயற்கை வளங்கள் யாவும் பாதிக்கப்படுவது மட்டுமன்றி அவ் வளங்களை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் தொழில்கள் யாவும் பாதிக்கப்படுகின்றன. இதனால் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் தளர்வுறுகின்றது. அத்துடன் இனவாதக் குழப்பங்களின் போது பல நாடுகள் வெடிமருந்துகள், ஆயுதங்கள் என்பவற்றைப் பயன்படுத்துவனால் சில சந்தர்ப்பங்களில் வரையறையுடன் காணப்படும் இயற்கை வளங்கள் கூட எதற்கும் பயன்படுத்த முடியாதன ஆகிவிடுகின்றன. இவற்றைவிட அன்றைய மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பிரதிபலித்துக் காட்டக்கூடியதாக வினைத்திறத்துடன் அமைந்துள்ள புகழ்பெற்று விளங்குகின்ற சின்னங்கள் யாவும் அழிந்தொழிய வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வாறான நிகழ்வுகளால் உல்லாசப் பிராயணிகளின் வருகை பெரிதும் குறைவடைகின்றதால் அநேக நாடுகள் பெற்று வரும் அன்னியச் செலாவணி குறைவடைகின்றது. இதனால் நாட்டின் பொருளாதாரம் நலிவுறுகின்றது.

இவ்வாறு நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படுவதனால் அந்நாட்டில உணவுப் பஞ்சம் ஏற்பட வாய்ப்பேற்படுகின்றது. இதனால் பலர் நோய்களிற்கு உள்ளாகவும், இறக்கவும், நேரிடுகின்றது. அத்துடன் மக்கள் உடல்ரீதியாக மட்டுமன்றி உள ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான குழப்ப நிலைமைகள் நாட்டில் நிலவும் போதுஅன்னிய நாடுகள் தலையிட வாய்ப்பேற்படுகின்றது. அத்துடன் அவர்களிற்கு நமது நாட்டு நிலமை சாதகமாக அமைகின்றது. அதனால் அன்னிய நாட்டவர் உதவி செய்வது போல் நடித்து தமது தேவைகளை மிகச் சுலபமாக நிறைவேற்றிக் கொள்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் அன்னிய நாட்டின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு அடிமை வாழ்வு வாழ வேண்டியும் ஏற்படுகின்றது.

ஒரு நாட்டில் சமாதானச் சீர்குலைவு ஏற்படுமேயானால் மக்களின் வாழ்க்கை மட்டுமன்றி அவர்களின் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்க்கையும் பாதிக்கப்படுகின்றது. நாட்டின் குழப்ப நிலைமைகள் காரணமாக எதிர்காலச் சந்ததியினரின் கல்வி, சுகாதாரம் என்பன பெரிதும் பாதிக்கப்படுவதால் அவர்களின் வாழ்வே இருள்மயமாகி விட வாய்ப்பேற்படுகின்றது.

இவ்வாறான குழப்ப நிலமைகளில் கூட பலர் வருந்திப் படித்து முன்னேறினாலும் கூட அவர்களிற்கு தகுந்த வேலைகள் அந்தந்த நாடுகளில் கிடைக்காததனால் அவர்கள் அந்நிய நாடுகளை நாடிச் செல்கிறார்கள். இதனால் எமது நாடு பெரிதும் பாதிப்படைய வாய்ப்பேற்படுகின்றது.மக்கள் இவ்வாறான காரணங்களால் பாதிக்கப்படுவதால் அவர்களிற்கு மற்றவர்கள் மேல் தவறான அபிப்பிராயமும், குரோத மனப்பான்மையும் ஏற்படுகின்றது.

இவ்வாறு பாதிக்கப்படுபவர்கள் பல கொடூரச் செயல்களைச் செய்வதில் தலைப்படுவார்கள் எனவே சமாதானம் இன்றேல் ஒரு நாடு பல வழிகளில் பாதிப்படைந்து அழிவுப்பாதையில் செல்ல நேரிடும்.

N. பிந்தரன்
தரம் 8

*Best Wishes*

# BOOK
# VISIT
# PITRABAN

S/23 2nd Floor,
Central Super Market Complex,
Colombo - 11.
Tel : 445340

*With Best Compliments*

*From*

**BOOKS**

**VISIT**

# PITRABAN

*S/23, 2nd Floor,*
*Central Super Market Complex*
*Colombo - 11.*
*Tel : 445340*

*With Best Compliments*

*From*

# V.J.P. International Book Shop

"Inter Mod"
240, Galle Road, Wellawatte
Colombo - 6.

Branch: Morden Book Centre,
66, Kotahena Street,
Colombo 13.

# வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலய அன்னைக்கு இக் கவிதை சமர்ப்பணம்

அன்னையே! வித்தியாலய அன்னையே!
ஆண்டு 75 கடந்து விட்டாய்
ஆனாலும் உன் வளர்ச்சி ஆரோக்கியமானது
ஆச்சரியமாய் பார்க்கிறோம் உன்வயதை,

ஏழை மாணவருடன் சிறுகுடிலில் ஆரம்பம்
ஏங்கி நின்ற ஏழைகளை ஏற்றி வைத்தாய்
ஏணிப்படியாய் நீயிருக்க;
ஏறிச் சென்றவர்கள் எத்தனைபேர்;

சாதனைகள் பல படைத்த தாய் நீ
சாற்றிடுவோம் உன்புகழை நாமெல்லாம்
உலகம் முழுதும் சென்றது உன்புகழ்
உன் புதல்வன் கல்விச் சாதனையால்;

திறமைகள் பல இருந்தும் ஏழையம்மா நீ
தீராத குறைகளைத் தீர்த்திட ஆசி தர வேண்டும்
வள்ளல் பலரின் பார்வை படவேண்டும்
வளமான வளர்ச்சிக்கு வாழ்த்துக்கள் வேண்டும்.

ஆண்டு ஒன்று பேனால் வயதொன்று போகும்
ஆனால் உன் முகமோ இளமையானதே
நீ பிறந்த ராசிதான் காரணமோ?
உன் புதல்வர் சிலரின் திறமையோ;

வசதியான இடத்தில் பிறந்தாலும்
வருமானம் மட்டும் போதவில்லை
பாரிபோல் பாரினில் பலர் இருந்து
பவளவிழாக் காணும் நீ பல்லாண்டு வாழி;
பார்முழுதும் பரவட்டும் உன் புகழ்
பார்க்கப் பார்க்கப் பெருமையம்மா;

முயற்சிப்போம் முன்னேற நாம்
முடிந்தவரை உன் நலனுக்காய்ப் பாடுபடுவோம்.

நிஷாந்தா சிவசுப்ரமணியம்
ஆண்டு – 10

## The Importance of Sports

*This saying 'Sound Mind In A Sound Body' shows the significance of sports for the mental and physical well being of each and every individual. What one achieve by sports is primarily and basically is one's health Health is wealth'.*

*Sports should and must from an integral part of educational policies and programmes in every educational institution. Presently it so in this country and it is reason for us to be proud about.*

*Apart from the health concerns, sports enables the participant to cultivate good social habits and cordial relationships, which are very essential to decent living in the modern world. One who takes part in sports learns the art of give and take and is never selfish. Sports help to socialize individuals and also develop the citizenship qualities. Also sports help to develop team sprit, obeying to rules and regulations. Good attitudes can be taught by making individuals participate in physical activities. One can do his studies well when he take part in sports. The most important thing is not to win but to take part, as the most important thing in life is not the triumph but the struggle.*

*A. Anusha Jeevani*
*Grade 11.*

## Value of Friends

Friends are an important part of our life, especially in our school life.

Friendship is a ship made with kindness and happiness. An honest and truthful friend gives us happiness and reduces misery and gloom. By enabling us to share our problems with them, friends help us a lot. Friends can give us lots of new ideas and great pleasure.

We are fortunate to have friends who are happy and proud of our successes. As students we can't be without friends. When we find friends who are worthy we should continue that friendship till we die. As long as our friends are with us life will be delightful.

Vijeyakumaran
Vijeyaraj



1997 - இல்ல
விளையாட்டுப் போட்டி
நிகழ்வுகள்



1997 - பரிசளிப்பு விழா
நிகழ்வுகள்



1997 - பொருட்காட்சி
நிகழ்வுகள்

அதிபருடன் ஆசிரியர்களும், மாணவர்களும்.

*Best Wishes From*
*Grade 9*
*Students*

| | | |
|---|---|---|
| M. Ravikumar | K. Thileepan | K. Yogeswary |
| S. Ruban | I. Prasath. | T. Nirmaladevi |
| R. Kapildev | R. Pragash | N. Thayalini |
| V. Godfrey | S. Suthagar | V. Ajanthy |
| S. Rajanikanth | M.R. Imthiyaz | A. Rosemalar |
| S. Dineshkumar | L. Sivakarishan | G. Ushanthini |
| M. Prasanna | S. Nithan | S. Maryflorida |
| S. Thavanayagam | S. Kandeepan | H. Manorathy |
| P. Jenetmary | S. Niranjan | A. Sarogini |
| M. Gowri | K. Devapriya | N. Nishanthini |
| M. Tharshini | K. Pratheepa | K. Theivanaiammah |
| R. Sivaranjan | S. Abiramy | R. Shobana |
| N. Vickneswaran | S. Tamilarasi | K. Pushpalatha. |
| V. Senthil | A. Parimala | |

*With Best Compliments*

*From*

# Jet Music Corner
# &
# Communication

For Quality Audio Recording in Tamil, English & Hindi,
CD Recording Local Calls, I.D.D. Calls, Fax, Photocopy

1 1/1, St. Lawerence Road,
Colombo 06.
Tel : 074-514670
Fax : 074-514671

# குறள் ஓவியம்




**வான் சிறப்பு**

*மழைமேகங்கள் வர மறுக்கும் வேளைகளில்*
*வறுமை வந்துவிடுகிறது, பூமியை ஆள!*
*வெடித்துக் கிடக்கும் வயல்வெளிகள்*
*உழவர்தம் இதயங்களே!*
*வானம் பொய்க்கும் வேளையில் சோகம்*
*சூழ்ந்துவிடுகிறது!*

*"ஏரின் உழாஅ உழவர் புயலென்னும்*
*வாரி வளங்குன்றிக் கால்."*
*- குறள், 14*

## எல்லை



எதற்கும் ஓர் எல்லை வேண்டும்.
ஒரு மரத்தின் நுனிக்கிளையில் ஏறியவர்
மேலும் நுனிக்குச் செல்ல நினைத்தால்
அதுவே அவரது உயிரின் இறுதிக்கு
வழியாகிவிடும்.

"நுனிக்கொம்பர் ஏறினார் அஃ(து)
இறந்(து) ஊக்கின்
உயிர்க்(கு) இறுதியாகி விடும்."

- குறள், 476



## கொக்கின் அடக்கம் !

காலம் வரும் வரை
கொக்கைப் போல் அமைதியாகக்
காத்திருக்க வேண்டும்.
காலம் வந்ததும்
கொக்கின் குத்தைப்போல் தவறாமல்
எண்ணிய செயலை முடிக்க
வேண்டும்.

" கொக்(கு) ஒக்க கூம்பும் பருவத்து;
மற்(று) அதன்
குத்(து) ஒக்க சீர்த்த இடத்து."

- குறள், 490

## எங்கள் தமிழ் மொழி

எங்கள் தாய்மொழி தமிழ். இது உலகிலுள்ள மிகப்பழைய மொழிகளில் ஒன்று. சில பழைய மொழிகள் பேச்சு வழக்கை இழந்து விட்டன. எழுத்து மொழியாக மட்டுமே இருக்கின்றன. ஆனால் எங்கள் தமிழ்மொழி, பேச்சுமொழியாகவும், எழுத்து மொழியாகவும் விளங்குகிறது எனலாம். இதனால் இது உயிருள்ள மொழி இளமையோடு மேலும் மேலும் வளர்ந்து வரும் மொழி. இதனால் எமது தமிழ் மொழியை கன்னித் தமிழ் என்றும் போற்றுவர். தமிழின் செழிப்பிற்கு காரணமாக விளங்குபவர்கள் பல நூறு புலவர்கள் இயற்றிய இலக்கியங்கள் ஆகும். கம்பர் செய்த இராமாயணம் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் இளங்கோ வடிகள் பாடிய சிலப்பதிகாரமும உலக இலக்கியங்களிலே சிறந்தவை. இவற்றுள் திருக்குறள் உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டு உலகெங்கும் ஒளிக்கிறது. தமிழ் மொழியில் பல சமயங்களைச் சார்ந்த இலக்கியங்கள் உண்டு. சைவம் வைஷ்ணவம், சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம், முதலிய சமயக் கொள்கைகளை உடைய அருமையான மக்களும் புலவர்களை ஆதரித்து தமிழை வளர்த்தனர். இன்று சின்னஞ் சிறுவர்கள் ஆகிய நாங்கள் தமிழைப் பிழையின்றி கற்று அதனை வளர்க்க வேண்டும் எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழ்க.

ஆர். நதியா
ஆண்டு 7

## எனது பாடசாலை

கொழும்பு மாநகரிலுள்ள பல தரப்பட்ட பாடசாலைகளில் எனது பாடசாலையும் ஒன்று. 1924ம் ஆண்டில் சிறு பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று மூன்று மாடிக் கட்டடங்களைக் கொண்ட பெரிய பாடசாலையாக மாறியுள்ளது. "வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயம்" என்ற பெயருடன் இது இயங்கி வருகின்றது. ஆண்டு 1ல் பாடசாலையில் கல்வி பயில்வதற்காக சேரும் ஒரு மாணவன் ஆண்டு 11வரை கல்வி கற்று பரீட்சை எழுதக்கூடியதாக சகல கல்வி வசதிகளையும், சிறந்த ஆசிரியர்களையும் கொண்டதாக இயங்கி வருகின்றது.

எனது பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் எமக்கு மிகக் கவனமாகக் கற்பிக்கின்றார்கள். நாம் அவர்களின் சொற்கேட்டு கவனமாகப் படிக்கிறோம். இதனால் எமது பாடசாலையின் பரீட்சை முடிவுகளும் ஏனைய பாடசாலைகளைப் போன்று சிறப்பானதாக அமைந்துள்ளது. எமது அதிபர் சிறந்த முறையில் பாடசாலையை முகாமைத்துவம் செய்வதை நாம் தினமும் காணக்கூடியதாக உள்ளது.

வருடாவருடம் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, கலை விழா, தமிழ்த்தினப் போட்டி என்று பல நிகழ்ச்சிகள் இடம் பெறுவதால் மாணவர்களாகிய நாம் பல வழிகளிலும் ஊக்கம் பெறுகின்றோம். இதனால் நாம் கற்றற் செயற்பாட்டில் திறமையுடனும் உற்சாகத்துடனும் செயல்பட முடிகின்றது.

எனது பாடசாலை ஆரம்பமாகி 75 ஆண்டுகள், பூர்த்தியடைந்ததைக் குறிக்குமுகமாகக் கடந்த மாதம் பவள விழா கொண்டாடப்பட்டது. மாணவர்களாகிய நாம் அன்றைய தினத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடினோம்.

இப்பாடசாலையில் கற்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக நான் கடவுளுக்கு நன்றி கூறுகின்றேன்.

ச. பிரசாத்
2ம் ஆண்டு


## நான் வளர்க்கும் செல்லப்பிராணி



நல்ல நல்ல நாய்க்குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி
சின்னச் சின்ன நாய்க்குட்டி
செல்லமான நாய்க்குட்டி
வாலை வாலை ஆட்டும்
பாலைப் பாலைக் குடிக்கும்
பந்தை ஓடிப் பிடிக்கும்
பாயச் சொன்னால் பாயும்
உண்ண உணவு கொடுப்பேன்
உறங்க இடமும் கொடுப்பேன்
கண்ணைப் போல காப்பேன்
என்னைப்போல வளர்ப்பேன்


தரம் 1
யோ - டேவிட் மோசஸ்


## Don't Destroy Trees



Trees are
Life givers
Grow them.
Do not stab
someone who
gives you life.
join hands
and work for it.

## End Water Wastage





Water is a vital element
Otherwise we may
end up living in a
desert called India
Join hands and work for it.

*- S. Jeison Samuel Grade 6*

*With Best Compliments*

*From*

**EAST WEST**
**MARKETING (PVT) LTD.**

200, George R De Silva Mawatha,
Colombo 13.
Tel. No.441111

With Best Compliments

From

## கொ/ வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயம்
## பவள விழாவும், பரிசளிப்பு விழாவும்

இனிதே உயர்ந்து வளர்ந்து சிறக்க
இதயத்தில் வாழ்த்துகிறோம்

**விஞ்ஞானம் – கே.கே. உதயகுமார்**
**கணிதம் – எஸ். சுந்தரலிங்கம்**

Brilliant
Kotahena
Tel : 347728

Sangam
Wellawatta
Tel ; 583759

*With Best Compliments*

*From*

# Economics
# For
# A/L, G.A.Q.
# By
# S.H.M.Naffbal

*(B.A.Hons., Econ. ,Spe. ,Dip.in.Edu. ) S.L.P.S.*

Brilliant - Colombo 13
Sangam - Colombo 06
Zec - Kandy

*With Best Compliments*

*From*

# Mr. M.A.M. Shafideen & Family

Naima Mahal
Main Street,
Sainthamaruthu,
Kalmunai.

*With Best Compliments*



*From*


# DHANAN GRAPHICS,

**Computer Typesetting in all three Languages**
**in any format or layout & Printing**

*Wellawatte Complex,*
*No.257 GH, Galle Road, Colombo 6.*
*Tel : 071-7-61658*

# RST ENTERPRISES


C 3/4, Anderson Flats, Narahenpita, Colombo - 05
Tel : 501715, 071-7-61658, 078 - 610433
Fax : 501715, 597945



1998 - உடற்பயிற்சி கண்காட்சிகள்

பயிற்சி திருமதி. சா. அருள்ஞானசெல்வம்





1998 - விளையாட்டு நிகழ்வு அணிநடை

*With Best Compliments*

*From*

LANKEM

CEYLON LIMITED


P.O.Box : 9191

T. Grams Lalankem


Tel : 698292 - 6

யோகாசனம் பற்றி பேராசிரியர்
சிவசுவாமி உரையாற்றுகின்றார்
இந்து கலாச்சார அமைச்சின்
உதவிப் பணிப்பாளர்
திரு. குமார்வடிவேல் அவர்களும்
அதிபர் திருமதி இ.இராசரத்தினம்
அவர்களும்



மாணவர்களுடன்
யோகாசனப் பயிற்சியில்
சிவசுவாமி அவர்கள்



# தாய்

"தாயிற் சிறந்த கோயிலுமில்லை."

உலகில் அதிசக்தி வாய்ந்த தெய்வத்தின் பெயர்தான் "அம்மா" அத்தெய்வமில்லையேல் உலகமில்லை. எமக்கு உயிரும் இல்லை. அம்மா என்று அழைப்போரை இரு கரம் நீட்டி அரவணைப்பவள் அம்மா. எம்மை உயர்த்தும் ஏணியாக இருப்பவள் அம்மா. நாம் இந்த உலகில் கலந்ததுமே எம் உயிரில் கலந்த உயிர்தான் அம்மா.

அம்மா என்ற மூன்றெழுத்தில் எத்தனை தன்மைகள் எவ்வளவு கருத்துக்கள். அன்பு, அறிவு, கருணை, அமைதி, பொறுமை, பணிவு, அருள், சாந்தி, இன்னும் பல ஊற்றெடுப்பது அம்மாவில்தான். பத்து மாதங்கள் சுமந்து பெற்றெடுத்து உதிரத்தை பாலாக்கும் அம்மாவின் அன்பை யாராலும் விலை கொடுத்து வாங்கமுடியாது.

அம்மாவைப் பாடிப் புகழாத கவிஞனும் இல்லை. புகழாதவன் கவிஞனாகவும் இருக்க முடியாது. எம்மை அறியாமலே எம் உணர்வுகள் கலந்த சொல்தான் அம்மா. "அம்மா என்றழைக்காத உயிரில்லையே, அம்மாவை வணங்காமல் உயர்வில்லையே" என்னும் வரிகள் இன்றும் எம் காதினிலே ஒலிக்கும் கவிதைத்துளிகள்.

எம் முன்னேற்றத்தில் மகிழ்ச்சியைக் காண்பவள் அம்மா. எம் சிரிப்பில் உலகைக் காண்பவள் அம்மா. நாம் பிறந்த பின் எமக்கு அப்பாவையும், உலகையும் காட்டுபவள் அம்மா. எமது உறவினிலே சிறந்த உன்னத உறவு அம்மா. ஆகவே எமது உயிரான அம்மாவை மதித்துப் போற்றுவது எமது கடமையல்லவா?

தி. சர்மிளா
ஆண்டு 5

# என் ஆசை நிறைவேறுமா?

பவளவிழா கொண்டாடும் என் செல்வங்களே, உங்கள் மகிழ்ச்சிகண்டு நான் பூரித்து நிற்கின்றேன். காலம் பொன்னாது. கடமையைச் செய்யுங்கள். அன்பு, அருள், பொறுமை, வாய்மை முதலிய நற்பண்புகளைப் பேணுங்கள். பிறர் இயல்பு அறிந்து ஒழுகும் குணத்தை வளர்த்தல் வேண்டும். அமைதி, அடக்கம், ஒழுங்கு முதலியவற்றை மறவாதீர்கள்.

நீங்கள் நற்பிரஜைகளாக இச் சமூகத்தில் வாழவேண்டும். உங்கள் புகழ் மேலும் ஓங்க வேண்டும். செய்வீர்களா? என் ஆசை நிறைவேறுமா?

க.ஜலந்தரி
ஆண்டு 3

# பெண் கல்வி




*செல்லமகள் ஒருத்தி*
*பள்ளிக்குச் செல்ல அழுகிறாள்...*
*அவளுக்குத் தாய்மையின் பண்பில்*
*தந்தையின் ஆறுதலிது...*
*தலைவாரிப் பூச்சூடி உன்னைப் - பாட*
*சாலைக்குப் போஎன்று சொன்னாள் உன்அன்னை !*
*சிலைபோல ஏனங்கு நின்றாய்? - நீ*
*சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்?*
*விலைபோட்டு வாங்கவா முடியும் ? - கல்வி*
*வேளைதோறும் கற்று வருவதால் படியும் !*
*மலைவாழை அல்லவோ கல்வி ? - நீ*
*வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி !*

*- பாரதிதாசன்*

# பாலர் கல்வி

திருமதி. ஜெ. சிவலிங்கம்

மழலைச் செல்வங்கள் - இது மனிதன் வாழ்வை மனோகரமாக்கும் மதிப்பிற்குரிய சொத்து. குழந்தையின் குறு குறு விழிப்பார்வை, தளிர் நடை, மழலைச் சொல் கள்ளங்கபடமற்ற சிரிப்பு இவை யாவரையும் ஈர்க்க வல்லது. அதன் உச்சிதனை முகர்ந்தால் உள்ளங்குளிரும்; மழலையில் அமுதூறும்; புன்சிரிப்பில் உடல் பூரிக்கும். மலையளவு துன்பம் கூட குழந்தையின் முன்னே ஆதவனைக் கண்ட பனியென அகன்று விடும். இன்றைய குழந்தையே நாளைய மனிதன் எனலாம்.

இங்ஙனம் உயர்வுள்ள குழந்தை உடல் வளர்ச்சியிலும், உள வளர்ச்சியிலும் உன்னத நிலை எய்த வேண்டாமோ? உலகப்புகழ் பெறவேண்டாமோ? ஒரு குழந்தையின் இயல்பூக்கங்கள் யாவும் பாலபருவத்திலேயே விடுவிக்கப்படுகின்றன என்பது உளநூல் வல்லுனர்களின் கருத்தாகும். ஐந்து வயதிற்குள்ளேயே மனிதன் தன் பூரண அமைப்பை பெற்று விடுகின்றான் என்று 'பிராய்ங்' என்ற உளநூலாசிரியர் எடுத்துக் கூறுகின்றார். "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்ற முதுமொழியும் இதனை நமக்கு உணர்த்துவதாகவே அமைந்துள்ளது.

பாலர் கல்வி பெற வரும் மாணவன் ஒருவனை நாம் வித்து ஒன்றிற்கு உவமித்துக் கொள்ளலாம். பாடசாலை என்பது தோட்டமானால் பாலர் வகுப்பு என்பது அவ்வித்து முளைப்பதற்குரிய பாத்தியாகும். பாலன் என்ற வித்திடம் இருக்கும் அறிவு, ஆற்றல், திறமை முதலியவற்றைத் தெரிந்து அவற்றை வெளிப்படுத்த வேண்டி செயல் புரியும் தோட்டக்காரனாக பாலரை பயிற்றுவிக்கும் ஆசிரியன் இருக்கின்றான். ஓர் அழகான மலர்ச் செடியை வளர்க்க நிலத்தைக் கொத்தி, பண்படுத்தி, நீர்பாய்ச்சி, உரமிட்டு அது வளர அல்லும் பகலும் உழைக்கும் தோட்டக்காரன் பணியை விட அதிக கஷ்டமானது ஒரு பாலர் கல்வி கற்பிக்கும் ஆசிரியன் பணி. ஒரு கட்டிடத்திற்கு அத்திவாரம் பலமாக அமையாவிட்டால் கட்டிடமே ஆட்டங் கண்டு விடுமென்பது அனுபவ ரீதியாக நாம் கண்ட உண்மையாகும். இது போலவே ஒருவனின் பாலப்பருவ கல்வி அதாவது ஆரம்ப கல்வி முறையாக அமையாவிடில் அவன் எதிர்கால கல்வி வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு விடும். இது மறுக்க முடியாத உண்மையாகும். குழந்தைகள் நன்கு வளர்ந்து உலகில் தம் ஸ்தானத்தை நல்ல முறையில் வகித்து சமுதாய முன்னேற்றத்திற்கு உதவக் கூடியவனாக வளரவும் இவ்வாரம்ப கல்வியே அத்திவாரமாக அமைகிறது. பாலர்களுக்குரிய கல்வி அவதானமுடையதாக இருக்க வேண்டும். எழுத்தறிவிக்கும் இறைவனாக உள்ள ஆசிரியன் குழந்தைக்கு இயல்பாக அமைந்துள்ள திறமைகளை மலர்ச்சியடையச் செய்வதில் அதிநுட்ப வழிகளைக் கையாள வேண்டும்.

கற்பித்தலுக்கு உளநூல் கல்வி அவசியம் என்பதை மேல் நாட்டறிஞர்கள் வலியுறுதிதிக் கூறியுள்ளனர். 'குழந்தைகள் பூங்கா' எனப்படும் முறையினை உவந்தளித்த பிரேயல் பெரியார் "நாம் குழந்தைகளோடு குழந்தைகளுக்காக வாழ்வோம்", என்று கூறியுள்ளார். இக்கூற்றானது குழந்தையின் இயல்புகளை அறிந்து அதற்கேற்ப ஆசிரியன் கற்பிக்க வேண்டுமென்பதை உணர்த்துகிறது. ஆரம்ப பாலர் கல்வியானது முறையாக அமையாவிடில் குழந்தையினால் அதற்குப் பின் தொடரப்படும் கல்வி பாதிக்கப்படும் என்பதை பாலர்கல்வி பயிற்றும் ஆசிரியர் மறந்து விடக்கூடாது.

இவ்வகுப்புக்கு அநேகமாக ஐந்துக்கும் ஆறுக்கும் இடைப்பட்ட வயதுடைய மாணவர்களே கல்வி பெற வருவர். வீட்டில் இருந்து வருபவர்களுக்கு பாடசாலைச் சூழல் முற்றிலும் புதியதாகவே உள்ளது. முதல் பாலர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டியது எதுவெனில் இச்சூழலுக்குத் தகுந்தவாறு அவர்களை பழக்குவதேயாகும்! இதுவரை காலமும் தன் இச்சைப்படி சுதந்திரமாக இயங்கிய பாலகனை வகுப்பில் ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருக்க பழக்குதலாகும். ஆரம்ப காலத்தில் சுதந்திரப் போக்கிற்கு இடமளித்து பின் அவர்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரல் வேண்டும். பாலர் வகுப்பறை இட விசாலமுள்ளதாக காற்றோட்டமுள்ளதாக இருத்தல் வேண்டும். கரும்பலகை அவர்களுடைய பாலர்கல்வியில் உபகரணங்கள் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. உபகரணங்கள் கற்பித்தலையும் - கற்றலையும் இலகுவாக்க உதவுகின்றன. இளஞ் சிறார்கள் பல்வேறு இயல்பூக்க சிந்தனை வளர்ச்சிக்கு அவை உறுதுணை புரிகின்றன. வகுப்பறையில் பாலர்களைக் கவரும் அவர்களுக்கேற்ற படங்களை தொங்க விடல் வேண்டும். மிருகங்கள், பறவைகள், வாகனங்கள் போன்றவையும் கதைப்படங்களும் அவர்களை ஈர்க்க வல்லன. சொல்லட்டைகள் என்பன தெளிவாக பெரிய எழுத்துகளில் எழுதியவையாக அமையவேண்டும். பெயர்களுடன் கூடிய சொல்லட்டைகளை நாள் தோறும் காணும் குழந்தை அதை கிரகித்து தன் மனத்தில் நன்கு பதியவைத்துக் கொள்கின்றது. எண் உபகரணங்களாக நிற மணிகள், விதைகள், நூற்கட்டைகள், நிறக்கரண்டிகள்போன்றவற்றுடன் மணிச்சட்டங்கள், எண்ணக் கருவை வளர்க்க உதவும் படங்கள் என்பவை உதவக் கூடியதாக இருக்கும்.

பாலர்களுக்குரிய உபகரணங்கள் அவர்கள் சிரமமின்றி கையாளக் கூடியதாக பாரமற்று இருத்தல் நன்று. கண்ணாடி போன்று உடைந்தால் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவற்றை பயன்படுத்துவது விவேகமல்ல! உபகரணங்கள் பாலர்களை கவரக் கூடியதாக இருப்பின் அவர்கள் விரும்பி கையாண்டு கற்பர்.

பாலர் வகுப்பிற்கு வரும் மாணவர்கள் எல்லோரும் ஒரே தரம், ஒவ்வொரு மாணவனையும் ஆழ்ந்து ஆராய்ந்து அளக்க வேண்டிய நிலையிலுள்ளான். பிஞ்சு உள்ளங்களை நோகச் செய்யாமல் தாய்க்குத் தாயாக, தந்தைக்குத் தந்தையாக, உற்றத் தோழனாக, அறிவைக் கொடுக்கும் ஆசானாக இருந்து வழி நடத்த வேண்டியவனாக உள்ளான். பாலர்களைப் பயிற்றுவிப்பவர்கள் சகிப்புத்தன்மையும், பொறுமையும் நிறைந்தவர்களாக இருத்தல் அவசியம். குழந்தைகள் புதிதாக மலர்ந்த மலருக்கு ஒப்பானவர்கள். இதமாக ஸ்பரிக்கக் கூடிய மலரை அழுத்திக் கசக்கினால் எப்படி நசுங்கி விடுமோ அதே போல் மென்மையான உளம் படைத்த பாலர்களிடமும் ஆசிரியனானவன் அன்பின் தெய்வீக உணர்ச்சியைக் காட்டி கல்வி போதித்தல் அவசியம். இல்லையேல் குழந்தையின் உள்ளத்தைப் பாதிப்படையச் செய்யும் செயல்கள். குழந்தைப் பூவின் மென்மையையும், மலர்ச்சியையும்

அனலாகக் கருக்கி விடும் என்பதை ஆசிரியன் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். எனவே பாலரை பயிற்றுவிக்கும் ஆசிரியன் தன் முக்கிய பொறுப்பான பணியை தியாக மனப்பான்மையுடன் புரியும் சேவையை புனிதமாகக் கருதி செயல்பட வேண்டும். பாலர்களின் சிந்தனா சக்தி, கற்பனைத் திறன், ஆற்றல்கள் துலங்குவதற்கு வழி செய்ய வேண்டும். ஆசிரியரும் ஆர்வமிக்கவராக இருந்து வழிநடத்த வேண்டும்.

பாலர்களின் எண்ணங்கள், செயல்களுக்கு முற்றிலும் மாறுபட்டவையாகும். நாம் இதனை மறந்து விடலாகாது. அவர்கள் சுதந்திரமாக செயல்பட இடமளித்தல் வேண்டும். இவ் விஞ்ஞான உலகில் எங்கும் எதிலும் நவீன முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. விஞ்ஞான ரீதியாக கண்டு பிடிக்கப்பட்ட உத்தி முறைகள் கையாளப்பட்டு ஆரம்பக் கல்விக்கு முக்கிய இடம் தரப்பட்டு வருகின்றது.

வெறும் ஏட்டுக் கல்வியாக இருந்த ஆரம்ப பாலர் கல்வி முறையில் பல்வேறு மாற்றங்கள்! இன்று மாணவர்கள் ஆரம்பக் கல்வியிலேயே எதனையும் கண்டு, கேட்டு, உண்டு,உயிர்த்து கற்கும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளனர். பாலர்கள் ஒரு விடயத்தினைப் பற்றி ஏட்டளவில் படிப்பதை விட இங்ஙனம் செயல்முறையின் மூலம், படமூலம், உண்மைப் பொருள்கள் மூலம், நேரடி அனுபவ மூலம் அறியும் போது கற்றல் அவன் மனதில் நன்கு பதிகிறது. கற்பித்தலும் இலகுவாகின்றது. பாலர் கல்வி விளையாட்டு முறை மூலம் பெரிதும் நடைபெற்று வருகிறது. இங்கு பாலகன் ஒருவன் தான் கற்கின்றதை அறியாமலேயே கற்றல் நிகழ்கிறது. மொழி, எண் போன்ற அடிப்படை அறிவை வளர்க்கும் பாடங்களை விளையாட்டு முறை மூலம் இலகுவாகக் கற்பிக்கக்கூடியதாக உள்ளது. மாணவர்களும் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் சிறந்த விளையாட்டு முறைக் கல்வியினால் பலன் பெறக்கூடியதாக உள்ளது. சொல்லட்டைகள், உண்மைப் பொருள்கள், கண்கவர் வண்ணப் படங்கள் என்பன பிரதான உபகரணங்களாக பாலர் கல்வியில் இடம்பெறுகின்றன. படங்கள் இளஞ்சிறாரின் கண்ணையும் கருத்தையும் விரைவில் கவரக்கூடியன. உதாரணமாக 'கிளி' என்ற விடயத்தைப் படிப்பிக்கும் பொழுது அதனை வண்ண அழகிய படம் மூலம் காட்டினால் அதன் மேனி பசுமையாக இருப்பதை, அதன் சொண்டு வளைந்து இருப்பதை, கழுத்தில் வட்ட ஆரம் இருப்பதைக் கண்டு கொள்கின்றான். 'பூக்களைப் பற்றி கற்பித்தல் நடக்கும் போது உண்மைப் பொருளான பூக்களையே உபகரணமாகக் கொண்டு படிப்பிக்கலாம். இதில் பல்வேறு விதமான பூக்களைக் காட்டும் பொழுது அவற்றின் பலதரப்பட்ட வடிவங்கள், அமைப்புக்கள், நிறங்கள், மணம் போன்ற மலரைப் பற்றி சகலவற்றையும் நேரடி அனுபவமூலம் குழந்தை அவ்வறிவைப் பெற சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

எண் சம்பந்தமான எண்ணக்கருவை பல்வேறு உபகரணங்கள் மூலம் கற்பித்து அவ்வறிவை ஏற்படுத்தலாம். இலங்கையில் தற்போது ஆரம்ப கால கல்வி குழு முறையின் மூலம் ஒன்றிணைந்த பாடத்தின் கீழ் நடைபெற்று வருகிறது. இதன்படி சுற்றாடல், எண், மொழி, ஆக்கமுயற்சி, விளையாட்டு அழகியற்கலைகளாகிய இசை, சித்திரம், என்பன பாலர் கல்விக்குரிய பாடங்களாகும். ஒன்றிணைந்த கல்வித் திட்டத்தின் மூலம் ஒரே விடயம் பல பாடங்களிலும் செயற்படுத்தப்படுகின்றன. உதாரணமாக 'பூக்கள்' என்ற விடயம் கற்பிக்கப்படும் விடயமானால் மொழிப் பாடத்தில் பூக்களின் பெயர்களை எழுதல் இடம்பெறும். சுற்றாடலில் அவற்றைப் பற்றிய விளக்கங்கள் கலந்துரையாடப்படுகின்றன. எண் பாடத்தில் பூக்களை எண்ணிக்கைகளாக எழுதுதல், சித்திரத்தில் வண்ணப் பூக்களைக் கீறல், ஆக்க வேலையில் பூக்களின் உருவங்களை விதவிதமாக வெட்டி ஒட்டல், மாலை கோர்த்தல், இசையில் பூவைப் பற்றிய பாடல் இடம்பெறும்.

சுற்றாடல் விடயம் மையப் பொருளாக இருந்து வருகின்றது. இதனை ஒட்டியே பிற பாட விடயங்கள் இடம்பெற்று வருகின்றன. வாசிப்பு, எழுத்து இவற்றுடனும் நிகழ்கின்றதோடு அவர்கள் பாடநூலும்

இவ்வறிவை மாணவர் பெற உதவி புரிகின்றது. வாசிப்பு, மொழி அறிவு வளர ஆசிரியர் பல்வேறு முறைகளைப் பின்பற்றி கற்பிக்கவும் வாய்ப்புண்டு.

பாலர் கல்வியில் கதை கூறல் முக்கிய இடம் பெறுகிறது. காரணம் இவர்களுக்கு கதை என்றால் கொள்ளை ஆசை. ஆசிரியன் நவரசங்களும் பொருந்திய நடிகனாக மாறி கதை கூறுவானேயானால் பிள்ளைகள் ரசிக உணர்வுடன் செவிமடுக்கும் தன்மையைப் பெறுகிறார்கள். பாலகர்களுக்கேற்ற அறிவுரை கூறும் கதைகள், சிரிப்பூட்டும் கதைகள் இடம்பெறலாம். கதையில் வரும் பாத்திரங்களுக்கேற்ப பாவம், தொனி இவற்றைக் கையாண்டு கதைகள் கூறினால் பாலர் இன்பம் அடைவர். பாலர்கள் விரும்பும் விடயத்தை மையமாகக் கொண்ட கதைகள் அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். கதைகளை செவிமடுக்கச் செய்வதன் மூலம் சிறாரின் கிரகித்தல் அறிவை வளர்க்கலாம்.

பாலர் கல்வியானது உடல்வளர்ச்சி, ஆன்மவளர்ச்சி, செயற்றிறன் வளர்ச்சி இவற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். காட்சி முறை மூலம் தான் கற்பவற்றைக் காணும் அறிவைப் பெறுகிறான். செவிப்புலன் முறை மூலம் கேட்டல் திறனை விருத்தி செய்து கொள்கின்றான். இசைப்பாடம் இம்முறையில் அமைந்ததாகும். இலகுவான எளிய நடையிலுள்ள பாடல்களை ரசனை உணர்வு மூலம் கற்பித்தல் நன்று. தாளத்திற்கேற்ப குழந்தைகள் குழு முறையிலும், தனித்தனியாகவும் பாடவழி செய்தல் வேண்டும். அபிநயத்துடன் பாடுவதை அவர்கள் பெரிதும் விரும்பி ரசிப்பர்.

சித்திரம் இது பாலர்களின் கற்பனா சக்தியை வெளிப்படுத்தும் பாடமாகும். வண்ணப் பென்சில்களால், நிறக் கட்டிகளால் தனக்குத் தெரிந்தவாறு தன் கற்பனைத் திறனை வரைந்து வெளிப்படுத்துகின்றான். அவனது சித்திர அறிவை பாலர் கல்வியிலிருந்தே வளர்க்க முனையலாம். தற்போதைய நம்நாட்டு கல்வி முறையில் இச் சித்திரம் பெரும்பாலும் ஆரம்பக் கல்வியில் பெரிதும் இடம்பெற்று வருகிறது. ஆக்க முயற்சியின் வாயிலாக கைவினைத் திறனை பாலகன் பெற்றுக் கொள்கின்றான். புதிய முறைக் கல்வித் திட்டத்தின் கைவேலைக்குரிய பொருள்கள் பெரும்பாலும் கழிவுப் பொருளைக் கொண்டு அதாவது டொபி தாள்கள், சவர்க்காரத்தின் மேலுறைகள், வெட்டுத் துணிகள், பழைய பவுடர் டின், பாக்குத் தோல்கள், பென்சில் சீவும் பொழுது வரும் துகள்கள், வெற்று சிகரெட், தீப்பெட்டிகள் போன்று எறியக் கூடிய கழிவுப் பொருள்கள் மாணவர் கைவண்ணத்தில் அழகிய பல்வேறு விதமான கைவினைப் பொருள்களாக உருவாகின்றதற்கு உதவி செய்கின்றன.

அறிவுத்துறையில் குறைந்த நிலையிலுள்ளவர்களில் பெரும்பாலோர் சித்திரம், ஆக்கமுயற்சி, இசை முதலிய பாடங்களில் ஏதாவது ஒன்றில் கூடிய நாட்டமுள்ளவர்களாக இருப்பதை நாம் அவதானிக்கலாம். இவற்றில் நல்லறிவு, ஆற்றல் உள்ளவன் அதை ஆரம்பக் கல்வியில் இருந்தே முறையாகப் பெறுவானேயானால் அதில் சிறப்புற்று விளங்க அவை பெரிதும் உதவும். விளையாட்டுப் பாடத்தின் மூலம் பாலர்களிடையே சமூக இசைவாக்கப் பண்புகளை வளர்க்கலாம். குழு முறையாக இயங்கும் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்விகளை சமனாக ஏற்கும் மனப்பாங்கு இவற்றை விளையாட்டு பாடத்தின் மூலம் ஏற்படுத்தலாம். மெய்ப்பாட்டு வளர்ச்சிக்கு இப்பாடம் பெரிதும் துணைபுரிவதாக அமைகிறது. சிறார்கள் இலகுவில் களைத்து விடக்கூடியவர்கள். அதாவது தொடர்ந்து ஒரே தன்மையான பாடங்கள் அவர்களை அலுப்புறச் செய்து விடும். இச் சந்தர்ப்பங்களில் சித்திரம், கைவேலை, இசை, விளையாட்டு என்பன அவர்களை உற்சாகப்படுத்தும் பாடங்களாக அமைகின்றன.

பாலர் கல்வியில் அமைந்துள்ள பாடங்கள் ஒவ்வொன்றும் அவனுடைய ஆரம்பகால அறிவைத் துலங்கச் செய்வதாகவே அமைந்துள்ளன. இத்துலக்கத்தைப் பாடசாலையில் ஆசிரியன் தூண்டுகோல் கருவியாக இருந்து வழி நடத்துவதை வீட்டில் பெற்றோர் அவற்றை மேலும் துலங்கச் செய்ய உதவிபுரிதல் மிகவும் அவசியமானதாகும்.

பாலர் கல்வியில் இப்பாட சம்பந்த அம்சங்களை விட மிகப் பிரதானமாகக் கருதப்படுவன ஒழுக்கம், நற்பழக்க வழக்கங்கள் ஒழுங்குமுறைகளாகும். ஆம்! இளம் வயதிலேயே கடைப்பிடிக்கப்பட்டு வரவேண்டிய நற் பழக்கங்களை ஊட்டி விடல் வேண்டும். இதற்கு அடித்தளம் இக் கல்வியிலேயே தான் அமைகிறது. ஒருவருடன் அனுசரணையாக வாழப் பழகல் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தோழமை உணர்வு, ஒற்றுமை, சுகாதாரப் பழக்கங்கள் பெரியோர், பெற்றோர், ஆசிரியர், தனக்கு மூத்தோர்களை மதிக்கும் பண்பு, பொறுப்புணர்ச்சி, இறைபக்தி, பிறர் பொருட்கள்.தம் உடைமைகளை, பழக்கங்களை பாலர்கள் இவ்வாரம்பக் கல்வியோடு கற்றுக்கொள்ள கற்பிக்கப்படல் வேண்டும்.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற வாக்கியத்தின்படி அவர்களை இளம் வயதிலே இவற்றை கைக்கொண்டு ஒழுக வழிவகுக்க வேண்டும். இது குழந்தையின் எதிர்கால வாழ்வு நன்முறையில் அமைய துணைபுரியும். புதிய அனுபவங்களை பாலர்கள் பெரிதும் விரும்புவர். இதை அவர்கள் பெறுவதற்கு பாலர்

கல்வி ஆசிரியன் உதவுவதல் வேண்டும். பாலர் கல்வி இங்ஙனமாக முறையோடு கூடியதாக அமைய வேண்டியது மிக முக்கியம். இப்பெரும் பொறுப்பின் அதிகளவு பங்கினைச் செய்யக்கூடியவர்களாக இருப்பவர்கள் பாலர் கல்வி ஆசிரியர்களே!

பாலர் கல்வியே பின்னால் பெறப்படும் கல்விக்கு உயிர்நாடியாக இருப்பது. இங்கு முறையாக கல்வியைப் பெற்றுக் கொள்ளாதவன் பின் தங்கிய நிலைக்குத் தள்ளப்படுகிறான். முப்பது நாற்பது மாணவர்களை பயிற்றுவிக்க வேண்டிய நிலையிலுள்ள ஆசிரியனுக்கு பின் தங்கிய மாணவனுக்காக பெரும்பகுதி நேரத்தை செலவழிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. இயன்றளவு ஆசிரியன் அம் மாணவர்களுக்காக தன்னாலான சேவையை ஆற்றும் அதே சமயத்தில் இப்படியான மாணவர்களின் பெற்றோர் கூடிய அக்கறை செலுத்தி தத்தம் பிள்ளைகளை ஆரம்ப காலம் தொட்டே வழிநடத்தி வரல் வேண்டும். பாடசாலையில் நான்கு மணி நேரத்தை மட்டுமே செலவிடும் பாலகன் எஞ்சிய தன் முழு நேரத்தையும் வீட்டிலேயே கழித்து வருகிறான். எனவே அவனை தகுந்த முறையில் வழி நடத்தி பெற்றோரும் தம்மால் இயன்ற ஒத்துழைப்பை நல்கி ஆசிரியர்களுக்கு உதவி புரிபவர்களாக இருப்பின் நன்று.

பாலர்கள் கண்ணாடி போன்றவர்கள். கண்ணாடியில் பிம்பம் பதிவது போல் எதுவும் இலகுவில் ஆழமாக பதியக் கூடியதாக அவர்கள் மனம் அமைந்துள்ளது. எனவே நல்ல முறையில் அமையப் பெறும் பாலர் கல்வியானது ஒரு குழந்தை பிற்காலத்தில் நல்ல கல்வியறிவு, ஒழுக்கம் பெற்ற சிறந்த பிரஜையாக உருவாக ஏதுவாகின்றது.

" ஐந்தில் வளையாது ஐம்பதில் வளையுமா?" என்ற முதுமொழியை யாம் யாவரும் அறிவோம். எனவே பால பருவத்திலேயே சிறார்கள் நற்கல்வியறிவு பெற்று எதிர்காலத்தில் சிறந்தவர்களாகத் திகழச் செய்யும் நோக்கதினைக் கொண்டதாக பாலர் கல்வி அமைய வேண்டும். இதனை பாலர் கல்வி கற்பிக்கும் ஆசிரியனும் மனத்திற் கொண்டு தன் சேவையை செவ்வனே ஆற்றல் வேண்டும்.

மேலே எடுத்துக் காட்டிய விளக்கங்கள், விபரங்களில் இருந்து பாலர் கல்வியின் மகத்துவத்தை நாம் யாவரும் அறிந்து கொள்ளலாம். இப்பாலர் கல்வி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதும் புலனாகிறது. ஒரு குழந்தை பெறும் சிறந்த முறையான பாலர் கல்வியானது அது தன்னிடமுள்ள அறிவு ஆற்றல் திறங்களை வெளிப்படுத்தி பண்படுத்தப்பட்ட நிலத்தில் பயிரிடப்படும் வித்திலிருந்து முளைத்து வரும் நற்பயிராக வளர்ந்து வரும் என்பதில் ஐயமில்லை.

திருமதி. ஜெ. சிவலிங்கம்

### A Yogi's Age

A yogi takes one meal a day;
Sleeps Three hours;
Lives disease free
For 120 years.

A Rogi takes two meals a day;
Sleeps six hours;
Lives disease full
for 90 years.

A traitor takes three meals a day;
Sleeps nine hours;.
Lives with chronic disease
For sixty years!

### யோகியின் வயது

ஒரு வேளை உண்பான் யோகி
அவன் துயில் நேரம் மூன்று மணி
அவன் வயது நோயில்லா
நூற்றிருபது வருடங்கள்

இரு வேளை உண்பான் ஙரோகி
அவன் துயில் நேரம் ஆறுமணி
அவன் வயது நோயுடன்
தொண்ணூறு வருடங்கள்,

மூவேளை உண்பான் துரோகி
அவன் துயில் நேரம் ஒன்பத மணி
அவன் வ்யது நோய்மிகு
அறுபது வருடங்கள்

# தமிழ்ப் பண்பாடு தந்த நிலங்கள்



## குறிஞ்சி

மலையும் மலையைச் சார்ந்த இடமுமே குறிஞ்சி ;
அது மனித வாழ்க்கையின் ஆரம்பத்தொட்டில்.
நதியை நடைவண்டியாகக் கொண்டு
நாகரிகம் இங்கேதான் நடக்கப் பழகியது!



## முல்லை

காடும் காட்டைச் சார்ந்த இடமுமே முல்லை;
அது குறிஞ்சியின் தங்கை ;
மருதத்தின் தமக்கை ;
பாலையின் தூரத்து உறவு.
பசுக்களின் மடிமேகப் பால்மழையில் செழிக்கும்
நிலம்தான் முல்லை நிலம்.



## மருதம்

*வயலும் வயல் சார்ந்த இடமுமே மருதம்.*
*இதுதான் வாழ்க்கையின் அழகை முதன்முதலாக*
*மனிதனுக்கு அறிமுகப்படுத்திய நிலம் ;*
*பசியின் பகைப்புலம்.*



## நெய்தல்

*கடலும் கடலைச் சார்ந்த இடமுமே நெய்தல்.*
*உப்புநீர் வயலின்*
*கட்டுமர உழவர்கள் செய்யும்*
*மீன்களின் அறுவடையே*
*நெய்தல் வாழ்க்கையின் அடிப்படையாகும்.*



## பாலை

*மணலும் மணல் சார்ந்த இடமுமே பாலை.*
*முல்லையும் குறிஞ்சியும்*
*முறைமையின் திரிதலால் தோன்றும் நிலமிது.*
*சூரியச் சூட்டில் தோன்றிய*
*மண்ணின் கொப்புளம்.*

# Staff at Wellawatte G.T.V. Colombo

| | |
|---|---|
| *01. Mrs. I Rajaratnam* | *- B.A.(Econ.) Special Dip-in Ed. S.L.P.S-I-Principal* |
| *02. Mr.P.Mahalingam* | *- Sci Trd. S.L.P.S II Deputy -Principal* |
| *03. Mrs.N.Selvarajah* | *- B.A.(Geo.) Special Dip.in.Ed Sectional Head* |
| *04. Mrs.K.Vadivel* | *- Music Trd* |
| *05. Miss.S.Karunairatnam* | *- B.A* |
| *06. Mrs.P.Pathmanathan* | *- Ho.Sc.Trd.* |
| *07. Mrs.T.Uruthrawathy* | *- Sc. Trd.* |
| *08. Mrs.S.Balasubramaniam* | *- Tamil Trd.* |
| *09. Mrs.B.Sornarajasingam* | *- Dip-in-Music* |
| *10. Mrs.G.Balathayalan* | *- B.A. Dip-in-Ed* |
| *11. Mrs.S.Arulgnanaselvam* | *- Rel. Trd.* |
| *12. Mrs.P.Yogaparthiban* | *- Sc.Trd.* |
| *13. Mrs.H.Zarook* | *- Sc.Trd.* |
| *14. Miss.R.Ranjithadevi* | *- Ho.Sc.Trd.* |
| *15. Mrs.K.Varnakulasingam* | *- Primary Trd.* |
| *16. Mrs.S.Kuladevan* | *- Sc.Trd.* |
| *17. Mrs.K.Keerthiseelan* | *- B.A. Dip-in-Ed.* |
| *18. Mrs.D.Arumugasamy* | *- B.A. Dip-in-Ed.* |
| *19. Mrs.A.Thevaranjany* | *- Eng.Trd.* |
| *20. Mrs.P.Thirukumaran* | *- Eng.Trd.* |

## Organizing Committee

*Mrs. I. Rajaratnam (Principal)*
*Mrs.G.Balathayalan*
*Mrs.T.Uruthrawathy*
*Mrs.H.Zarook.*

# பரிசுகள் பெறுவோர் விபரம்

## ஆண்டு-1

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆனந்தகுமார் திவாகரன் | சைவமசயம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 1ம் இடம் |
| | | தமிழ் எழுத்து | 1ம் இடம் |
| | | கணிதம் | 1ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 1ம் இடம் |
| 2. | சுப்பிரமணியம் குஷேன் | கணிதம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | தமிழ் எழுத்து | 2ம் இடம் |
| | | சைவசமயம் | 2ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 2ம் இடம் |
| 3. | கிறேஸா இராஜமாணிக்கம் | கத்தோலிக்கம் | 1ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 2ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |
| 4. | லோகநாதன் கிரிசாந்த் | கணிதம் | 1ம் இடம் |
| | | தமிழ் எழுத்து | 3ம் இடம் |
| 5. | மோகன்ராஜ் மகேஸ்வரன் | வைசமயம் | 3ம் இடம் |

## ஆண்டு-2

| | | | |
|---|---|---|---|
| 6. | தீபிகா குணராசா | தமிழ் | 1ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 1ம் இட்ம் |
| | | சைவசமயம் | 3ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| 7. | ஜலந்தரி கதிரவேற்பிள்ளை | சைவசமயம் | 2ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | தமிழ் எழுத்து | 2ம் இடம் |
| 8. | இளவரசி இளங்கோவன் | கணிதம் | 1ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 3ம் இடம் |
| 9. | வானதி மனோகரன் | தமிழ் | 1ம் இடம் |
| | | தமிழ் எழுத்து | 1ம் இடம் |
| 10. | பிரமிளா இரவீந்திரன் | சைவசமயம் | 1ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 2ம் இடம் |
| 11. | நிலானி இராசமாணிக்கம் | கணிதம் | 2ம் இடம் |
| 12. | மகாலிங்கம் சிந்துஜன் | தமிழ் எழுத்து | 3ம் இடம் |
| | | சைவ சமயம் | 3ம் இடம் |

## ஆண்டு-3

| | | | |
|---|---|---|---|
| 13. | சபேசன் கிரிதரன் | சைவசமயம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 1ம் இடம் |
| | | கணிதம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 1ம் இடம் |
| 14. | இரவீந்திரன் பிரியதர்சன் | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சைவசமயம் | 2ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| 15. | பவித்திரி தேவகுமார் | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | கணிதம் | 2ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 3ம் இடம் |
| | | சைவசமயம் | 2ம் இடம் |
| 16. | வர்ணிகா கந்தையா | சுற்றாடற்கல்வி | 2ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |
| 17. | ரொஷானி யேசுதன் | கிறிஸ்தவ சமயம் | 1ம் இடம் |
| 18. | முனஸ்பரம் றெனோல்ட் | கத்தோலிக்கம் | 1ம் இடம் |
| 19. | பத்மநாதன் ரமேஷ் | தமிழ் | 3ம் இடம் |

## ஆண்டு-4

| | | | |
|---|---|---|---|
| 20. | சர்மிளா தர்மலிங்கம் | சைவசமயம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 1ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 1ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| 21. | ஜெயவதனி ஜெயக்குமார் | கணிதம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சைவசமயம் | 2ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 2ம் இடம் |
| 22. | தியாகலிங்கம் தியாகேசன் | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 2ம் இடம் |
| | | சைவசமயம் | 3ம் இடம் |
| 23. | பரசுராமன் சுதர்சன் | கணிதம் | 2ம் இடம் |
| 24. | கவிதா இராமகிருஸ்ணன் | தமிழ் | 3ம் இடம் |
| 25. | சண்முகராசா காளீஸ்வரன் | விஞ்ஞானம் | 3ம் இடம் |

# ஆண்டு-5

| | | | |
|---|---|---|---|
| 26. | நிதர்சினி குமாரசாமி | சைவசமயம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 1ம் இடம் |
| | | கணிதம் | 1ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 1ம் இடம் |
| 27. | சாமந்தி மகேசன் | தமிழ் | 2ம் இடம் |
| | | கணிதம் | 2ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 2ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 2ம் இடம் |
| | | ஆங்கிலம் | 3ம் இடம் |
| 28. | முஹித்தீன் இம்தாத் அகமட் | இஸ்லாம் | 1ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 3ம் இடம் |
| | | சுற்றாடற்கல்வி | 3ம் இடம் |
| 29. | விக்னேஸ்வரன் அரவிந்தன் | சைவசமயம் | 3ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| 30. | ஸ்டனிஸ் லாஸ் ஜெய்சன் சாமுவல் | கிறிஸ்தவம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 2ம் இடம் |
| 31. | சுபாசினி நடராஜா | சைவசமயம் | 2ம் இடம் |
| 32. | ரஷாக் கலீலுல் ரஹ்மான் | இஸ்லாம் | 2ம் இடம் |

# ஆண்டு-6

| | | | |
|---|---|---|---|
| 33. | இராஜதுரை மயூரன் | சைவசமயம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 1ம் இடம் |
| | | கணிதம் | 1ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 1ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 1ம் இடம் |
| | | சுகாதாரம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | சங்கீதம் | 2ம் இடம் |
| 34. | ஷா சிவசுப்பிரமணியம் | சங்கீதம் | 1ம் இடம் |
| | | சைவசமயம் | 2ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| | | ஆங்கிலம் | 3ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |
| | | சுகாதாரம் | 3ம் இடம் |

*ஆண்டு 6இன் தொடர்ச்சி .........*

| | | | |
|---|---|---|---|
| 35. | நதியா இராஜகோபால் | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சைவசமயம் | 2ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 3ம் இடம் |
| 36. | ஜீவயோகி சிவநந்தராஜா | கணிதம் | 2ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 2ம் இடம் |
| 37. | தீபவதனி தியாகராஜா | சமூகக்கல்வி | 2ம் இடம் |
| | | சங்கீதம் | 3ம் இடம் |
| 38. | ஜனனி இரட்ணகுமார் | தமிழ் | 2ம் இடம் |
| 39. | மேரி டெமியன் அலோசியஸ் | கிறிஸ்தவசமயம் | 1ம் இடம் |
| 40. | சகாய ஜெனிற்றா அருள்ராசா | கிறிஸ்தவசமயம் | 2ம் இடம் |
| 41. | ரசீகா மனோகரன் | சுகாதாரம் | 2ம் இடம் |
| 42. | காளியப்பன் செல்வகுமார் | விஞ்ஞானம் | 3ம் இடம் |

## ஆண்டு-7

| | | | |
|---|---|---|---|
| 43. | நடராஜலிங்கம் பிந்தரன் | கணிதம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 1ம் இடம் |
| | | சுகாதாரம் | 1ம் இடம் |
| | | சைவசமயம் | 2ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 2ம் இடம் |
| 44. | குந்தவி மனோகரன் | தமிழ் | 1ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 1ம் இடம் |
| | | கணிதம் | 2ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 2ம் இடம் |
| | | வாழ்க்கைதிறன் | 2ம் இடம் |
| | | சங்கீதம் | 2ம் இடம் |
| | | சுகாதாரம் | 2ம் இடம் |
| 45. | லாவண்யா இராஜகோபால் | சைவசமயம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 3ம் இடம் |
| | | சுகாதாரம் | 3ம் இடம் |
| 46. | சுவர்ணா விஸ்வநாதன் | வாழ்க்கைதிறன் | 1ம் இடம் |
| | | சைவசமயம் | 3ம் இடம் |
| | | ஆங்கிலம் | 3ம் இடம் |
| | | சங்கீதம் | 3ம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| 47. | அருந்ததி பெருமாள் | கிறிஸ்தவசமயம் | 1ம் இடம் |
| | | வாழ்க்கைதிறன் | 3ம் இடம் |
| 48. | ஜோசப் சாள்ஸ் அன்ரனி | சங்கீதம் | 1ம் இடம் |
| | | கிறிஸ்தவசமயம் | 2ம் இடம் |
| 49. | சகாய ஜென்சி அருள்ராஜா | கிறிஸ்தவசமயம் | 3ம் இடம் |
| 50. | குமாரதாஸ் சுதர்சன் | விஞ்ஞானம் | 3ம் இடம் |

## ஆண்டு-8

| | | | |
|---|---|---|---|
| 51. | கோபாலசண்முகம் தினேசன் | சைவசமயம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 1ம் இடம் |
| | | கணிதம் | 1ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 1ம் இடம் |
| | | வாழ்க்கைத்திறன் | 1ம் இடம் |
| | | சங்கீதம் | 1ம் இடம் |
| | | சுகாதாரம் | 1ம் இடம் |
| 52. | வடிவேல் விஸ்வநாதன் | சைவசமயம் | 2ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | சுகாதாரம் | 2ம் இடம் |
| | | வாழ்க்கைத்திறன் | 3ம் இடம் |
| 53. | செல்வராஜ் சுதாகர் | கணிதம் | 2ம் இடம் |
| 54. | ராஜகோபால் சிவரஞ்சன் | சைவசமயம் | 3ம் இடம் |
| 55. | தவராஜா சிவரூபன் | தமிழ் | 3ம் இடம் |
| 56. | சறோஜினி ஆறுமுகம் | சங்கீதம் | 2ம் இடம் |
| 57. | சோபனா இராமச்சந்திரன் | சுகாதாரம் | 3ம் இடம் |
| 58. | லோகேஸ்வரன் சிவகரிஸ்சன் | வாழ்க்கைத்திறன் | 2ம் இடம் |

## ஆண்டு-9

| | | | |
|---|---|---|---|
| 59. | கதிரவேற்பிள்ளை மோகனதாஸ் | கணிதம் | 1ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | வர்த்தகம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 2ம் இடம் |
| | | சைவசமயம் | 3ம் இடம் |
| | | சங்கீதம் | 3ம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| 60. | சுப்ரமணியம் ராஜீவ்குமார் | சங்கீதம் | 1ம் இடம் |
| | | சைவசமயம் | 2ம் இடம் |
| | | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | தமிழ் | [illegible]ம் இடம் |
| | | வர்த்தகம் | [illegible]ம் இடம் |
| 61. | சி[illegible]தன் சிவகஜன் | கணிதம் | 2ம் இடம் |
| | | சங்கீதம் | 2ம் இடம் |
| | | வர்த்தகம் | 2ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 3ம் இடம் |
| 62. | சின்னராஜா நிரூஜன் | சைவசமயம் | 1ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 1ம் இடம் |
| 63. | பாத்திமா அஸ்மியா முஹித்தீன் | தமிழ் | 1ம் இடம் |
| | | சித்திரம் | 1ம் இடம் |
| 64. | தர்சினி சுப்பையா | மனையியல் | 1ம் இடம் |
| 65. | ராஜவேலு ரமேஸ்குமார் | சித்திரம் | 2ம் இடம் |
| 66. | திருச்செல்வி கந்தசாமி | சித்திரம் | 3ம் இடம் |
| | | மனையியல் | 3ம் இடம் |
| 67. | சுபாசினி நாகராஜா | மனையியல் | 2ம் இடம் |
| 68. | பழநிநாதன் பகீரதன் | ஆங்கிலம் | 3ம் இடம் |
| 69. | நிஷாந்தா சிவசுப்பிரமணியம் | வர்த்தகம் | 3ம் இடம் |

## ஆண்டு-10

| | | | |
|---|---|---|---|
| 70. | கோசலா கதிரவேற்பிள்ளை | சைவசமயம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 1ம் இடம் |
| | | கணிதம் | 1ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 1ம் இடம் |
| | | சங்கீதம் | 1ம் இடம் |
| | | வர்த்தகம் | 1ம் இடம் |
| 71. | மேரி டயானா ஜோசப் | கிறிஸ்தவசமயம் | 1ம் இடம் |
| | | மனையியல் | 1ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 2ம் இடம் |
| | | சங்கீதம் | 2ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |

*ஆண்டு 10 இன் தொடர்ச்சி .........*

| | | | |
|---|---|---|---|
| 72. | அனுஷா ஜீவனி பாலகிருஷ்ணன் | சித்திரம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | வர்த்தகம் | 3ம் இடம் |
| | | சைவசமயம் | 2ம் இடம் |
| 73. | சண்முககோகிலா பெரியசாமி | சித்திரம் | 2ம் இடம் |
| | | வர்த்தகம் | 2ம் இடம் |
| 74. | குருபாலன் புண்ணியமூர்த்தி | ஆங்கிலம் | 3ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 3ம் இடம் |
| 75. | கணேஷ் ஜெரோன் பிரசாந்த் | கிறிஸ்தவசமயம் | 2ம் இடம் |
| 76. | லக்ஷ்மிபிரியா காளிமுத்து | சித்திரம் | 3ம் இடம் |
| 77. | சித்திரா நாகேந்திரன் | சங்கீதம் | 3ம் இடம் |
| 78. | கோமளா சிவராஜா | மனையியல் | 2ம் இடம் |
| 79. | குப்புசாமி விஜயகுமார் | சைவசமயம் | 3ம் இடம் |

## ஆண்டு-11

| | | | |
|---|---|---|---|
| 80. | துளசிதா மகேந்திரகுமார் | தமிழ் | 1ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 1ம் இடம் |
| | | கணிதம் | 2ம் இடம் |
| | | விஞ்ஞானம் | 2ம் இடம் |
| | | சங்கீதம் | 2ம் இடம் |
| | | மனையியல் | 3ம் இடம் |
| 81. | பாலகிருஸ்ணன் ரவிராஜ் | விஞ்ஞானம் | 1ம் இடம் |
| | | சித்திரம் | 1ம் இடம் |
| | | வர்த்தகம் | 1ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 2ம் இடம் |
| 82. | நிரோசினி நிக்கலஸ் | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | கத்தோலிக்கசமயம் | 2ம் இடம் |
| | | சித்திரம் | 2ம் இடம் |
| | | மனையியல் | 2ம் இடம் |
| 83. | மீரா சிவராசா | மனையியல் | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | சைவசமயம் | 3ம் இடம் |
| 84. | பிரபா பிரியதர்சினி சண்முகநாதன் | சைவசமயம் | 1ம் இடம் |
| | | வர்த்தகம் | 3ம் இடம் |
| | | சங்கீதம் | 3ம் இடம் |

*ஆண்டு 11 ஆம் தொடர்ச்சி .........*

| | | | |
|---|---|---|---|
| 85. | ஸ்ரீப்பிரியா சிறீரங்கன் | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | சமூகக்கல்வி | 3ம் இடம் |
| 86. | சசிகலா சுப்பையா | தமிழ் | 2ம் இடம் |
| | | வர்த்தகம் | 2ம் இடம் |
| 87. | பொன்குமார் மகிந்தராஜா | கணிதம் | 1ம் இடம் |
| 88. | முருகையா கிருஷ்ணகுமார் | சித்திரம் | 1ம் இடம் |
| 89. | ஜோர்ஜ் தேவகுமார் | கத்தோலிக்கசமயம் | 1ம் இடம் |
| 90. | ஜெயசீலன் நிர்மலன் | கிறிஸ்தவசமயம் | 1ம் இடம் |
| 91. | தேவி குருசாமி | சைவசமயம் | 2ம் இடம் |
| 92. | நிலாந்தி செல்வநாதன் | சங்கீதம் | 1ம் இடம் |
| 93. | சிவதேவி முனியாண்டி | ஆங்கிலம் | 3ம் இடம் |

# பதக்கம் பெறுவோர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | 1 | ஆனந்தகுமார் திவாகரன் | ஆண்டு | 2 | குணராசா தீபிகா |
| " | 3 | சபேசன் கிரிதரன் | " | 4 | தர்மலிங்கம் சர்மிளா |
| " | 5 | குமாரசாமி நிதர்சினி | " | 6 | இராஜதுரை மயூரன் |
| " | 7 | நடராஜலிங்கம் பிந்தரன் | " | 8 | கோபால சண்முகம் தினேசன் |
| " | 9 | கதிரவேற்பிள்ளை மோகன்தாஸ் | " | 10 | கதிரவேற்பிள்ளை கோசலா |

ஆண்டு 11 மகேந்திரகுமார் துளசிதா

# English Day - 1998

| | | | |
|---|---|---|---|
| **Dictation** | K. Kosala | Year 10 | 2nd Place |
| **Creative writing** | V. Swarna | Year - 7 | 3rd Place |
| | G.Thineshan | Year - 8 | 3rd Place |
| | K. Kosala | Year - 10 | 1st Place |

## ஆண்டு 5
## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

நிதர்சினி குமாரசமி

சுதர்சினி இரவீந்திரன்

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில்
## சிறந்த பெறுபேறு பெற்ற மாணவி

மீரா சிவராசா

# தமிழ் மொழித்தின விழா 1999
# பரிசு பெற்றோர் விபரம்

## வாசிப்பு பிரிவு 1

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | – | சர்மிளா தர்மலிங்கம் | தரம் – 5 |
| 2ம் இடம் | – | ஸ்ரெலா வில்லியம்ஸ் | தரம் – 4 |
| 3ம் இடம் | – | இரவீந்திரன் பிரியதர்ஷன் | தரம் –3 |

## வாசிப்பு பிரிவு 2

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | – | நதியா இராஜகோபால் | தரம் – 7 |
| 2ம் இடம் | – | தினேஷா சிவசுப்பிரமணியம் | தரம் – 7 |
| 3ம் இடம் | – | துவாரகா தவயோகம் | தரம் – 7 |

## எழுத்தாக்கம் பிரிவு 1

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | – | ஜெயவதனி ஜெயகுமார் | தரம்– 5 |
| 2ம் இடம் | – | வர்ணிகா கந்தையா | தரம் – 4 |
| 3ம் இடம் | – | பவித்திரி தேவகுமார் | தரம் – 4 |

## கட்டுரை ஆக்கம் பிரிவு 2

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | – | துவாரகா தவயோகம் | தரம் – 7 |
| 2ம் இடம் | – | தினேஷா சிவசுப்பிரமணியம் | தரம் – 7 |

## கட்டுரை ஆக்கம் பிரிவு 3

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | – | கோபலசண்முகம் தினேஷன் | தரம் – 9 |
| 2ம் இடம் | – | நடாராஜலிங்கம் பிந்தரன் | தரம் – 8 |
| 3ம் இடம் | – | நிஷாந்தினி நடேசன் | தரம் – 9 |

## கட்டுரை ஆக்கம் பிரிவு 4

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | கோசலா கதிரவேற்பிள்ளை | தரம் –11 |
| 2ம் இடம் | குருபாலன் புண்ணியமூர்த்தி | தரம் – 11 |
| 3ம் இடம் | டயானா ஜோசப் | தரம் – 11 |

## கவிதை ஆக்கம்

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | அனுஷாஜீவனி பாலகிருஷ்ணன் | தரம் – 11 |

## சிறுகதை ஆக்கம்

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | பெருமாள் பிரேமசக்தி | தரம் – 11 |

## பேச்சு பிரிவு 3

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சூர்யா ஞானச்சந்திரன் | தரம் – 8 |

## பாவோதல் பிரிவு 1

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | இராமகிருஷ்ணன் கவிதா | தரம் – 6 |

## தனி இசை பிரிவு 3

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | யோகேஸ்வரி கங்காதுரை | தரம் – 9 |

# நன்றியுரை

என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் – உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

***நன்றி மறப்பது நன்றன்று***

- இவ்விழா இனிது நிறைவேறத் திருவருள் பாலித்த எமது மயூரபதி அம்மனுக்கும்;
- பல்வேறு கடமைகளுக்கு மத்தியிலும் எமது அழைப்பை ஏற்றுப் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்த பேராசிரியர் திரு.சோ. சந்திர சேகரன் அவர்களுக்கும்;
- மாணவர்களுக்குரிய பரிசுப் பொருட்களையும், ~~மண்டப வசதியினையும்~~ பெரு மனத்தோடு உவந்தளித்துக் ~~கௌரவ அதிதியாக வருகை தந்து விழாவினைச் சிறப்பித்த~~ திரு பொன். வல்லிபுரம் J.P அவர்களுக்கும்;
- எம் மாணவ மணிகளுக்கு ஆசி வழங்கிச் சிறப்பித்த சுவாமிகளுக்கும்; அருட் தந்தை திரு நேமன் ஜெயச் சந்திரன் அவர்களுக்கும்;
- ஆசிச் செய்திகள் வழங்கிய மேல் மாகாண முதலமைச்சர் கௌரவ சுசில் பிரேம ஜயந்த அவர்களுக்கும், கல்வி அதிகாரிகள் மற்றும் அனைவருக்கும்;
- சிறப்புக் கட்டுரைகள் தந்துதவிய பேராசிரியர் சோ.சந்திரசேகரன், செயற்திட்ட அதிகாரி திரு. தை. தனராஜ், கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் ஆலோசகர் S.H.M ஜெமீல் அவர்கட்கும் எமது மனம்கனிந்த நன்றிகள்.
- வருடந்தோறும் எமது மலர் வெளியீட்டுக்குப் பண உதவி வழங்கிவரும் Ranjanas, Mascons நிறுவனத்தினருக்கும், இலங்கை வங்கியினருக்கும்; மலரினையும் சான்றிதழ்களையும் அழைப்பிதழ்களையும் அழகுற அச்சிட்டு உதவிய RST Enterprises உரிமையாளர் திரு.வி.சடகோபன் அவர்களுக்கும், திரு. இ.யோகதாசன் அவர்களுக்கும்;
- எமது மாணவர்க்கு நாடகக்கலையை ஆரம்பித்துப் பயிற்றுவித்துவரும் திருமறைக் கலாமன்றத்தினருக்கும்;
- 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதற்கிணங்க பயன் கருதாது பணி புரிந்த ஆசிரியப் பெருமக்களுக்கும்;
- விளம்பரங்கள் தந்து ஊக்குவித்த வர்த்தகப் பெருமக்களுக்கும்;
- எமது பணிகள் வெற்றி பெற எம்முடன் சேர்ந்து அயராது உழைக்கும் அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், பெற்றோர்க்கும்;
- பரிசளிப்பு விழாவும் பவளவிழாவுமாகிய இவ்விழா சிறப்புற நடைபெறத்தம் பங்கினை மகிழ்வுடன் அளித்த விழாக் குழுவினருக்கும்;
- பயன் கருதாது கடமைபுரிந்த மண்டப ஊழியர்கள் அனைவருக்கும்;
- இவ் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த விருந்தினர்க்கும்;
- மற்றும் மறை கரங்களாக நின்று எமக்குதவிய அனைவர்க்கும்;

எமது உளங்கனிந்த நன்றிகள் பலப் பல.
*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.*

With Best Compliments

From

# Duro Pipe Industries Ltd.,

**K. Doraisamy J.P**
*Managing Director*

307, George R. De. Silva Mawatha,
Second Floor,
Colombo 13.

Phone : 440759, 440760, 432453, 335636.
Fax : 941-437646